THAYAGAM

17 . 12 . 93

உண்மை:5 தேடல்:24

75¢

# தாயகம்

# அடுத்த தாக்குதலுக்கு இந்திய உதவி நாடப்படும்

## கொழும்பில் அமைச்சர் தகவல்

## மாத்தயாவுக்கும் பிரபாகரன் "பொட்டு" வைப்பாரா?

கிட்டு வருவது பற்றி இந்தியாவுக்கு தகவல் கொடுத்திருந்தோம், இந்தியா நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டது என்று பகிரங்கமாக பாலசிங்கம் அறிக்கை விட்டிருந்தாரே! ஏன் பாலசிங்கம் மீது சதிக்குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை? இப்போது தானா மாத்தயா தான் இதற்கு பொறுப்பு என்று தெரிய வந்திருக்கிறது?

## அனுரா உயர் கல்வி அமைச்சரானார்

## புதிய தளபதி நியமனமானார்

## தொண்டமானை சமரசப்படுத்த முயற்சி

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

**நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்**

Second class mail Registration No:8435

# அடுத்த தாக்குதலுக்கு இந்திய உதவி நாடப்படும்

## கொழும்பில் அமைச்சர் தகவல்

வருகின்ற வருடத் தொடக்கத்தில் பாரிய தாக்குதல் ஒன்றை இராணுவம் நடத்தும் என்றும் அதற்கு இந்தியாவின் உதவி பெறப்படும் என்றும் அமைச்சர் ஒருவர் கொழும்பில் கருத்து வெளியிட்டுள்ளார். சமீப காலங்களில் இந்தியாவின் ஆதரவு பெறப்பட்டே புலிகளுக்கு எதிரான யுத்தம் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்து தென்பகுதியில் பரவலாக அடிபடத் தொடங்கியிருக்கிறது. இராணுவ உயர்மட்டங்களிலும் இந்தியாவின் உதவியின்றி புலிகளை அழிக்க முடியாது என்ற கருத்து நிலவி வருகிறது. எதிர்க்கட்சிகளும் தற்போதைய சூழ்நிலையில் இந்திய உதவியை இந்திய ஆக்கிரமிப்பு என்று முத்திரை குத்தும் நிலையிலும் இல்லை. சிறிமாவோ கூட இந்தியப்படைகளை இலங்கை அனுப்பியிருக்கக் கூடாது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

பிரேமதாசாவின் தனிப்பட்ட இந்திய விரோதம் காரணமான பிளவு தற்போது பிரேமதாசா இல்லாததால் சுமுகமடையக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. இதனால் மீண்டும் அமைதிப்படை என்ற ரீதியில் இந்தியப்படைகள் வராவிட்டாலும் இராணுவ உதவிகளை வழங்கலாம் என்று கூறப்படுகிறது.

# தொண்டமானைச் சமரசப்படுத்த முயற்சி

தொண்டமானைச் சமரசப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது. மத்திய மாகாண சபையில் ஐ.தே.க அரசு ஆட்சியில் இருப்பதால் அதைக் கவிழ்க்க தொண்டமானின் உதவியை எதிர்க்கட்சிகள் நாடி வருகின்றன. தற்போதைய மாகாணசபையில் தொழிலாளர் காங்கிரசிற்கு கல்வி அமைச்சர் பதவி கொடுப்பதாக இருந்தது. பின்னர் மூன்று இனத்தவர்களுக்கும் என்று மூன்று கல்வி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.. இதை காங்கிரஸ் ஆட்சேபித்திருந்தது. தற்போது இந்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு காங்கிரசைச் சேர்ந்தவரே கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அத்துடன் ஜேர்மன் உதவியுடன் காங்கிரஸ் ஹட்டனில் நிறுவ முயன்ற கல்லூரி ஒன்றுக்கு அரசு முன்னர் அனுமதி கொடுக்கவில்லை. தற்போது அதற்கான அனுமதியும்

2ம் பக்கம் பார்க்க..




# புதிய தளபதி நியமனம்

புதிய இராணுவத் தளபதியாக ஜெரி டிசில்வா ஜனாதிபதி விஜேதுங்கவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் தை மாதம் முதலாம் திகதி முதல் பதவியேற்கிறார். தற்போதுள்ள எண்பதாயிரம் இராணுவத்தினருக்கு இவர் தளபதியாக செயற்படுவார்.

முன்பு கிழக்குப் பகுதியில் பொறுப்பாக இருந்த இவர் கொப்பேகடுவ மரணத்தின் பின்னர் கொழும்பில் பிரதம அலுவலராக கடமையாற்றியிருந்தார். பூனகரித் தோல்வியின் பின்னர் இவரே வடக்கு பகுதி முழுவதிலும் யுத்தத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

முன்னைய தளபதியான வைத்தியரத்தின 32 வருட இராணுவ சேவையின் பின்னர் 'தோல்வியுறும் இராணுவத்திற்கு தலைமை தாங்க நான் தயாரில்லை' என்று கூறியது பெரும் பதட்டத்தை தலைமை மட்டங்களில் ஏற்படுத்தியது தெரிந்ததே.

# ஆயுதக் கொள்வனவுக்கு முயற்சி

இராணுவம் புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது. செக்கோஸ்லாவியத் தயாரிப்புகளான டாங்கிகள் இரண்டாம் உலக யுத்தத்தின் போது பாவிக்கப்பட்டவை. இவை தரையிலேயே செயற்படுவதில் உள்ள கஷ்டங்கள்

2ம் பக்கம் பார்க்க..

**கடை விற்பனைக்குண்டு**

*Printing & Photo Printing* கடை *Yonge/Bloor* இல் விற்பனைக்குண்டு.

உரிமையாளர் நாட்டை விடுச் செல்கிறார்

*Jan, feb, March Rent Free. Must Sell*

*Call 926 1244/926 8839*

# உயர்கல்வி அமைச்சராக அனுரா

அனுரா விஜேதுங்கவின் அமைச்சரவையில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிருர். கடந்த வெள்ளிக்கிழமை இவர் சத்தியப்பிரமாணம் செய்தார். உயர்கல்வி அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டிருக்கிருர். 44 வயதான அனுரா கடந்த அக்டோபர் மாதம் சுதந்திரக்கட்சியிலிருந்துவிலகி ஐ.தே.கட்சியில் சேர்ந்திருந்தார்.

இருப்பினும் இவருக்கு உடனடியாக அமைச்சர் பதவி கொடுப்பது குறித்து ஐ.தே. கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு உள்ளது. முன்பு காமினியை கட்சியில் சேர்ப்பதற்கு பல தடைகள் இருப்பதாகக் கூறி இழுத்தடிக்கப்பட்டது. ஆனுல் அனுரா சேர்வதற்காக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது பதவியைக் கூட ராஜிஞமா செய்திருந்தார்.

அனுராவை கட்சியில் சேர்ப்பதன் மூலம் சுதந்திரக்கட்சிக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்துவதன் மூலம் அடுத்த ஜனுதிபதி தேர்தலில் தான் வெல்வதற்கான சாத்தியங்களை அதிகரிக்கும்முயற்சியில் ஜனுதிபதி ஈடுபட்டிருக்கிருர் என்று கூறப்படுகிறது.

# இராணுவத் தலைமைப்பீடத்திற்குள் போட்டிகள்

இராணுவத் தலைமைப்பீடத்தில் ஏற்பட்டுள்ள மோதல்கள் தீரும்வரைக்கும் புதிய தாக்குதல்கள் நடைபெருது என்று கருதப்படுகிறது. முன்பு கொப்பேகடுவ காலம் முதலே தலைமைப்பீடத்திற்குள் கடும்கருத்து வேறுபாடுகள் இருந்திருந்தன. இந்த வேறுபாட்டை தனக்கு சாதகமாக பிரேமதாசா பாவித்து வந்திருந்தார். அடிக்கடி கூட்டுத் தலைமையகத்திற்கும் இராணுவத் தலைமைக்கும் இடையில் அதிகார மாற்றங்களை கொண்டு வந்திருந்தார்.

இந்த தலைமைப்பீட போட்டிகளால் தான் தாக்குதல்கள் தோல்வியில் முடிந்ததாகவும் அரசியல் தலைமைப்பீடம் கருதுகிறது.

### தொண்டமான்..

கொடுக்கப்பட்டிருக்கிறது. 27 வருட கால ஐ.தே.கட்சி உறவு முறியக்கூடாது என்று பலர் முயன்று வருகின்றனர். சிறிமா சமீபத்தில் தான் தொண்டமானைச் சந்தித்ததை நியாயப்படுத்தியிருக்கிருர். தான் தொண்டமானுக்கு எந்தவிதமான உறுதிமொழியும் வழங்கவில்லை என்றும் தொண்டமான் விலகினுல் அரசு பலவீனப்படும் என்று நினைப்பவர்களே தன்னைக் குற்றம் சாட்டுகிருர்கள் என்றும் சிறிமாவோ கூறியிருந்தார்.

இதற்குள் செல்லச்சாமி காங்கிரஸ் ஐ.தே.கட்சியுடனை உறவை முறித்துக் கொள்ளாது என்று கூறியிருக்கிருர். சிறிமாவுடன் நடந்த பேச்சுவார்த்தை பற்றிக் கூறிய அவர் முன்பு இடதுசாரிகளுடன் தாம் உறவு வைத்துக் கொண்டதாகவும் தங்களுக்கு கூருமலேயே சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்ட துரோகத்தை மறப்பதற்கில்லை என்றும் கூறியுள்ளார்.

ஆனுல் தொண்டமானே தனது மக்களுக்கு பயன்தராத பதவி தனக்கு தேவையில்லை என்றும் தனது மக்களின் நலனுக்காக தான் யாருடனும் பேசத் தயார் என்றும் தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் கூறியிருக்கிருர்.

### ஆயுதங்கள் வாங்க..

காரணமாக தரையிலும் நீர்ப் பகுதிகளிலும் செல்லக் கூடிய வகையான டாங்கிகளை வாங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

அத்துடன் தற்போதைய ஹெலிகொப்டர்களுக்கு பதிலாக விமானங்களை வாங்கி தாக்குதலில் இறங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் கையில் இராணுவத்தினர்

பூனகரி யுத்தத்தில் புலிகளால் கைது செய்யப்பட்ட இராணுவத்தினரின் நிலைகுறித்து அறிவதில் சர்வதேச மண்ணிப்புச்சபை ஆர்வம் காட்டியுள்ளது. அரசாங்கம்தனது படைவீரர்களில் எழுபது பேரை புலிகள் பிடித்து வைத்திருக்கிருர்கள் என்று கூறி வருகிறது. புலிகளோ தங்களிடம் ஐவர் மட்டுமே உள்ளனர் என்று கூறி வருகின்றனர். ஆயினும் உண்மையில் புலிகளின் கையில் குறைந்தது 250 பேர் எனினும் உள்ளனர் என்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்கள் கொழும்பில் தெரிவித்திருக்கின்றனர். இவர்களை வைத்திருந்து பணயக்கைதிகள் பற்றிய பேச்சுவார்த்தையில் பயன்படுத்துவதற்கு புலிகள் முயற்சிக்கலாம் என்று கருதப்படுகிறது


## வாடகைக்கு

நோர்த் யோக் பகுதியில்
கீல்/ஷெப்பாட் பகுதியில்
நிலமட்டத்துடன் அமைந்த பேஸ்மெண்ட் வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு
398 7296

# இந்திய ஏவுகணைச் சோதனை

இந்தியா தரையிலிருந்து தரைக்குப் பாயும் பிரித்வி ஏவுகணையை வெற்றிகரமாக பரீட்சித்துள்ளது. 250 கிலோ மீற்றர் பாயக்கூடிய இந்த ஏவுகணையால் இலங்கை, நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ் உட்பட பல நாடுகளைத் தாக்க கூடிய வலிமை இந்தியாவுக்கு கிடைத்திருக்கிறது.

அக்னி, பிரித்வி என்ற இருவகை ஏவுகணைகளை இந்தியா இதுவரை வெற்றிகரமாகப் பரீட்சித்திருக்கிறது. இதையும் விட வேறுவகை ஏவுகணைகளையும் இந்தியா வைத்திருக்கிறது. அக்னி மூவாயிரம் கிலோ மீற்றர் பாயக்கூடியது. இது வருகின்ற தை மாத முதல் வாரங்களில் ஒரிசாவில் பரீட்சிக்கப்படும்.

இதற்காக அருகில் உள்ள பதினைந்து கிராமங்களில் உள்ள ஒன்பதாயிரம் மக்கள் பத்து நாட்களுக்கு வெளியேற்றப்படுவார்கள். 1989ல் பரீட்சிக்கப்பட்ட அக்னி மீண்டும் 1992ல் பரீட்சிக்கப்பட்ட போது தோல்வியடைந்தது.

இந்த ஏவுகணைகளால் இந்தியாவின் பலம் கூடும் என்ற அச்சத்தில் அமெரிக்க அரசு இந்த திட்டத்தை கைவிடும்படி இந்தியாவைக் கேட்டிருக்கிறது. ஆயினும் இந்த கோரிக்கையை இந்தியா உதாசீனம் செய்கிறது.

# ஓய்வுபெறுகிறார் தளபதி

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின தனது பதவியை ராஜினாமா செய்யப்போவதாக வந்த செய்திகளை ஊர்ஜிதம் செய்திருக்கிறார். பூனகரித் தாக்குதலில் ஏற்பட்ட தோல்விக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இந்த வருட இறுதியில் இவர் இளைப்பாறியதும் புதிய தளபதியாக வடபகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஜெரி டிசில்வா நியமிக்கப்படுவார்.

ஜனாதிபதி இவரது இளைப்பாறுதலுக்கான விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

# காமினி தொண்டமான் பேச்சுவார்த்தை

காமினியும் தொண்டமானும் பேச்சுவார்த்தைகளை நடத்துவது குறித்து காமினியின் கட்சிக்குள்ளும் எதிர்ப்புகள் தோன்றியிருக்கின்றன. காமினி தன்னிச்சையாக இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அத்துடன் முன்பு மத்திய மாகாணத்தில் தொண்டமானின் செல்வாக்கை உடைப்பதற்காகதான் விஜேதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகக் கூறிய காமினி தற்போது தொண்டமானுடன் பேசுவது குறித்தும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.தே.கட்சியில் சேரும் காமினியின் முயற்சி தோல்வியில் முடிந்ததாலும் தொண்டமானுக்கும் விஜேதுங்கவிற்குமான லடாய் நீடிப்பதாலுமே இருவரும் பேச்சுவார்த்தைகளில் இறங்கியிருக்கின்றனர். மத்திய மாகாணத்தில் காமினியின் கட்சி ஆட்சியைப் பிடிப்பதற்கு தொண்டமான் உதவக் கூடும் என்று கருதப்படுகிறது.

ஐ.தே.கட்சியிலும் தொண்டமானுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு இனவாதப் பின்னணியுள்ளோர் மறுத்து வருகின்றனர். தொண்டமானின் பலம் மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்றும் தொண்டமானை நீக்கினால சிங்கள வாக்காளர்கள் பலர் சுதந்திரக்கட்சியின் ஆதரவை விட்டு ஐ.தே.கட்சிக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் அவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

# கண்ணிவெடிகளுக்கு தடை விதிக்க முயற்சி

சிறு கண்ணிவெடிகளின் விற்பனையை தடை செய்ய வேண்டும என்று அமெரிக்கா கோரிக்கை விடுத்திருக்கிறது. யுத்தங்கள் முடிவடைந்த பின்னர் இந்தக் கண்ணிவெடிகள் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களைக் கொல்வதாக கூறி 44 நாடுகளிடம் இந்தக் கண்ணிவெடிகளைத் தடை செய்யும்படி அமெரிக்கா கோரிக்கை விடுத்திருக்கிறது. 62 நாடுகளில் இந்தக் கண்ணிவெடிகளால் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகள் 340க்கு மேற்பட்ட வகைக் கண்ணிவெடிகளைத் தயாரிக்கின்றன.

கம்போடியாவில் மற்ற ஆயுதங்களை விட இந்தக் கண்ணிகளால் தான் அதிகம் பேர் இறக்கிறார்கள். முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அவயவங்களை இழந்திருக்கிறார்கள்.

கண்ணிகளால் ஒவ்வொரு மாதமும் எண்ணூறு பேர் கொல்லப்படுகிறார்கள், அல்லது அவயவங்களை இழக்கிறார்கள் என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது. கம்போடியாவில் நாற்பது லட்சம் கண்ணிவெடிகள் உள்ளதென்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் பல அமெரிக்காவினால் சிறு குழுக்களுக்கு வழங்கப்பட்டது. ஆப்கானிஸ்தானிலேயே அதிகளவு கண்ணிகள் இருப்பதாக கூறப்படுகிறது. ஆப்கானின் இருபது வீத நிலப்பரப்பில் உள்ள கண்ணிவெடிகளை அகற்ற 4300 வருடங்கள் செல்லும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ரஷ்யா, சீனா, பிரேசில், இத்தாலி போன்றனவே அதிகளவில் இந்தக் கண்ணிகளை தயாரிக்கின்றன. எல்லா ஐரோப்பிய நாடுகளும், இந்தியா, ஜப்பான், சிங்கப்பூர், பாகிஸ்தான் போன்ற நாடுகளும் இவற்றைத் தயாரிக்கின்றன.

# பங்களாதேஷில் பெண் எழுத்தாளர் புயலைக் கிளப்புகிறார்

இஸ்லாம் மதத்திற்கு எதிரான கருத்துக்களை பகிரங்கமாகக் கூறியதற்காக பங்களாதேஷில் பெண் எழுத்தாளர் ஒருவரைக் கொல்வதற்கு மதவாதிகள் முயன்று வருகிறார்கள்.

ஆண்களைப் போன்றே பெண்களும் நான்கு கணவர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் பெண்கள் யாருடனும் பாலுறவு கொள்ள கூடியதாக இருக்க வேண்டும் என்றும் மதம் தான் அடக்குமுறைக்கு காரணமாக இருப்பதால் அதை அழிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவிக்கிறார். தஸ்லிமா நஸ்ரின் எனப்படும் இவரது கருத்துக்கள் மேற்கு நாடுகளிலேயே ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிலை இருக்கக் கூடும். ஆனால் முஸ்லிம் நாடான பங்களாதேஷில் இது பெரும் புயலைக் கிளப்பியிருக்கிறது. பெண்களுக்கு சமத்துவம் வேண்டும் இவரது கருத்துக்கள் இஸ்லாமிய மதவாதிகளுக்கு ஆத்திரத்தை கொடுத்திருக்கிறது. அவர் மதத்தை நிந்திப்பதால் அவருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஒரு அடிப்படைவாதக் குழு இவரது தலைக்கு ஆயிரம் டொலர்கள் பரிசுத்தொகை அறிவித்திருக்கிறது. பங்களாதேஷ் அரசு இவரது பாஸ்போட்டைப் பறித்துள்ளதுடன் அவரது சமீபத்திய நாவலைத் தடை செய்துள்ளது.

டாக்காவில் இவரைக் கொல்ல வேண்டும் என்று கோரி ஐயாயிரம் பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவரது கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. மிகுந்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் தனது அறையில் வாழுகிறார். மருத்துவரான இவர் கவிஞரும், நாவலாசியருமாவர். பகிரங்கமாகச் சொல்லப் பயப்படும் கருத்துக்களை இவர் கூறுவதால் தான் இவ்வளவு பிரச்சனையே. பங்களாதேஷில் பெண்கள் உணவு அருந்தும் மேசையில் அமர அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் மிஞ்சும் உணவுகளையே அவர்கள் உண்ண முடியும்.

நஸ்ரின் தனது எழுத்துக்களில் பாலுறுப்புகள் பற்றியும் ஆண்களின் அடக்குமுறை பற்றியும் மத அடக்குமுறைகள் பற்றியும் எழுதுகிறார்கள். தனது குடும்பத்தில் ஏற்பட்ட அடக்குமுறை காரணமாகவே தான் கடவுள் நம்பிக்கை தனக்கு அற்றுப் போனதாக கூறுகிறார்.

வெட்கம் என்ற பெயரில் எழுதிய நாவல் பெரும் புகழ் பெற்றது. பாபர் மசூதி தகர்க்கப்பட்ட போது பங்களாதேஷில் இந்துக்களை முஸ்லிம்கள் தாக்கியது பற்றி அதில் குறிப்பிடப்படுகிறது. இந்து முஸ்லிம் உறவுகளை சீர்குலைப்பதாகக் கூறி இந்த நாவல் தடை செய்யப்பட்டது. பங்களாதேஷில் மட்டும் இந்த நாவல் அறுபதாயிரம் பிரதிகள் விற்றன. அருகில் உள்ள மேற்கு வங்காளத்தில் இந்த நாவல் பெருவெற்றி பெற்றதுடன் இவரது பத்திரிகைக் கட்டுரைகள் அடங்கிய புத்தகமும் அதிகம் விற்பனையாகிறது. இவர் இதுவரை ஆறு நாவல்கள், ஆறு கவிதைத் தொகுப்புகள், மூன்று கட்டுரைத் தொகுப்புகள் எழுதியுள்ளார்.

நாட்கள் போகும் போது என்ற சஞ்சிகையில் இவரது கட்டுரைகள் பிரசுரமாகின்றன. ஷாபிக் ரெஹ்மான் என்ற இந்த சஞ்சிகை ஆசிரியர் இவரை பங்களாதேஷின் எலிசபெத் டெய்லர் என்கிறார். இவருக்கு மூன்று கணவன்மார் உள்ளனர். முதல் கணவர் இறக்க இரண்டாவது கணவரை விவாகரத்துச் செய்து மூன்றாவது கணவருடன் இப்போது வாழ்வதில்லை. இவரது எழுத்துக்களை பலர் வாசிக்கிறார்கள் என்கிறார் .

பெண் அமைப்பு, சர்வதேச மன்னிப்புச்சபை இவருக்கு சார்பாக குரல் கொடுக்கின்றன.

பங்களாதேஷில் தொழிலாளர்களில் ஏழு வீதமானவர்களே பெண்கள். அத்துடன் இவர்களில் 87 வீதத்தினர் படிப்பறிவற்றவர்கள். இவர்களில் முக்கால் பங்கினர் பதினைந்து வயதுக்குள்ளேயே திருமணம் செய்கின்றனர். இதில் 21 வீதத்தினர் அந்த வயதில் குழந்தைகளைக் கொண்டிருக்கின்றனர்.

இவரது நாவல் இந்து தீவிரவாதிகளால் முஸ்லிம்களின் நடவடிக்கைகள் பற்றி எடுத்துக் காட்டப் பயன்படுகிறது. ஆனால் இவர் அதை வெறுக்கிறார்.

# காஷ்மீர் தலைவர் நாடுகடத்தப்படுவார்?

பெல்ஜியத்தில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அமானுல்லா கானை இந்தியாவுக்கு நாடு கடத்துவதா என்பது பற்றி நீதிமன்றம் தீர்மானிக்கும். இந்த தீர்மானம் பின்னர் நீதியமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தியா இவர் பல கொலைகளுக்கு காரணமானவர் என்று கூறி சர்வதேச வாரண்ட் ஒன்றை பிறப்பித்திருந்தது. இதன் காரணமாக இவர் பெல்ஜியத்தில் கைது செய்யப்பட்டார். இவரை நாடு கடத்தும்படி இந்தியா கோரி வருகிறது.

பாகிஸ்தானில் வைத்து இவருக்கு விசா கொடுத்த காரணத்துக்காக பெல்ஜியத் தூதுவரை பெல்ஜியம் திருப்பி அழைத்திருந்தது.

# மாத்தயாவுக்கும் பிரபாகரன் “பொட்டு” வைப்பாரா?

எழிலோன்

**புலிகளின் தலைமை எப்போதுமே தனக்கு ஆபத்தாக இருப்பவர்கள் என்று கருதியவர்களை திட்டமிட்டே அழித்து வந்திருக்கிறது. கிட்டுவைக் கொண்டு சிறி சபாரத்தினத்தை, மாத்தயாவைக் கொண்டு கிட்டுவை, பொட்டம்மானைக் கொண்டு மாத்தயாவை.. அடுத்த மாவீரர் தினத்திற்கு முன்னர் பொட்டம்மான் மீது பால்ராஜ் விசாரணை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.**

**இந்தியச்சதிக்கு மாத்தயா பலியாகி விட்டாரா? அல்லது பொட்டம்மானின் சதிக்கு தலைவர் பலியாகி விட்டாரா? என்பது பொட்டம்மான் பற்றிய விசாரணைகளில் தெரிய வரலாம்.**

மாத்தயா பற்றிய ஊகங்கள் பல தற்போது முடிவுக்கு வந்திருக்கின்றன. மாத்தயா முன்னைய நிலையில் இயக்கத்தில் இல்லை என்பதும் யாழ் வைத்தியசாலையில் நடந்த குண்டுவீச்சுச் சம்பவம், கோப்பாயில் பொட்டம்மான் சென்ற ஜீப்புக்கு குண்டுவீசிய சம்பவம் என்றும் பல சம்பவங்கள் தாயகத்தில் முன்பே வெளிவந்திருந்தன. தற்போது மாத்தயா விவகாரம் பகிரங்க ரகசியம் என்ற நிலைக்கு வந்திருக்கிறது.

மாத்தயா பற்றி இப்போது தமிழீழ நீதிமன்றத்தில் விசாரணை நடப்பதால் அது குறித்துக் கருத்துக் கூறுவது தவறு என்று ‘இங்கே சிலர்’ கூறக்கூடும். அமிர்தலிங்கம் வழக்கில் ட்ரயல் அட் பார் என்று அந்த நீதிமன்றத்துக்கு இந்த வழக்கை விசாரிக்கத் தகுதியில்லை என்று வாதிட்டவர்கள் ஜி.ஜியும் தந்தை செல்வாவும் திருச்செல்வமும். சரி, அந்த நீதிமன்றத்தை ஒரு பேச்சுக்கு அங்கீகரித்துக் கொண்டாலும், மாத்தயா செய்த குற்றங்கள் சிவில் குற்றங்கள் அல்ல, அவை இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற குற்றங்களே! எனவே இது குறித்துக் கருத்துக் கூறுதில் எந்தத் தவறும் இல்லை. அதையும் விட ரொறன்ரோ தமிழ் ஈழத்தின் சட்டவரம்புக்கு உட்படாத பிரதேசம் என்பது கூட ‘சில அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர்களுக்கு’ தெரியவில்லை.

வழக்கு ஒன்று விசாரணையில் இருக்கும் போது அது குறித்துக் கருத்துச் சொல்வது அந்த வழக்கில் ஜூரர்களினதும் நீதிபதியினதும் முடிவு எடுக்கும் திறனைப் பாதிக்கும் என்பதாலேயே முக்கியமாக இதற்கு தடை விதிக்கப்படுகிறது. கனடாவிலும் இரு பெண் பிள்ளைகளைக் கொன்ற வழக்கில் விபரங்களை வெளியிட கனடியப் பத்திரிகைகளுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் அமெரிக்க தொடர்பு சாதனங்கள் அவற்றை வெளியிட்டது இங்கு பலருக்குத் தெரிந்திருக்கலாம். காரணம், இந்த வழக்கின் விபரங்கள் வெளிவருவது விசாரணையைப் பாதிக்கும் என்பதால்.

ஆனால் மாத்தயா விவகாரம் இவ்வாறானதல்ல, ஜூரர்கள் என்று யாரும் இல்லை, நீதிபதிகள் புலிகளின் இயக்கத்தவர்கள் தான், பிரபாகரன் உருவாக்கிய சட்டத்தின் அடிப்படையில் தான் நீதிமன்றம் செயற்படுகிறது என்ற நிலையில் நியாயமான ஒரு வழக்கு நடைபெற்று மாத்தயாவுக்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்ப்பது வடிகட்டிய முட்டாள்தனம். தீர்ப்புகளைத் தீர்மானித்தபின்னர் வழக்குகளை விசாரிப்பது மக்களை ஏமாற்றுவதற்குப் பயன்படுமே தவிர, வேறெதற்கும் அல்ல. விசயம் தெரிந்ததாக காட்டுவதற்கு இவ்வாறாக பூச்சாண்டிகளைக் காட்டுபவர்களை நாம் என்ன செய்ய முடியும்? இந்தப் பூச்சாண்டி எல்லாம் மாத்தயா பற்றிய வதந்திகளை முதலில் வெளிவிட்டு, மக்களுக்கு அவர் மீது அதிருப்தி ஏற்படுத்துகின்ற புலிகளின் தந்திரத்தின் ஒரு வடிவம். . இவர்களெல்லாம் அதன் கருவிகளே.

மாத்தயா மீது இன்று உளவுச் சதி சுமத்தப்பட்டிருக்கிறது. மாத்தயா செய்த குற்றங்களுக்கு தெய்வம் நின்றறுக்கிறது. அரசன் அன்றறுக்க விசாரணை நடத்துகிறான். மாத்தயா தான் பதவியிலிருந்த காலங்களில் புலிகளுக்கு எதிரானவர்கள் என்று கருதப்பட்டவர்களை சிறையில் தள்ளி, பார்க்க முயலும் உறவினர்களை இழுத்தடித்து, அவர்கள் பற்றி வதந்திகளைப் பரப்பி, (அரசுக்கும் இந்தியாவுக்கும் உளவு சொன்னார் என்று) பின்னர் செல்பவர்களிடம் அவர்களின் உடைகளையும் பொருட்களையும கொடுத்து விடுகின்ற செயற்பாடுகளைச் செய்தவர். இன்று அதே வகையான பழிவாங்கலுக்கு ஆளாகியிருக்கிறார். மாத்தயாவை சிறுவன் ஒருவன் சேட்டில் பிடித்து தூஷணத்தால் பேசினானும். நிலைமை அப்படி. வாள் எடுத்தவன் வாளால் மடிகிறான்!

மாத்தயா அரசியல் பிரிவுக்கு தலைவராக நியமிக்கப்பட்டு பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியவர். இறுதியில் கட்சி கலைக்கப்பட்டு மாத்தயா செல்வாக்கிழந்தார். ஒதுக்கப்பட்டு

**கிட்டு வருவது பற்றி இந்தியாவுக்கு தகவல் கொடுத்திருந்தோம், இந்தியா நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டது என்று பகிரங்கமாக பாலசிங்கம் அறிக்கை விட்டிருந்தாரே! ஏன் பாலசிங்கம் மீது சதிக்குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை? இப்போது தானா மாத்தயா தான் இதற்கு பொறுப்பு என்று தெரிய வந்திருக்கிறது?**

இன்று துரோகியாகியிருக்கிறார். ஏன்? பிரதித் தலைவர் என்று தலைவரால் செல்லமாய் அழைக்கப்பட்டு இறுதியில் அப்படி ஒரு பதவியேயிருக்கவில்லை என்று பாலசிங்கம் கூறும் அளவிற்கு போயிருக்கிறது. இந்திய சதிக்கு மாத்தயா உடன்பட்டு தலைமைப்பீடத்தை அழித்து தான் தலைவராகும் எண்ணம் கொண்டார் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

இவ்வாறான சதிக்குற்றச் சாட்டுக்கள் வழமையில் விசாரிக்கப்படும் போது நடவடிக்கைகள் வேகமாக நடைபெறும். அரசைக் கவிழ்க்க இராணுவ தளபதி ஒருவர் புறப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். முதலில் அவரை பதவி நீக்கி அவரை ஒதுக்கி அவருக்கு கால அவகாசம் கொடுப்பதில்லை. உடனடியாக அவரை அடைத்து வைத்த பின்னர் தான் விசாரணைகள். மாத்தயா ஒதுக்கப்பட்டார் என்ற விடயம் வெளிவந்து நீண்டகாலமாகி விட்டது. கட்சி கலைக்கப்பட்டு நீண்ட காலம். இப்போது தான் இந்தியச் சதி அம்பலமாகியிருக்கிறது என்றால். . முன்னர் ஏன் ஒதுக்கப்பட்டார் என்ற கேள்வி எழுகிறது. முன்னரே சதி விடயம் தெரிந்திருந்தால் ஏன் அப்போதே விசாரணை நடக்கவில்லை என்ற மறு கேள்வி எழுகிறது. மாத்தயா கடந்த வருடம் மாவீரர் தினத்தில் கூட வெளியில் தோன்றவில்லை. பால்ராஜ் தான் இயக்கத்தின் சார்பில் அணிவகுப்பை ஏற்றுக் கொண்டவர். கிட்டுவின் மரணத்திலும் பங்கு கொள்ளவில்லை. ஒரு வருடத்திற்கு முன்னர் ஒதுக்கப்பட்ட மாத்தயா மீது இப்போது குற்றப்பத்திரிகை? நம்ப முடிகிறதா?

ஒரு கட்டத்தில் மாத்தயா பிரபாகரனைக் கொன்று விட்டார் என்று வதந்திகள் வெளிவந்தன. இந்திய உளவுப் பிரிவு தான் இவ்வாறான வதந்திகளை கிளப்பி விட்டதாக தகவல். சரி, பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். இந்திய உளவுப் பிரிவு தவறான தகவல்களைத் தருகிறது. இதோ, நான் இங்கே இருக்கிறேன் என்று ஏன் தலைவர் அறிக்கை விடவில்லை? மாறாக தலைவரும் நீண்ட நாட்கள் மறைந்து தானே இருந்தார். புலிகள் கூட தலைவர் இருக்கிறாரா? இல்லையா? என்ற மயக்கத்தில் தானே இருந்தனர். இந்தியாவின் சதியை ஏன் அப்போது அம்பலப்படுத்தவில்லை?

இந்திய உளவுப் படையுடன் புலிகளுக்கு தொடர்பு இருந்தே வந்திருக்கிறது. றோ தவறான தகவலைத் தந்ததால் தான் நாங்கள் வடமராட்சியில் தோற்றோம் என்று பாலசிங்கம் கூறினார். இது இவர்களுக்கு இடையில் இருந்த தொடர்பைக் காட்டுகிறது.

ஆனால் இன்று இன்னொருவர் கொடுத்த தகவல் அடிப்படையில் மாத்தயா மீது விசாரணை நடக்கிறது. இந்தச் சதி சம்பந்தமாக ஏற்கனவே சிலருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அவர்கள் இல்லாத நிலையில் அவர்கள் அளித்த சாட்சியங்களின் படி மாத்தயாவின் மீது விசாரணை நடப்பதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

அதை விட சில நகைச்சுவைத் துணுக்குகளும் இந்த குற்றப்பத்திரிகையில் இல்லாமல் இல்லை. கிட்டுவுக்கு குண்டெறிந்த சம்பவம், பொட்டம்மான் ஜீப்புக்கு குண்டெறிந்த சம்பவம், கிட்டு திரும்புவது பற்றி இந்தியாவுக்கு தகவல் கொடுத்தது, கட்சிக்கிளை உறுப்பினர்களின் ஊழல்களை மறைத்தது என்று பல குற்றச்சாட்டுக்கள்..

கிட்டுவுக்கு குண்டெறிந்தது ஈ.பி.ஆர்.எல்.எப் என்று கூறி அறையொன்றில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தவர்களை அருணா சுட்டுக் கொன்றார். இந்த அருணா பின்னர் மாவீரன் ஆனார். எனவே தவறாக படுகொலை செய்தார் என்று கூறி இறந்ததன் பின்னர் இவருக்கு அளிக்கப்பட்ட மரியாதைகள் ரத்துச் செய்யப்படுமா? கிட்டு விடயத்தில் குற்றம் சாட்டிய விரல்கள் மாத்தயாவை நோக்கியே நின்றது யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வருக்கும் தெரிந்த பரம ரகசியம்.

இதைப்போல, கிட்டு வருவது பற்றி இந்தியாவுக்கு தகவல் கொடுத்திருந்தோம், இந்தியா நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டது என்று பகிரங்கமாக பாலசிங்கம் அறிக்கை விடடிருந்தாரே! ஏன் பாலசிங்கம் மீது சதிக்குற்றச்சாட்டு சுமத்தப் படவில்லை? இப்போது தானா மாத்தயா தான் இதற்கு பொறுப்பு என்று தெரிய வந்திருக்கிறது? அப்போது கூட மாத்தயா ஒதுக்கப்பட்ட நிலையில் தானே இருந்தார்.

மாத்தயா மீது இன்று இரக்கம் ஏற்படுவதற்கு எந்த காரணங்களும் இல்லை. மாத்தயா நிரபராதி என்பதல்ல. மாத்தயா நடத்திய அதே வழியிலேயே மாத்தயாவுக்கும் விசாரணை நடக்கிறது. தான் பதவி இழக்க முன்னர் தாண்டிக்குளத்திற்கு செல்லும் மக்களை இடைமறித்து மைதானம் ஒன்றில் இருத்தி, பகிரங்கமாக பெண்கள் உட்பட சிலரைக் கொண்டு வந்து மரண தண்டனை கொடுத்தவர் மாத்தயா. அவர்கள் பகிரங்கமாக தாங்கள் இயக்கத்தைக் காட்டிக் கொடுத்ததாக சாட்சி சொன்னவர்கள். அவர்களில் இருவர் தாங்கள் சித்திரவதை தாங்காமலே ஒப்புக்கொண்டதாக கூறியதும் சுட்டுத் தள்ளப்பட்டனர். பின்னர் ஒருவரின் தலையை வெட்டி அங்கு நின்ற பெண்ணின் ஆவணங்களைப் பறித்து அவரிடம் கொடுத்து விட்டனர். .. இந்த மிருகத்தனமான செயற்பாடு மாத்தயாவுக்கும் நாளை நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தலைமைப்போட்டி தான் இன்று விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. உளவுப் பிரிவின் நடவடிக்கைகளும் பொட்டம்மானின் முக்கியத்துவமும் மாத்தயாவிற்கு ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்திருக்கலாம். உண்மையில் போட்டி தலைவரின் பதவிக்குரியது அல்ல, தலைவருக்கு அடுத்தது யார் என்பதற்கானது தான். இதனால் தான் பொட்டம்மான் சென்ற ஜீப்புக்கு குண்டெறியப்பட்டது. அதைப் போல பொட்டம்மானின் குழுவினர் யாழ்.வைத்தியசாலையில் வைத்து மாத்தயாவிற்கு குண்டு வைக்க முயன்றனர். இந்தப் போட்டியில் தலைவரின் நம்பிக்கைக்கு பாத்திரமான பொட்டம்மான் வெல்வது தவிர்க்க முடியாததே. தலைவரின் விசாரணைக்கு முதல் பொட்டம்மான் தான் விசாரிக்கிறார் என்றவுடன்

**36ம் பக்கம் பார்க்க..**

# தைப்பொங்கலை முன்னிட்டு

## தை 1முதல் 15வரை

# மாபெரும் மலிவு விற்பனை

# JAFFNA'S

## Jane/Finch Mall
## 633-2412

பாகற்காய்,
கத்தரிக்காய்
99 சதம்/றாத்

பயற்றங்காய்
$1.29/றாத்

முருங்கைக்காய்
$1.99/றாத்

**இலங்கையிலிருந்து**
**தருவிக்கப்பட்ட** Red Ruby
**வறுத்த தரமான**
**மிளகாய்த் தூள்**
**$2.99/450 கிராம்**
*(Reg $3.59/450 g pack)*
**$5.99/ 900 கிராம்**
*(Reg $6.99/900 g pack)*

பருப்பு வகைகள்
மைசூர், உழுந்து, பயறு
$2.99 மட்டுமே
Reg $3.59/ 4Lb pack


**பெட்டியில் அடைக்கப்பட்ட,**
**கையால் இடித்து**
**வறுத்த அரிசிமா**
Red Ruby, Royal Chef Brands
**$1.99/பெட்டி**

**Coconut Milk Powder**
(Large)
$1.99/Box
(Reg $2.99)

**இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட**
**சம்பா அரிசி, புழுங்கல் அரிசி,**
**சிவப்புப் பச்சை அரிசி,**
**வறுத்த அரிசிமா**
*$1.49/1 kg pack (Reg $1.99)*
*$6.99/5 kg pack (Reg $8.99)*

**வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்**
**எமது உள்ளம் கனிந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**

# GOOD BYE BALDNESS



முடி உதிர்பவர்களுக்கு
ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்
Try First
பலர் இச்சிகிச்சை மூலம் பயன்
அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

# Anita's Unisex

**239 Carlton St, West of Parliament**

**Tel:922 0478**

**Ladies' and Men's**

Specializing in Hair CutsPermanents, Tinting and BleachingHair Removal, Permanent Eyelashes Nails Facial Scalp Clinic

**Cure against Hair loss**

Foam, Spiral Perm, Custom Uniperm
Who specialize in hair cutting and long hair

**Perms $30 & up**

**Try One (1) Professional Skin Care Treatment For only $20.00***

*For New Clients Only *By Appointment only



An off centre and full neckline are the main features on this conservative, short precision scissor cut. May be blown on air dried



Prestige- a short cut featuring a perm Easy-to-look after Lamp or air dried

# SIA TRIANTOS

**Income Tax & Accounting Service**

**(416) 469-4906/ 922-0478**

## It's Tax Time!!

We offer a professional, accurate and computerized service by competent tax planners. We help you lower your taxable income using tax plan strategies. **We know how to best handle your changing income tax situation.**

We are goverment authorized **Electronic Filing (EFILE). EFILE** is a fast, accurate and paperless new system which enable us to transmit your tax return inexpensively directly to Revenue Canada. Your Return will be processed by Revenue Canada and You will receive your refund within 3-14 days.

**Income Tax By Phone** ™ Service is available again this year. Simply call and give us all your relevant tax information. Your computerized Income Tax return will be delivered to your door- with an extra copy for yourself.

Our prices are competetive... As low as $19.99
You will be satisfied with our service, price and professionalism.
Call to arrange an appointment at our office or in your home at your convenience.

**It is time to benefit from our personalized tax service. Don't forget. We also offer free pick up and delivery service.**

## சிவதாசனின் அலை



# யாம் பெற்ற இன்பம்....

செவ்வாய் இரவு சீபீசீ. தொலைக் காட்சியில் 5 வது எஸ்டேட் என்ற விவரணச் சித்திரம் ஒளிப்பரப்பாகியது. பார்த்திருக்காதவர்களுக்கு ஒரு மீளோட்டம்


பொஸ்டன் மூவ்மென்ட் என்றொரு மதக்குழுவின் நடவடிக்கைகள் பற்றியது அந்தச் சித்திரம். இருபது மனிதர்களுடன் ஆரம்பித்த இந்தக் குழு தற்போது உலகெங்கனுமாக சுமார் நாற்பத்தைந்தாயிரம் சீடர்களைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாது அதிவேகமாக வளர்ந்தும் வருகிறது. பல்தட்டுச் சந்தைப்படுத்தல் (Multi level marketting) என்ற பிரமிட் முறையினைக் கையாள்வதின் மூலம் குறுகிய கால வளர்ச்சியினை இவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த பிரமிட்டின் உச்சியில் இருப்பவர் பெயர் கிப் மக்கீன் சுமார் நாற்பது வயது மதிக்கக்கூடிய இவர் பிறிதொரு அதிவேக மதக்குழுவிலிருந்து பிரிந்து வந்து இந்த மதக்குழுவை ஏற்படுத்தியவர். இந்த பிரமிட்டின் ஒவ்வொரு அங்கத்தவர்களும் குரு-சீடன் உறவு என்ற பசையினால் ஒட்டப்பட்டிருக்கிறார்கள் உச்சியில் இருக்கும் கிப் மக்கீன் யேசு நாதருக்கு அடுத்த நிலையில் வைத்துக் கணிக்கப்படுகிறார். அவருக்கு அடுத்த தட்டில் இருப்பவர்கள் யேசுநாதருக்கு இரண்டாவது மிக நெருக்கமானவர்கள். இதே அவரோகண முறையில் அடிதட்டுச் சீடர்கள் யேசுநாதருடன் இணைப்புப் பெறுகின்றார்கள். ஒவ்வொருவரும் தத்தம் குருவானவர்களை அப்படியே பின்பற்ற வேண்டும் என்பது விதிமுறை. நடை உடை பாவனை சகல அம்சங்களினதும் இந்த அசல்-நகல் உறவு இருக்கிறது. இதனால் ஒவ்வொரு சீடர்களும் அப்படியே பின்பற்றிக் கொள்ள முடிகிறது.

சீடர்கள் நாடு நகர் கிராமமெங்கும் சென்று மேன்மேலும் சீடர்களைத் திரட்டவேண்டும். சமூக ஒன்றுகூடல் என்று மக்கள் அழைக்கப்பட்டு அங்கு வேதப் பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன. ஒரு நாள் ஒரு சீடர் வீடு என்று இந்த ஒன்றுகூடல்கள் இடம் பெறுகின்றன. பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் விடுதிகள் என்று இந்த சீடர் தேடல் மும்முரப்படுகிறது.

புதிய சீடர் உபதேசங்களின்போது அவர்களின் வாழ்க்கையில் செய்த பாவங்கள் அனைத்தும் எழுதி வாங்கப்படுகிறது. பாவமன்னிப்புக் கொடுக்கப்பட்டு ஞானஸ்னானம் செய்யப்பட்டதும் இவர்களது வாழ்க்கையில் புதிய பக்கம் புறப்பட்டு மீண்டும் மீண்டும் தேவவாக்குகளில் குளிப்பாட்டப்படுகிறார்கள். இதைத் தொடர்ந்து இவர்கள் தத்தம் சீடர்களைத் தேடிப் பெறுவதற்கான பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். குரு சீடர்கள் அனைவரும் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி தங்களது மாத வருமானத்தில் பத்து வீதத்தை தேவாலயப் பணிகளுக்காக வழங்கவேண்டும். இதில் சீடர்களானோர் தங்கள் பிரத்தியேக வாழ்க்கையில் பல விதங்களை அனுஷ்டித்தாக வேண்டும். பிறமனை நாடல், ஓரினக்கலவி. கேளிக்கையின்பங்கள் போன்ற வழக்கற்ற பழக்கங்களை குடும்பத்தினர் கைக்கொள்ளக் கூடாது. குரு-சீடர் குடும்பங்களிடையேயான சமூகவாழ்வு மட்டுமே ஊக்குவிக்கப்படுகிறது. சீடர்கள் குருவினைக் கேள்வி கேட்பது அனுமதிக்கப்படுவதில்லை. யாராவது குருவின் மீது அல்லது ஆலயத்தின் மீதோ அதிருப்தியடைந்து விலக எத்தனித்தால் சீடர் ஆரம்பத்தில் எழுதிக் கொடுத்த பாவங்கள் பகிரங்கப் படுத்தப்படுகிறது. கூடிய வரையில் இவர்கள் மீண்டும் உபதேசம் கொடுக்கப்பட்டு ஆலயச் சமூகத்தினின்றும் விலகவிடாது கவனிக்கப்படுகின்றனர். விலகிக் கொள்ள முனைபவர்கள் யேசுநாதரின் பழி பாவத்துக்கு ஆளாக நேரிடும் என்றும் எயிட்ஸ். புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் பாதிக்கப்படுவார்கள் என்றும் விபத்தினால் மரணமடைவார்கள் என்றும் எச்சரிக்கப்படுகிறார்கள். இதனால் விலக நினைப்பவர்கள்கூட விலகிக்கொள்ள முடியாமல் மன உபாதைக்குள்ளாகி தற்கொலை முயற்சிகளில் ஈடுபட எத்தனிக்கிறார்கள். பெற்றோருக்கு தெரியாமல் சீடராகிய பல இளம்பராயத்தினர் குடும்ப உறவுகளையும் அறுத்துக்கொண்டு படிப்பினையும் தொடராது தேவசேவையுடன் ஒன்றிப் போகிறார்கள்.

அப்படியிருந்தும்கூட பலவகையான தெய்வ நிந்தனைகளையும் மீறி சிலர் துணிச்சலுடன் விலகியிருக்கிறார்கள். இப்படி விலகியவர்கள் பலர் உளவியல் நிபுணர்களிடம் சிகிச்சை பெற்று(de porgramming)

**11ம் பக்கம் பார்க்க..**



# Cine Tonic

## சினி துணுக்கு

### பட்டாபி

அமெரிக்க இயக்குனர் ஒலிவர் ஸ்டோன் பலருக்கு பரிச்சயமானவர். ஜோன் எப். கென்னடியின் கொலைச்சதி பற்றிய JFK, மத்திய அமெரிக்கப்பிரச்சனை பற்றிய சல்வடோர், இசைக்கலைஞர் ஜிம் மொறிசன் பற்றிய The Doors, வியட்னும் பற்றிய Platoon, Born on the Fourth of July என்று பல அரசியல் ரீதியாக சர்ச்சைக்குரிய படங்களை எடுத்தவர். இப்போது மூன்ருவது தடவையாக வியட்னும் பிரச்சனை பற்றிய படமான Heaven And Earth படத்தை இயக்குகிருர். வியட்னும் மீது அவருக்கு இவ்வளவு காதலோ? காரணம் இவர் இரண்டு தடவைகள் வியட்னுமுக்கு சென்றவர். ஒருமுறை ஆசிரியராகவும் மறுமுறை யுத்தம்செய்வதற்காகவும். . யுத்தத்தில் இரண்டு தடவைகள் காயமடைந்தவர்.

லே லி ஹேசிலிப் என்ற வியட்னும் பெண்ணின் உண்மைக் கதை இது. யுத்தத்தால் பாதிப்படைந்த ஒரு புத்த குடும்பத்தில் பிறந்த இவர், 1949ல் பிறந்தவர். இவர் பிறந்த போது இரண்டு ருத்தல் நிறை கொண்டவராக இருந்தாராம். இதனுல் பிரசவம் பார்த்த மாது இவரை இறக்க விடும்படி பெற்ரேருக்கு கூறினுராம். ஒரு கிராமவாசியாக இருந்து பின்னர் கெரில்லாவாக யுத்தம் செய்து, பின்னர் பிச்சைக்காரியாகி, குற்றங்கள் செய்து பின்னர் அமெரிக்க இராணுவ வீரர் ஒருவரை திருமணம் செய்து அமெரிக்கா வந்தார். பின்னர் மீண்டும் 1986ல் தனது நாட்டுக்கு சேவை செய்வதற்காக திரும்பிச் சென்ருர். இவர் எழுதிய இரண்டு நூல்கள் When Heaven and Earth Changed Places, மற்றும் Child of War, Woman of Peace. இவரது கதை தற்போது படமாகிறது. இந்தப் பெண் சன்டியாகோவில் East Meets West என்ற அமைப்பை உருவாக்கி வியட்னுமிய மக்களுக்கு உதவுகிருர். அங்கு இரண்டு மருத்துவ நிலையங்கள் நிறுவியிருக்கிருர். ஒரு நிறுவனத்திற்கான நிதியுதவி செய்தது ஒலிவர் ஸ்டோன்தான்.

'யுத்தம் முடிந்து இருபது வருடங்களுக்குப் பின்னர் ஏன் வியட்னும் பற்றிய படம்?' என்று கேட்டதற்கு 'நாங்கள் தோற்ரேம், ஆனுல் தோல்வியை விட எங்கள் மனம் பெரியதாக இருக்க வேண்டும், எங்களுக்கு பரோபகார சிந்தை இருக்க வேண்டும்' என்கிருர்.

இவரது படத்தின் விளம்பரத்தில் ஒரு வரி உள்ளது 'நீண்ட காலம் நிலைக்கின்ற வெற்றிகள் எல்லாம் உள்ளத்தில் வெற்றி கொள்ளப்பட வேண்டும்'

★ ★ ★

கராட்டிப்படப் பிரியர்களுக்காக... ஜான் கிளாவுட் வான் டாமின் ரசிகர்கள் பலர் உளர். இவரது Hard Target என்ற படத்தை இயக்கியவர் ஜோன் வூ என்ற சீனர். இவர் ஹொங்கொக்கில் கராட்டே படங்களை இயக்குவதில் பெயர் பெற்றவர். அமெரிக்காவில் படம் இயக்குவதைப் பற்றிச் சொல்லும் போது 'அது கனவுகள் நிஜமாவது போன்ற உணர்வு, நான் கற்பனை பண்ணுகின்ற எந்தக் காட்சியையும் அவர்கள் படமாக்குவார்கள்' என்கிருர். இவரது படங்களில் நாயகர்கள் எப்போதும் மற்றவர்களுக்கு உதவுவார்கள். காரணம்? இவரது தந்தை ஒரு கல்விமானும். அவர் நட்பு, மனிதகௌரவம், கடவுள் நம்பிக்கை, சுயநம்பிக்கை போன்றன பற்றி கற்றுக் கொடுத்தாராம். அதன் விளைவு தான் இது

★ ★ ★

ஜுராசிக் பார்க் என்ற படம்... ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த டைனேசார் மிருகங்கள் பற்றியது. . இந்த ஆண்டில


கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
மாஜி 796 2672
Net, Colorful Flower Bouquet, Flower Basket

பெருவெற்றியீட்டிய படம். உலகம் முழுவதும் இதன் வசூல் 70 கோடி டொலர்கள். இதன் இரண்டாவது தொடர்ச்சியும் வரவுள்ளதாக தகவல். இந்தப் படத்தை இயக்கியவர் ஸ்ரீவன் ஸ்பீல்பேர்க். இவர்தான் E.T,Close encounters of the third kind போன்ற பிற உலகப் படங்கள், இந்தியாஜு ஜோன்ஸ் தொடர்கள், Jaw என்ற சுரு பற்றிய படம் போன்ற பல வெற்றிப்படங்களை இயக்கியவர். இவை அனைத்துமே கோடிக்கணக்கில் குவித்தவை.

இவர் எடுத்த கலைப்படங்கள் பெரும் தோல்வியைத் தழுவியிருந்தன. இபபோது Schindler's list என்ற படத்தை இயக்கியிருக்கிறார். இரண்டாம் உலக யுத்தத்தில் யூதர்களை ஹிட்லர் கொன்ற போது போலந்தில் வைத்து தனது தொழிற்சாலையில் ஆயிரம் யூதர்களை வேலைக்கமர்த்தி அவர்களின் உயிர்களைக் காப்பாற்றியவர் தான் ஷிண்ட்லர். அவரது கதை தான் இது. புக்கர் பரிசை 1982ல் பெற்ற தோமஸ் கெனியால்லியின் நாவலை அடிப்படையாகக் கொண்டே இந்தப் படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. போலந்தில் 23 மில்லியன் செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தை 'தனது இது மிகவும் மலிந்த செலவில் அமைந்த படம்' என்கிறார் ஸ்பீல் பேர்க். சிறுவர்களுக்கான படங்களைத் தயாரித்த தான் தனது தாயின் தலைமுறைக்காக எடுத்த படம் இது என்கிறார் அவர்.

★ ★ ★

கனடாவில் இருக்கும் இந்தியப் பெண்மணியான தீபா மேத்தா Sam And Me என்ற படத்தை இயக்கியிருந்தார். இந்தப் படம் கான்ஸ் படவிழாவில் 1991 ல் 'மதிப்புக்குரியது' என்ற பரிசு பெற்றிருந்தது. ஆரம்பத்தில் விவரணப் படங்களும் தொலைக்காட்சிப் படங்களும் எடுத்தவர் இவர். இப்போது ஒஸ்கார் பரிசு பெற்ற எண்பது வயது நடிகையான ஜெசிக்கா ராண்டியை வைத்து கமில்லா என்ற படத்தை இயக்கி வருகிறார்.

★ ★ ★

1974ல் ஆண்டு இங்கிலாந்தில் ஐ. ஆர்.ஏ பல கொலைகளைச் செய்தது. 14 மாத காலத்தில் 19 கொலைகள், 3 கடத்தல்கள், ஒன்பது துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள், 32 குண்டுவெடிப்புகள், மூன்று கோடி டொலர்கள் சொத்து அழிவு என்று நீண்டது.

அக்டோபர் 5, 1974ல் கில்போட் என்ற இடத்தில் நடந்த குண்டுவெடிப்புச்சம்பவத்தில் ஐவர் கொல்லப்பட்டு, ஐம்பது பேர் காயமடைந்தனர். இது சம்பந்தமாக இருபது வயதான ஜெராட் கொன்லோனும் மூன்று நண்பர்களும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அவரது தந்தை உட்பட ஆறு பேர் வூல்விச் என்ற இடத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டனர். பின்னர் 1989ம் ஆண்டு இவர்கள் பதினைந்து வருடங்களின் சுற்றவாளிகள் என்று நிருபணமான பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். இவரது தந்தை சிறையிலே இறந்து விட்டார். இவரது கதை தற்போது படமாகிறது. In the name of the father என்ற இந்தப் படத்தில் டானியல் டே லூயிஸ் நடிக்கிறார்

★ ★ ★

விதேயன் என்றொரு மலையாளப்படம்.. ஒரு எஜமானிடம் அடிமையாக வேலை செய்கின்ற ஒரு வேலைக்காரன் பற்றியது. மம்முட்டி நடிக்க அடூர் கோபாலகிருஷ்ணன் இயக்கியது. மதிலுகள் கூட இரண்டு பேரும் சேர்ந்து கொண்ட படம் ஒன்று.ஆனாலும் இந்தப் படத்தை அறிவு ஜீவி அராஜகம் என்றிருக்கிறார் சுஜாதா குமுதத்தில். ஒரு சில தியேட்டர்களிலேயே உள்ளூரில் காட்டி விட்டு சப்டைட்டில் போட்டு வெளிநாட்டு விழாக்களுக்கு அனுப்புவதைக் குறிப்பிடுகிறார். இதை எக்ஸ்போர்ட் சினிமா என்கிறார்.

## யாம் பெற்ற..

சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பியிருக்கிறார்கள். இருப்பினும் பல்லாயிரக்கணக்கானோர் ஒரு வழிப்பாதையில் வெகுதூரம் சென்றுவிட்டார்கள் என்று விலகிக் கொண்டவர்களும் குடும்பத்தினரும் ஆதங்கப்பட்டுக் கொள்கிறார்கள்.

இவ்வாலயத்தில் அங்கம் வகிக்கும் சீடகோடிகள் தங்களின் புதிய வாழ்க்கை பற்றியும் புதிதாகப் பெற்றுக்கொண்ட அதிநிறை மன அமைதி பற்றியும் பத்திரிகை சாதனங்களுக்கு கடிதங்கள் எழுதுகிறார்கள். விலாசங்கள் பெற்றுக்கொடுப்பது முதல் கடித இயக்கத்தை நிர்வகிப்பது வரை ஆலய நிர்வாகம் கவனித்துக் கொள்கிறது. சீபீசியின் இந்த விவரணச் சித்திரத்தைத் தயாரித்தபோது இக்குழுவின் முன்னாள், இன்னாள் சீடர்கள் பலர் பேட்டி காணப்பட்டார்கள். தலைவர் கிட் பேட்டிக்கு மறுத்துவிட்டார் இதைத் தொடர்ந்து சீபீசீ அலுவலகத்துக்கு பல்லாயிரக்கணக்கான சீடர் கடிதங்கள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. அத்தனையும் பரமசந்தோஷக் கடிதங்கள்.

இத்துடன் எனது மீள் விவரணம் நிறைவுபெறுகிறது. இதுபற்றிய சந்தேகங்கள் எழின் சீபீசீ 5 வது எஸ்டேட் விவரணத் தயாரிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு சித்திர அல்லது எழுத்துப் பிரதியைப் பெற்று சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். இக்கட்டுரை எதையும் அல்லது எவரையும் ஞாபகப்படுத்தினால் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல. பரம சந்தோஷத்தில் களிப்பதும் பரம வேதனையில் திளைப்பதும் அவரவர்கள் பகுத்தறிவுக்கு எட்டியபடி. .......... பெறுக இவ் வையகம்.

# மொழி பற்றி....
# மொழியைப் "பற்றி" சில மொழிகள்

சிவப்பிரகாசம்

மொழி என்பது எண்ணப் பரிமாற்றத்துக்கான ஊடகம் மட்டும்தானா? எழுத்துக்களும் அந்த எழுத்துக்களால் உருவான சொற்களும் அச்சொற்களின் கருத்துக்களும் ஒவ்வொரு சொல்லையும் உச்சரிக்கும் வேறுவேறு விதங்களும்... இப்படியாக பலதும் சேர்ந்த மொழி ஒரு ஊடகம் மட்டுமென எவரும் நினைக்கவில்லை. மொழி ஒரு சக்தி வாய்ந்த கருவியாகத்தான் கருதப்படுகிறது. கருதப்படுவது மட்டுமல்ல. உண்மையும் அதுதான். மொழிக்காக உயிர்த்தியாகங்கள்... மொழிக்காக போராட்டம்... மொழிக்காக பிரிவினைகள். இதெல்லாம் மொழிக்காக அல்ல என்றும் அந்த மொழியைப் பேசும் இனத்துக்காக என்பர் சிலர். மொழியா இனமா முந்தியது என்பதற்கு பதில் தெரியாமல் அதைத் திடமா கூறமுடியாது. அதாவது தமிழ் பேசுவதால் நாம் தமிழரா? அல்லது தமிழராகிய நாம் பேசுவதால் அது தமிழ் மொழியா? ஏதோ அலம்புவது போல இருக்கிறதா...... சற்றுச் சிந்தித்தால் விஷயம் இருப்பதுபோலும் தெரியும். மொழிக்கென்று பிரத்தியேகமாக ஏதும் அதீத சக்தியுண்டா என ஆராய்ந்தால் "அட இப்படியெல்லாம் இருக்கிறதோ!" என ஆச்சரியப்படுவீர்கள், தமிழ் மொழியை மட்டும் இங்கே குறிப்பிடவில்லை. அந்நிய மொழிகள் எல்லாம் தாழ்ந்து விட்டது என் நினைப்பதுவும் அறியாமை. "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் ...." என்று பாரதி கூறும்போதே "அறிந்த மொழிகளிலே" என்று லிமிற் பண்ணி இருக்கிறாரே பார்த்தீர்களா!

கவிதை ஒன்று அதுவும் குறிப்பிட்ட சில "தவறுகளை" வைத்து எழுதப்பட்ட தமிழ்க்கவிதை ஒன்று. அதுபோதும் ஒரு உயிரைக் குடிக்க. இவ்வாறு நான் கூறவில்லை. தமிழ் இலக்கியம் சொல்கிறது. தமிழ் வரலாறு சொல்கிறது. "அறம் பாடுதல்" என தமிழ் இலக்கியத்தில் அதை அழைப்பார்கள். கலம்பகம் (தமிழ் கவிதை நூல் வகை) ஒன்றில் "அறம்" வைத்து வாழ்த்துப் பாடி அவ் அரசனையே தீயில் கருக்கிய கவிஞரை வரலாற்றில் காணலாம். "நல்ல விஷயமாச்சே கண்ணிவெடிக்குப் பதிலாய் பாவிக்கலாம் போலே இருக்கே. அதென்னயா அறக்குற்றம் (ஆனந்தக் குற்றம் எனவும் கூறப்படும்) என்றால் .........." என்ற ஆவல் வந்திருக்குமே. கவித்துவத்துடன் பாடப்பட்டால் மட்டுமே அது பலிக்கும் என்பதை அறிந்ததும் சப்பென்று ஆகிவிடுமே? பழைய தமிழ் வரலாற்றில் இந்த அறக்குற்றம் முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டு இலக்கண நூல்களிலேயே தவிர்க்கப்பட வேண்டிய விஷயங்கள் வலியுறுத்தப் பட்டுள்ளன. மனோசக்தியுடன் இணைந்த கவிதையின் சில ஒலிப்பிறழ்வும் ஒலிவடிவத்துக்கு உள்ள அழுத்தமே தாக்கம் கூடியதாக உள்ளது. ஒலிவடிவம் என்றவுடன் இசையைப்பற்றி கூறுவதாக நினைத்துவிடாதீர்கள். அது வேறு. இதற்கு ஆதரவாக வடமொழியில் மந்திர உச்சாடனத்தை சொல்லலாம். மந்திரங்களை உச்சரிக்கவேண்டிய சுரபேதங்களை அறியவென்றே "சிட்சை" என்றொரு பகுதி உண்டு. அதாவது வெறும் எழுத்தில் உள்ள மந்திரங்கள் தாக்கம் அற்றவை. இவை ஒலியுருவம்பெற்று அந்தண சக்தியுடன் (அந்தணசக்தி என்பது பிராமண குலம் என்ற எடுகோள் சந்தேகத்துக்குரியது) வெளிவரும் போது அம் "மொழிக்கு" தனிச் சிறப்பு ஏற்படுகிறது. வடமொழியில் உள்ள இதே ஒலி அமைப்பை தமிழ் சொற்களில் பிரதியிட முடியாது என்பது சகலரும் ஏற்றுக் கொள்ளகூடியது. தமிழில் பூசை செய்தால் கடவுளுக்கு விளங்காதோ என்ற "தனித்தமிழ்" வாதம் எடுபடக்கூடியது என்றாலும் அதற்கான பொருள் சுரம் ஒலி இணைவு கொண்ட பதங்கள் தமிழில் ஏற்படுத்தப்படாதது குறையே. சமஸ்கிருத சுலோகங்களை அப்படியே தமிழில் எழுதிவிட்டு அப்படியே வாசிக்கும் பலர் உள்ள இந்தக் காலத்தில் அதைவிட தமிழில் போற்றி அகவல் ஒன்றை உச்சரிப்பது எவ்வளவோ மேல். கடவுளுக்கு எம் மொழியும் சம்மதம் எனக் கூறும் நாங்கள் கனடாவில் "ஆங்கிலத் தேவாரம்" படித்து பூசை செய்யப்பட்டால் ஏற்றுக் கொள்வோமா? பல சங்கீத கீர்த்தனைகள் இன்னமும் தெலுங்கிலேயே விட்டு வைத்திருப்பதற்கும் இதுதான் காரணமோ? மொழிகளின் எழும் ஒலிகளை அப்படியே இன்னொரு மொழியின் எழுத்துகளில் பிரதியிடமுடியாது. அதனால் ஒரு மொழியை மற்ற மொழியைவிட சிறப்பானது என்று எவரும் முடிவு கட்டிக் கொண்டால் அவர்கள் இன்னமும் குறுகிய வட்டத்துக்குள்தான் உள்ளவர்கள் என்ற அர்த்தம்.

"மொழி! மொழி!" என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தமிழர் பலர் அந்நிய மொழிகளில்தான் ஆசை வைத்திருக்கிறார்கள். "எமது மொழி தொன்மையானது. பழமையானது" என்று இன்னும் இருபது நூற்றாண்டுகளுக்கு சொல்லிக் கொண்டு மட்டும் இருப்பதால் எந்தச் சிறப்பையும் நாம் பெற்றுவிடப் போவதில்லை. வளர்ச்சிக்கான ஒவ்வொரு அம்சத்திலும் நாம் கவனம் கொள்ளவேண்டும். எதற்கும் எப்போதும் இரண்டுபட்டு நிற்கும் தமிழினம் மொழி வளர்ச்சியிலாவது பொதுமை காண

**21ம் பக்கம் பார்க்க..**

# ஆறும் வருட நினைவாஞ்சலி

# மரியநாயகம் ஈற்றஸ் செந்தில்குமரன்



அன்னையின் மடியில்
29.4.1969

அநியாய அழிப்பு
19.12.87

இனியவனே!
மார்கழி மாதம் எங்கும் பசுமை
அன்னையின் அன்பில் வாழ்ந்தவனே
சிரித்து சிரித்து கதை சொல்பவனே
வஞ்சகமில்லா பாலகன் நீதானே!

கயவர்கள் வீடு தேடி வந்தனரே
அப்போதும் நீ விளையாடிக்கொண்டு
தானேயிருந்தாய்...
பத்தொன்பது வயது நிரம்பிய பாலகனே
உன்னை அவர்கள் கபடத்தனமாக
அழைத்த போது கபடமில்லாமல் சென்றுயே..
திரும்பி வருகிறேன் என்று தானே சென்றுய்
எந்தக் குற்றமுமே செய்யாத பாலகனே
எப்படி உன்னை அவர்களால் அழிக்க முடிந்தது
எங்கள் நெஞ்சத்தில் வேதனை தீ எரிகிறதடா.
எத்தனை கனவுகளை சுமந்து வாழ்ந்திருந்தோம்
நீ பெரியவனுய், படித்தவனுய், வல்லவனுய்
என்றெல்லாம் கண்ட கனவுகளை
அறுத்தெறிந்து விட்டார்களே!

உறவாடியே உன்னை அழைத்து சென்றுர்கள்
உயிரற்ற உன்னைதானே கண்டோம்
எங்கள் கண்ணீருக்கு அவர்கள்
என்று பதில் சொல்வார்கள்

நித்தம் நித்தம் வேதனையால்
துடித்தே நிம்மதியிழந்து தவிக்கின்ருேம்...
உன் துயர நினைவுகள் தான் நெஞ்சை
கசக்குகின்றன... மறக்கவும் முடியுமோ
பாலகனே!
உன் ஆத்மா சாந்தியடையுமடா
இறைவனின் சன்னிதானத்தில் இருந்து
கண்ணீருடன் மன்ருடுகின்ருேம்

என்றும் உன் நினைவால் வாடும்
அம்மா அப்பா அண்ணு

# மரண அறிவித்தல்

# திருமதி ஜெசி (ரதி) ஆன் மேரி சில்வெஸ்ரர்



தோற்றம் 11-05-64

மறைவு 13-12-93

இளவாலையை பிறப்பிடமாகக் கொண்ட ஜெசி ஆன்மேரி கடந்த திங்கள் கிழமையன்று ரொறொன்ரோவில் காலமானுர்.

இவர் திரு. றெக்ஸ் செபஸ்தியாம்பிள்ளையின் அன்புமனைவியும், றியானுகறீனின் அன்புத்தாயாரும் இளவாலையைச் சேர்ந்த திரு.திருமதி செல்லையா மரியநாயகம் தம்பதிகளின் அன்பு மகளும், நோயல் (பிரான்ஸ்)இன் அன்பு சகோதரியும் ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.திருமதி செபஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் மேரிதிரேசா யுவக்கீம்பிள்ளை (இலங்கை) காலஞ் சென்ற மேரிஸ்ரெலா மரியநாயகம், மாசில்லா கிறிஸ்ரி (ஜேர்மனி) அலெக்ஸ் டெனிஸ் (லண்டன்) தேவம் றெஜிஸ் எட்வேட் (கனடா), அனுமேரி சோதி (ஜேர்மனி) ஜொய்சி ராஜ்குமார் (பிரான்ஸ்) பெல்சியா (இலங்கை) லெனுட் லோரு (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனியும் செல்ரன் (சுவிஸ்) சாமினி, சுவேந்தினி, கமலினி, நளாயினி (இலங்கை) ரோணி, பெனி (கனடா) அனு (லண்டன்) ஜெனிற்ரு, ஜெறி, ஜெவ்றி யுவன் (ஜேர்மனி) சோகி, தாரா (லண்டன்) பேணி, மிலானி (கனடா) அசோக்குமார், அருண் (ஜேர்மனி) கொலின் (பரிஸ்) லிடியா, லிண்டன் (கனடா) ஆகியோரின் பெரியதாயாரும் ஆவர்.

அன்னரின் பூதவுடல் சனிக்கிழமை மாலை 2 மணி முதல் 4 மணிவரையும் பின்பு மாலை 7 மணி முதல் 9 மணிவரையும் பார்வைக்காக DUFFERIN / ST. CLAIR ST. WEST இல் 1114 ST. CLAIR WEST, JERRETT FUNERAL HOME இல் வைக்கப்பட்டு இருக்கும்.

பின்னர் புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு 10 மணியளவில் ST. CLAIR AVE WEST இல் உள்ள ST.CLAIR CHURCHல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்ருர் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.
தகவல்களுக்கு திரு. றெஜிஸ் எட்வேட் (416) 6513914

## இருத்தலியல் விசாரணைகள்

# சில புகலிடக் கவிஞர்களும் கவிதைகளும்

கடந்தவாரம் இருத்தலை வலியுறுத்தும் சில கவிஞைகளின் கவிதைகள் தொகுத்துத்தரப்பட்டன. இந்த வாரம் சில கவிஞர்களின் கவிதைகள்.

### காணமற் போனவர் பற்றிய அறிவிப்புகள்

**க. ஆதவன்**

அவள் சிரிக்கும்பொழுது
சிறு குழிகள் கன்னத்தில் விழும்
பற்கள் பெரியவை எனச் சொல்ல முடியாது
கண்கள் எதையாவது பேசாமல் இருந்ததில்லை.
குறும்பு செய்யும் உதடுகள்
தெருக்களிலோ....விழாக்களிலோ.. வெளிச்சத்திலோ...
பெரிதாக வெளியே வாராள்
இடுக்குகள்....நீக்கல்கள்....மௌனவெளிகள்..
இங்கே அவளைக் காணலாம்
நான் அவளைத் தொலைத்துவிட்டேன்.
அல்லது
அவள் என்னைத் தொலைத்தாளோ தெரியவில்லை.
ஆனால்
தொலைந்து விட்டோம் என்பது மட்டும் உண்மை
உலகைப் புரட்டும் புரட்சியாளர்களே
ஏதாவது செய்யுங்களேன் இதற்கு
பி.கு.ஆக
இன்னும் ஒரு விஷயம்
அவள் ஒரு இலங்கைச்சி

மூக்கில் சளிவழியும்
பொத்தான் இல்லாத காற்சட்டை
இடுப்புதனில் நழுவ
இறுக்கி ஒரு முடிச்சு
மேலெங்கும் புழுதி
தென்னை மட்டையில்
'காரொ'ன்று செய்து
கலட்டியெல்லாம் சுற்றி வருவான்
கண்ட புதினம் விண்டுரைப்பான்
தெத்திப் பல்லன்–ஆனால்
எத்தன் இல்லை நல்லன்
கிடுகு வேலிகளில் பொட்டுப் பிரிப்பான்
கள்ளமாய் காணி வேலி பாய்ந்து
மாங்காய் தேங்காய் புடுங்குதலில் வல்லன்
நண்பர்க்கும் நண்ணினர்க்கும் நல்லன்
பி.கு. ஆக இன்னும் ஒரு விஷயம்
இப்போ அவன் வளர்ந்திருக்ககூடும்
உண்மைக் 'கார்' ஒன்றில்
'காணி' வேலி கள்ளமாய் பாயக்கூடும்
கண்டால் சொல்லுங்கள்
விசாரித்தேன் என்று

தாலியை மட்டும் வெளியே தெரியவிட்டு
கூந்தலைக் கொஞ்சம் குழம்பல் கொண்டையாக்கி
தனக்கென ஒரு 'ஸ்ரைலை அமைத்து
தெருவெல்லாம் வீடெல்லாம்
விடுப்பும் விண்ணுணமுமாய்..
வலியவலம்
வரும் என்றும் முப்பது வயதுடைய
மார்க்கண்டேயகி பாக்கியம் அக்கா
எங்கே?
பி.கு. ஆக இன்னும் ஒரு விஷயம்
அவள் இறந்திருக்க முடியாது
அவளுக்கு என்றும் முப்பது வயது.

கையிற் பிரம்பு
நெற்றியில் நீறு
வேட்டி–நாஷனல்
சைக்கிளில் நிமிர்ந்த இருப்பு
நாவில் தமிழ்.
கம்பனையும் இளங்கோவையும்
கம்பியூற்றர் யுக மாணவர்க்கு
சலிப்பின்றிக் கடமையாய்
திணித்ததனல் பல 'பண்டிதப் பட்டங்கள்'
குட்டி மாணவ குலம் மகிழ்வுற்ற
தமிழ் வாத்திமாரைக் கண்டீரோ...

கால மாற்றத்தின் பரிமாணங்கள்
இவையென அமைதி கொள்ளும்
பக்குவ நெஞ்சம்
கொஞ்சமாய்த் தொலைகிறதையா
மிஞ்சுவதெல்லாம் விரக்தியென
அஞ்சல்தான் வாழ்விங்கே.
எங்கே என் போராட்ட நெஞ்சு?
பி.கு. ஆக
அதையும் கண்டால்
அறியத்தருக உடனே! (சுவடுகள்)

(ஆதவன் டென்மார்க்கில் வாழ்கின்றார். தத்துவத்துறையில் பட்டதாரி. சிறந்த புகலிடக் கவிஞரான இவரது தொடர்கதைகள் பலரது பாராட்டைப் பெற்றனவாகும்.)

### ஜாடை

**பா.அ.ஜயகரன்**

அது இன்னுமொரு
மரணத்தின் அறிகுறி
மௌனத்தின் வழி
இருந்திடல்
பல மரணங்களின் அறிகுறி
மௌனம் கலைந்தது
எழும் வார்த்தை
விடியலென்றொரு பொழுதின்
கூடல்
பேசும் பொழுது
மரண வடிவில் வரினும்
அது இனி வரும் பொழுதில்
மௌனம் கலைக்கும்

குலைந்த நிலையிலும்
குறுகிய எண்ணமும்
நிலைப்பாடு அற்றும்
அறிந்தும் பேசாததும்
சுடுகாட்டுச் சந்தைக்கு
தினமும் அறுவடை
விடலை உயிர்கள்
விரைந்து எடுத்துக் கொள்ளும்
ஏன்...? ஏன்?
மௌனம்

இனி இருப்புக்காய்
கலைந்திடல்
எழுந்திடல்
பேசுதல்

தேடல் கனடா

(ஜயகரன் கனடாவில்வாழ்கின்றார். "தாயகம்" "தேடல்" தூண்டில் ஆகியவற்றில் இவரது கவிதைகள் பிரசுரமாகியுள்ளன.

23ம் பக்கம் பார்க்க..

# கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைகளும்

### சி.சிவசேகரம்

திரு. உமாகாந்தன் தனது கட்டுரைகளைப் புனைபேரில் எழுதுமாறு ஒரு சஞ்சிகை ஆசிரியர் கேட்டுக்கொண்டது பற்றித் தாயகத்தில் (3.10.93) எழுதியிருந்தார். இது அனேகமாக அவர் வாழும் நாட்டிலிருந்து வரும் ஏடாக இருக்க வேண்டும். எனவே அது எது என என்னால் ஓரளவு ஊகிக்க முடியும். உமாகாந்தனுடைய முறைப்பாட்டின் நியாயம் பற்றி யாரும் மறுப்பதற்கில்லை. ஆயினுங், குற்றம், குறிப்பிட்ட பத்திரிகையினுடையதா என்பது நமது கவனத்துக்குரியது.

பத்திரிகைகட்கெதிரான மிரட்டல்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒவ்வொரு விதமாக வருகின்றன. பத்திரிகையும் தனது இருப்பை உறுதிப்படுத்தத் தனது செயற்பாட்டை வரையறுத்துக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறது. இந்த வரையறைகட்குள் ஒரு பத்திரிகை தன் நிலைப்பாட்டுக்கு ஊறில்லாமல் இயங்க முடியும். ஆயினும், கட்டுப்பாடற்ற ஒரு சூழலிற் போன்று பத்திரிகைகள் தனது சுதந்திரத்தையோ எழுத்தாளர்களது சுதந்திரத்தையோ பேணுவது சிரமமானது. ஒரு குறிப்பிட்ட விஷயம் மற்றவர்களைச் சென்றடைவதற்குத் தடைகள் இருந்தாற் சில சமயங்களிற் தடைகளை எதிர்த்து மோதியே தீரவேண்டும் சில சமயங்களில் அவற்றை வேறு விதமாகத் தவிர்த்தல் பயனுள்ளதாக இருக்கும். இந்த இடங்களில் ஒரு பத்திரிகையை அதன் சூழலில் வைத்து மதிப்பிடுவது நியாயமானது. பத்திரிகையின் சில அம்சங்கள் நியாயமற்றவையாகவும் இருக்கலாம். இத்தகைய அம்சங்கள் நடைமுறையின் மூலமே நீக்கக் கூடியன.

யார் எழுதுகிறார் என்பதை வைத்துப் பத்திரிகைகட்கு முத்திரை குத்துவது, இன்று மட்டுமல்ல, இலங்கையிற் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கி ஒரு காலத்திலேயே நடந்துவந்துள்ளது. அதே விதமாக ஒருவர் எழுதுகிற பத்திரிகைகளை வைத்து அவருக்கு அரசியல் முத்திரை குத்துவதும் நடந்திருக்கிறது. உதாரணமாகத் 'தாயகம்' (இலங்கை) நல்ல ஒரு சிறுகதையை 1983ல் பிரசுரித்தது. புனைபேரில் வந்த அக்கதை செ. யோகநாதன் எழுதியது என ஊகித்த 'அலை' ஆசிரியர் ஒருவர் தாயகம் ஆசிரியர் குழுவில் ஒருவரிடம் அது யோகநாதன் எழுதியதாகக் கூறினார். கூறிய காரணம் ஏதெனில் யோகநாதனுக்கும் தாயகத்துக்கும் இரகசியமான நெருக்கம் இருக்கிறது என்று காட்டுவது தான் அப்போதிருந்த சூழலில் யோகநாதனுடைய அரசியல் யோக்கியம் மிகவும் கேள்விக்குரியதாகக் கருதப்பட்டது. இந்த நிலையிற், தாயகம் சஞ்சிகையைச் சேர்ந்தவர் அதை எழுதியவர் யோகநாதனல்ல என்பதற்கு மேலாக வேறெதையும் கூற முடியவில்லை. அலை ஆசிரியர் அதை நம்பவில்லை. ஆனாலும் குறிப்பிட்ட கதை ஐந்து வருடங்கள் பின்பு அதன் ஆசிரியரது சிறுகதைத் தொகுதியில் வெளிவந்தது. மறுபுறம், 'செம்பதாகை' ஒரு கட்சிப் பத்திரிகை. அதிற் கட்சி அறிக்கைகள் போக மற்ற ஆக்கங்கள் யாவும் புனைபேர்களில் வருவது வழமை. கட்சி உறுப்பினரல்லாதவர்களும் புனைபேர்களிலேயே எழுதிவந்தனர். கைலாசபதி நீண்டகாலம் எழுதிவைத்தார். நானும் எழுதினேன். நான் அதில் எழுதுவதை அறிய வந்த பின்பு அலை சம்பந்தப்பட்டவர், என்னிடம் இனிமேற்கொண்டு தாங்கள் (அலை) எனது எழுத்தை ஒரு சுதந்திரமான எழுத்தாளருடையதாகக் கருத முடியாது என எச்சரித்தார். நான் மேலும் விளக்கங்கேட்டபோது அது எனது எழுத்தின் பிரசுரம் தொடர்பான மிரட்டல் அல்ல என்று தெளிவுபடுத்தினார். அதே வேளை, அலை தமிழீழ விடுதலை தொடர்பாக ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவும் என்னிடத் தெரிவித்தார். இதற்குப் பின்னரும் அலைக்கு ஓரிரு கட்டுரைகளை எழுதினேன். 1984க்குப் பின்னரே என் எழுத்தின் பிரசுரம் தொடர்பான பிரச்சனைகள் எழுந்தன. அதன் பின்பு தொடர்பை விட்டுவிட்டேன். நான் அலைக்கு எழுதிவந்தது சில இடதுசாரி வட்டங்களிற் கோபத்தைக் கிளறியதையும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

இன்று ஐரோப்பிய சூழலிற் பத்திரிகைகளின் ஜனநாயகம் பற்றிய புரிந்துணர்வு போதாமல் உள்ளது. பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பன பற்றி மெத்தப் பேசுகிற பலருக்குத் தங்களது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைவிட வேறெதுவுங் கணிப்பில் இல்லை. (1992 பாரிஸ் இலக்கியச் சந்திப்புத் தொடர்பான விவாதங்களையே முக்கியமாக் குறிப்பிடுகிறேன்.) இச் சுதந்திரங்களுடன் சேர்ந்து நிற்க வேண்டியதான (தகவல்களின் உண்மை பற்றி அக்கறை, மற்றவர்களது கருத்துச் சுதந்திரம் பற்றிய கரிசனை போன்றன உட்பட்ட) பொறுப்புணர்வை இவர்களிற் சிலரேனுங் காட்டுவது நல்லது.

உமாகாந்தன் எழுப்பியுள்ள பிரச்சனை இச் சூழலில் மிகவும் முக்கியமானது. இதற்கான தீர்வு குறிப்பிட்ட பத்திரிகைகள் மீது குற்றச்சாட்டுக்களை வைப்பதன் மூலம் கிட்டப்போவதில்லை. பொறுப்பானதும் விஷய சம்பந்தமானதுமான விவாதங்களும் பொய்மையும் பாசாங்குமற்ற எழுத்தும் ஊக்குவிக்கப்பட வேண்டும். பத்திரிகைகள் மேலும் துணிவுடனும் வலிமையுடனுஞ் செயற்பட ஊக்குவிக்கப்பட வேண்டும். ஜனநாயகத்துக்கான செயற்பாடு குறிப்பிட்ட ஒரு இயக்கத்தையோ நிறுவனத்தையோ எதிர்ப்பது மட்டுமல்ல. எழுத்துச் சுதந்திரம் என்பது உளறுவாயர்களது சுதந்திரமாகவும் பொறுப்புணர்வின்றி எழுதும் உரிமையாகவும் தொடர்ந்துக் கருதப்படும் வரை பத்திரிகைகளது சுதந்திரமும் ஜனநாயகமும் பற்றி மேலும் விவாதிக்க வேண்டியது அதிகம்.



# கறை பிடித்தவர்கள்

## ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

இளம் வாசகர்களுக்கு பிடித்ததாக ஆறுமாதம் தொடர்ந்து வரத் தக்கதாக அரசியல் கலக்காத ஒரு தொடர்கதை எழுதித் தருவாயா" பத்திரிகை ஆசிரியர் முரளி தனது பெரிய பற்களைக் காட்டிச் சிரித்தான். அவன் நண்பன் கேசவன் பதிலுக்குத்தானும் ஒரு சிறு முறுவலைக் காட்டிக் கொண்டான்.

இருவரும் ஒரு காலத்தில் ஒன்ருகப் படித்தவர்கள். அந்த ஒருகாலம் என்பது எத்தனையோ வருடங்களுக்கு அப்பாற்பட்டது. முரளி எப்போது லண்டன் வந்து சேர்ந்தார் என்று கேசவனுக்குத் தெரியாது. அவன் தனது பதினெட்டாவது வயதில் மேற்படிப்புக்காக லண்டனுக்கு வந்தவன். எப்போதாவது இருந்துவிட்டு ஏதோ கதைகள் எழுதுவான். 70ம் ஆண்டுகளில் ஜெயகாந்தனில் உண்டான காந்தம்., ஜானகிராமனின் கதைகளில் காவேரி நதியில் நடந்த கற்பனை எல்லாம் அவனையும் தானும் 'ஏதோ'(?) எழுதவேண்டும் என்ற வேகத்தையுண்டாக்கி விட்டது.

லண்டனுக்கு வரும்போது தன்னோடு இலக்கிய தாகத்தையும் கொண்டு வந்தான். இருபது வயதில் இவன் ஏதோ எழுத அதை சினேகிதனின் தகப்பன் தன் பத்திரிகையின் பிரசுரிக்க கேசவனும் ஒரு 'எழுத்தாளனுகி விட்டான்.
எல்லா இளம் எழுத்தாளர்களும் போல் இவன் கற்பனையில் இளம் கன்னிகள் தங்கள் தேன் வழியும் அதரங்களால் இவனை முத்தமிட்டு வெறியுண்டாக்கவில்லை. அரசியல் அறிவில்லாத ஆயுதம் தாங்கிகள் சுதந்திர கீதம் பாடவில்லை. இவன் தனக்கு லண்டனில் உண்டான அனுபவங்களை எழுதினுன். தெருவில் நடந்தால் அவன் காதிற் கேட்டும் இனவாதக் கிண்டல்கள், வேலையிடங்களில் தான் நடத்தப்படும் இரண்டாம் தரப் பிரஜை என்ற பாலம், படிப்புத் தளத்தில் வெள்ளை மாணவர்கள் தங்களை உயர்சாதி என்று நினைத்துக் கொள்ளும் நடத்தை என்பன இவனை எழுதத் தூண்டியது. ஏதோ தன் மனக் கொதிப்பை ஒரு இந்தியத் தமிழ்ப் பெண்ணின் பார்வையில் எழுதினுன்.

ஆண் எழுத்தாளர்கள் பெண்கள் பெயரில் எழுதுவதை விட ஒரு ஆண் எழுத்தாளன் தன் பெயரில் ஒரு பெண்ணின் மனநிலையை விவரித்து பல பெண்களுக்குப் பிடித்திருக்க வேண்டும். கதையைப் பிரசுரித்த இவன் சினேகிதனின் தகப்பன் ஒன்றும் சுய உணர்ச்சியுடன் லண்டனின் இனவாதத்தை எதிர்ப்பவரல்ல அவர் தான் லண்டனில் வாழ்வதை பத்திரிகை வெளியிடுவதைப் பெரிய கொடையாகக் கொண்டிருந்தார். இவன் ஒருநாள் தன்னுடன் படிக்கும் மாதவனுடன் அவனின் வீட்டுக்கு போனபோது அவரின் பத்திரிகையாசிரியரான தகப்பனைக் கண்டான். ஏதோ எழுதினுன். அதைத் தொடர்ந்து இன்னும் ஏதேதோ எழுதினுன். எழுத்தாளனுகிவிட்டான்.

தற்செயலாக ஒரு நாள் இவன் முரளியைக் கண்டான். முரளியும் இவனும் இலங்கையில் கண்டியில் இவர்களின் தகப்பன்கள் அரசாங்க அதிகாரிகளாக இருந்தபோது ஒன்ருக ஒரு கல்லூரிக்குப் போனவர்கள் தமிழர்கள் இலங்கையை விட்டு ஓடவேண்டிய நிர்ப்பந்தம் வந்ததைத் தொடர்ந்து இவர்களும் நாடோடிகளாகி விட்டார்கள்.
கேசவன் லண்டன் யூனிவர்சிட்டியில் ஒன்றில் படித்து லண்டனுக்கு வெளியால் வேலைசெய்து கொண்டிருக்கிருன். முரளி மெலிந்து போயிருந்தான். பத்து வருடங்களுக்கு அவனை அப்படிக் கண்டபோது இவன் ஒரு காலத்தில் என்னுடன் படித்த முரளிதான என்று கேசவன் யோசித்தான்.

முரளி அவர்கள் குடும்பத்தின் கடைசிமகன் செல்லமாக வளர்க்கப்பட்டவன். பெரிய தமக்கை படித்தழுத

'பாவை விளக்கின்' மூலம் இலக்கியத்துக்குள் தன்னைப் புதைத்துக் கொண்டவன். கேசவனின் தகப்பன் ஆங்கிலப் பத்திரிகைகள் வாசிப்பவர் ரீடர் டையஸ்ட். எடுப்பவர் தனது மூத்த மகனுடன் கேசவனுடன் ஆங்கிலத்தில் பேசுபவர்.

முரளி கேசவனுக்கு அகிலனையும் அமரதபாக்களையும் அறிமுகம் செய்து வைத்தான். கேசவனின் தகப்பன் ஷேக்ஸ்பியர் பற்றிப் படிக்கச் சொல்ல கேசவன் அவருக்குத் தெரியாமல் ஜெயகாந்தனுடன் மனதை விட்டு விட்டான்.

அப்போது அவர்கள் வயது கொண்டிருந்த இளைஞர்கள் பதினாறும் பதினேழு மாயிருக்கலாம். 'பெட்டைகளைப்' பற்றி நிறையக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அதற்கு எத்தனையோ வருடங்களுக்குப்பின் லண்டனில் குளிருக்குப் பயந்து ஓவர்கோட்டால் உடம்பை மறைத்தபடி ஒரு மனிதன் தமிழ்ப் பேப்பர் வாசித்தும் கொண்டிருந்தான். அவன் தான் முரளி. இருவரும் தயக்கத்துடன் பார்த்தார்கள். முரளி தான் முதலில் வாய் திறந்தான் அதற்குக் காரணம் அவனின் முன் பற்கள் உயர்ந்து வெளிப்பட்டிருப்பது காரணமல்ல, ஆனால் அவன் எப்போதும் தானாக முன் வந்து தன்னை அறிமுகம் செய்து கொள்ளுவான்.

கேசவன் எப்போதும் தயங்கியவன் எழுத்துக்களில் அவன் காட்டும் அவன் மன உணர்ச்சியை அவன் முகத்தில் தேட முயன்றால் தோல்விதான். நண்பர்கள் அறிமுகமாகிக் கொண்டபோது கேசவனின் எழுத்துகளைத் தான் வாசித்திருப்பதாக முரளி சொன்னான். கேசவன் அவன் புகழ்மாலைகளைத் தாங்காமற் தாங்கிக் கொண்டான். தான் ஒரு பத்திரிகை நடத்த யோசிப்பதாகச் சொன்னான். முரளி! கேசவன் குழப்பத்துடன் நண்பனைப் பார்த்தான். இப்போதெல்லாம் சுஜாதாவையும் பாலகுமாரனையும் பற்றிப் பேசினான் முரளி. பாவம் கேசவன் வெளிநாட்டில் ஒரு எழுத்தாள் அனாதையானவன் இந்தியத் தமிழ் எழுத்தாளர்களை அடிக்கடி வாசிப்பது குறைவு! கேசவனின் அரசியல் விழிப்பு முரளிக்குப் பிடிக்கவில்லை. மக்களுக்கு விளங்குகிற அரசியலாக விஷயமாக எழுத வேண்டும் என்று சொன்னான். லண்டன் தமிழ்ப் பத்திரிகையில் தமிழ் மக்கள் விரும்பிப் படிப்பதென்ன? இடியப்பக் கடை விளம்பரமா? அல்லது மணமகள் மணமகன் தேவை என்ற பக்கமா? அல்லது பழைய அரசியற் தலையங்கங்களின் புதிய தமிழ் வேஷமா? கேசவன் நண்பனைப் பரிதாபமாகப் பார்த்தான். அவன் கட்டாயம் கதை கேட்டான். அதுவும் இளைஞர்கள் விரும்பிப் படிக்கும் (?) அரசியல் கலக்காத கதை அதாவது ஒரு காதற் கதை. எப்போதாவது இருந்து ஏதோ எழுதுவதை விட ஒரு ஒழுங்காக ஒரு தொடர்கதை எழுத கேசவனுக்கும் ஆசைதான். நேரமில்லை ஒன்று. அவன் இப்போது ஒரு கல்லூரி ஆசிரியனாக இருந்தான். அது ஒரு தனியார் கல்லூரி கொம்பியூட்டர் சம்பந்தமான பாடங்கள். அத்துடன் வீட்டில் வந்தால் எத்தனையோ பிரச்சனை. இவன் இப்படி சொல்ல முரளி இவனை ஏறிட்டுப் பார்த்தான். "உனக்கு இன்னும் கல்யாணமாகவில்லை என்றெல்லோ கேள்விப்பட்டனான்" முரளி சந்தேகத்துடன் கேட்டான். கேசவன் மறுமொழி சொல்லவில்லை. கல்யாணம் செய்து கொண்டால் மட்டும்தானா பிரச்சனைகள் வரும்?

தான் தன் தமக்கையுடன் இருப்பதையோ அவளின் வாழ்க்கையில் நடக்கும் மாற்றங்களையோ அவன் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் கண்ட சினேகிதனிடம் சொல்ல விரும்பவில்லை. தனது பத்திரிகை பிரவேசத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்தான் முரளி, கொழும்பில் தான் ஒரு பெரிய நாடறிந்த பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்ததாகவும் இலங்கைத் தமிழர் படும் கஷ்டத்தின் நியதி தான் ஊரைவிட்டு ஓட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு இப்போது லண்டனில் அகதியாக இருப்பதாகவும் தனக்குப்


காற்றினிலே ஒரு கீதம்

**கீதவாணி**

வானொலி நிகழ்ச்சி

**அலைவரிசை 88.9 F.M**

**சனி காலை 10 மணி முதல் 11 மணி வரை**

**ஞாயிறு காலை 6 மணி முதல் 8 மணி வரை**

**தொடர்புகளுக்கு 447 9031**

பத்திரிகைத் தொழிலைத் தவிர வேறொன்றும் தெரியாதென்றும் தான் லண்டனில் உண்டாக்கும். பத்திரிகைக்கு இவன் உதவி செய்ய வேண்டும் என்று சொல்லி முடிப்பதற்கிடையில் கேசவன் தான் இறங்க வேண்டிய இடத்தைத் தவற விட்டுவிட்டான். "இதென்ன லண்டனைச் சுற்றிச் சுற்றி ஓடும் சேர்க்கிள் லைன் ரெயின்தானே இன்னொரு நாற்பது நிமிடத்தில் இதே இடத்துக்கு வந்து சேரும் தானே" அநாவசியமாகச் சொன்னான் முரளி.

கேசவன் தன் மணிக்கூட்டை பார்தான். அவன் இன்று கல்லூரிக்குப் போகவில்லை அவனுடைய படிப்பிக்கும் ஒரு ஆசிரியையின் மகளின் பிறந்ததினப் பார்ட்டிக்குப் போய்க் கொண்டிருந்தான்.

"என்ன நேரமாகிவிட்டது." முரளி நல்லவன்தான் ஆனால் எத்தனையோ ஆண்டுகளுக்குக் கண்டபடியால் இப்படித் தன்னை ஒரு இக்கட்டில் மாட்டி விட்டானே என்று யோசிக்காமல் இருக்க முடியவில்லை.

அவனிடமிருந்து தப்பிப் போவதே போதும் போதும் என்றாகி விட்டது.

முரளி தன் டெலிபோன் நம்பரைக் கொடுத்தான் கேசவனின் நம்பரை வாங்கிக் கொண்டான்.

யாரும் எழுதச் சொன்னால் இவனுக்கு எழுத வராது. ஆனால் இவனுடன் வேலைசெய்யும் மஞ்சுளாவை நினைத்தால் அவளைப் பற்றி ஏதோ எழுத வேண்டும் போலிருக்கிறது.

கேசவன் ரெயிலிருந்து வெளிக்கிட்டபோது மழை தூறிக் கொண்டிருந்தது. படிங்ரன் ஸ்ரேசனிலிருந்து சாரிசாரியாக மக்கள் போய்க் கொண்டிரு ந்தார்கள். பின்னேரம் நான்கு மணி என்றபடியால் படாசாலையிலிருந்து குழந்தைகளை அழைத்துக் கொண்டு போகும் தாய்மார்கள் தெருக்களில் அதிகம் காணப்பட்டார்கள்.

அவன் கையிலிருந்த பார்பரா கோர்டனின் விலாசத்தைச் சரிபார்த்தான். லண்டன் A–Z புத்தகத்தில் அவள் விலாசத்தைக் கண்டு பிடித்தான். தெருவின் கடைக் கோடியில் அவள் வீடிருந்தது.

பார்பரா ஒரு ஆங்கிலேயப் பெண். ஒருஐந்து வயதுப் பையனுக்குத் தாய் கல்லூரிக் காதலின் சின்னம் அந்தக் குழந்தை. அவனுக்குத் தகப்பன் யாரென்று தெரியாது. "ஒரு காலத்தில் எமது தகப்பன் யார் என்று கேட்டால் என்ன சொல்வாய்" என்று கேசவன் கேட்டபோது பார்பரா தன் நீல விழிகளால் இவனை எடைபோட்டாள். நீ ஒரு இந்தியன்தானே தகப்பனில்லாமல் பிள்ளை பிறக்கும் என்பதை விஞ்ஞானம் நிருபித்த பிறகும் நீ இன்னும் ஒரு ஆண்மகனை நான் அண்டிப் பிழைக்க வேண்டும் என்று நினைக்கிறாயே"என்பது போலிரு ந்தது அவள் பார்வை.

இவன் அதற்குமேல் பார்பராவை மேலதிகமாக ஒன்றுக் கேட்கவில்லை. அவள் அவனைவிடப் படித்தவள். அவனைவிடப் பரந்த விதத்தில் உலகைப் பார்ப்பவள். இவனின் அருமைச் சினேகிதி. இருவரும் எத்தனையோ இரவுகளை அரசியல் கதைப்பதில் செலவிட்டிருக்கிறார்கள்.

அக்கா இவனைக் காணவில்லை என்றால் பார்பரா வீட்டுக்குப் போன் பண்ணித் தேடுமளவு அவர்கள் உறவு வளர்ந்தது. கொஞ்சக் காலத்துக்கு முன்வரை அவள் இவர்கள் இருவரும் படிப்பித்துக் கொண்டிருக்கும் கல்லூரிக்கு அருகிற்தான் குடியிருந்தார்கள். அதனால் அவளை அடிக்கடி பார்க்க முடிந்தது. ஒருநாள் கல்லூரியிற் சில மாணவர்கள் ரகளை செய்து விட்டார்கள். அப்படிச் செய் தவர்கள் கேசவன் ஒரு இந்தியன் என்றபடியால்தான் இனத்துவேசமாகப் பேசினார்கள் என்பதைப் பார்பரா மனத்துயருடன் சொன்னாள்.

நான் இந்தியனில்லை என்று சொல்லி அவளிடம் என்ன முணு முணுப்பு என்று மௌனமாகி விட்டான். இனத்துவேசமாகப் பேசிய வெள்ளையர்களுக்காக இவள் மன்னிப்புக் கேட்பதுபோல் இவனைத் தன் வீட்டுக்குத் தேனீர் சாப்பிட அழைத்தாள்.

அது வரையும் அவளைப் பற்றி இவனுக்கு ஒன்றும் தெரியாது. அழகான பெண், அமைதியான சுபாவம் மிகவும் சினேகிதமான நடத்தை என்பதை விட அவளைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது.

ஒரு பின்னேரம் கல்லூரி முடியவிட்டு பார்பரா கோர்டன் வீட்டுக்குப் போனான். அவள் வீட்டில் ஒரு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இளம் பெண் பார்பராவின் ஐந்து வயது மகன் ஜெரமியைப் பாதுகாத்து வருவதாக இவள் சொன்னாள். அந்த இளம் பிரான்சிய பெண் லண்டனுக்கு ஆங்கிலம் படிப்பதற்காக வரும் ஆயிரக்கணக்கான இளம் பெண்களில் ஒருத்தி. அந்த இளம் பெண்கள் படித்த ஆங்கிலேயர் வீடுகளில் வேலைக்கு இருப்பார்கள்.

அந்த இளம் பெண்ணின் பெயர் சிமோன் அதைக் கேட்டு இவன் முகத்தில் உண்டாகும் மெல்லிய புன்முறுவலைப்பார்த்து "இவள் பிரான்ஸ் நாட்டின் பேர் பெற்ற எழுத்தாளப் பெண் சிமோன் டிபூவாவுக்கு உறவென்று நினைக்காதே" என்று எச்சரித்தாள்.

சிமோன் மிகவும் இளம் பெண். இப்போது தான் ஆங்கிலம் கற்றுக் கொள்கிறாள் அவள் தனது மழலை ஆங்கிலத்தில் இவனுக்கு பிரான்சில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றிச் சொன்னாள். இவன் 'உம்' என்று

கேட்டுக் கொண்டான்.

சிமோன் ஆறுமாதம் பார்பராவுடனிருந்தான். அவளின் இனிய குரலை இவனுக்குப் பிடித்து விட்டது. சில பின்னேரங்களில் சிமோன் குழந்தை ஜெரமியுடன் பார்க்குக்கு போகும்போது இவனையும் வரச் சொல்லிக் கேட்பாள். இவன் மறுப்பை பார்பராவாற் புரிந்து கொள்ள முடியவில்லை.

"ஏன் அப்படி மறுக்கிறாய்" என்று கேட்டாள்

"லண்டன் நிறையத் தமிழர்கள் இருக்கிறார்கள் அவர்கள் என்னை ஒரு இளம் பெண்ணுடன் பார்த்தால் தவறாகச் சொல்வார்கள்!" என்று சொன்னான். பார்பரா தன் கடல் நிற நீல விழிகளால் இவனைப் பார்த்துச் சிரித்தாள். "நீ பாவம்" என்று சொல்லித் தலையாட்டிக் கொண்டாள்.

பார்பரா வீட்டுக்கு அவன் இப்போது போய்க் கொண்டிருக்கிறான். ஏன் லேட்டாக வருகிறாய் என்று அவள் கேட்கவில்லை. இவன் ஒரு தமிழன் இவனுக்கும் நேரத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று அவள் எப்போதோ முடிவு கட்டிவிட்டாள். எந்தத் தமிழன்தான் சொன்ன நேரத்துக்குச் சரியாக வருகிறான்?

"வழியில் ஒரு சினேகிதனைக் கண்டேன்" இவன் தானாகக் காரணத்தைச் சொன்னான். பார்பராவின் வீடு நிறைய குழந்தைகளும் அவளின் சினேகிதர்களுமாகக் குவிந்து தெரிந்தார்கள். அவர்களில் ஓரிருவரை இவனுக்குத் தெரியும் பார்பராவின் தாயும் தகப்பனும் இவனுக்கும் ஹலோ சொன்னார்கள் மற்றவர்களைப் பார்பரா இன்னும் இவனுக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை.

"குழந்தைகளின் பார்ட்டி முடியப் பெரியவர்களைச் சாப்பிடச் சொல்லப் போகிறேண். நீங்கள் நிற்பீர்களா இல்லையா" பார்பரா இவனுக்குப் பேர்த் டே கேக் துண்டு ஒன்றைக் கொடுத்தபடி கேட்டாள்.

"அக்கா பின்னேரம் ஆஸ்பத்திரிக்கு போக வேண்டும். என்று சொன்னாள். அவளின் சினேகிதியாரோ பிள்ளை பெற்றிருக்கிறார்களாம்" இவன் கேக்குடன் சேர்த்து வார்த்தைகளையும் மென்று விழுங்கினான்.

அவள் சிரித்தாள் இவன் அக்காவுக்காக வாழ்பவன். அக்கா வாழ்க்கைபட்டும் வசதியற்று இவன் தயவில் வாழ்கிறாள் இவன் முப்பது வயதைத் தாண்டியும் தன்னைப் பற்றி யோசிக்காமல் அக்காவுக்காக வாழ்கிறான். அக்காவின் கணவர் ஒரு குடிகாரன். அவள் பாவம் மூன்று குழந்தையும் வீட்டுக் கடனுடன் கஷ்டப்படுகிறாள்.

"நாளைக்கு வருகிறேன்." அவன் குரலில் உறுதி

"நிச்சயமாக?" அவள் கேள்வியில் அவநம்பிக்கை

முரளி கதை கேட்கிறான் என்பதை இவளுக்குச் சொல்லலாமா?

தேனீரைக் குடித்துக் கொண்டு இவளைப் பார்த்தான். குழந்தை ஜெரமியுடன் அவனது ஐந்து வயது பட்டாளம் வீட்டைத் துவம்சம் செய்து கொண்டிருந்தது.

"வழியில் ஒரு சினேகிதனைக் கண்டேன்"

"வந்தவுடன் சொன்னாயே"

"அவன் ஒரு பத்திரிகை ஆசிரியன்"

"ஓ யேஸ்" அவள் இழுத்தாள்

"காதல் கதை வேணுமாம்" இவன் முகத்தைத் தாழ்த்திக் கொண்டான்.

அவள் கணீரென்று சிரித்தாள்

"என்ன சிரிப்பு"

"உனக்குக் காதலிக்கத் தெரியுமா" அவளின் கிண்டல் இவனைச் சுண்டியிழுத்தது.

"மஞ்சுளாவைப் பற்றி எழுதப் போகிறேன்"

"மஞ்சுளாவைக் காதலிக்கிறாயா"

அவனுக்கு எரிச்சல் வந்தது. அவளை முறைத்துப் பார்த்தான்.

"மஞ்சுளா கல்யாணம் ஆனவள்" அவன் முணு முணுத்தான். இவன் குடித்து முடித்த தேனீரக கோப்பையைத் தூக்கிக் கொண்டாள் கழுவப் போட்டாள். அவள் இவனைப் பார்த்தாள். அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். பார்பரா இன்று அழகாக இருக்கிறாள். இவனின் வயதுதான் ஆனால் இவனைவிட எத்தனையோவிதமான உலக அனுபவங்களைக் கண்டவள் இருபத்தி ஒரு வயதில்தான் Fine Art பட்டத்தைப் பெற்றுக் கொண்டு தன் காதலனுடன் ஆபிரிக்கா பார்க்க புறப்பட்டாள். இரண்டு மாதக் கர்ப்பவதியாய் லண்டன் வந்து சேர்ந்தாள். அழகாகப் படம் வரைவாள். இவனையும் இழுத்து வைத்துப் படம் போட்டாள். கன்வசில் இவனைத் தீட்டிய படத்தை அவன் இன்னும் வீட்டுக்குக் கொண்டு போகவில்லை அக்காவுக்கு இதெல்லாவற்றையும் 'ரசிக்க' நேரமில்லை அத்தான் தன் உணர்வுடன் எதை எப்போது பார்த்தார் என்று இவனுக்கு ஞாபகமில்லை. மருமக்களுக்கு இப்போதுதான் பத்து, எட்டு, நாலு வயதுகளாகின்றன. நடு மருமகன் சீதாராமன் கலைகளை ரசிப்பான் என்று தெரிகிறது. ஆறு வயதுதான் என்றாலும் இப்போதே விளையாட்டுக்கு வாங்கிக் கொடுத்த களிமண்ணால் பெண் சிலை செய்கிறான். சிறிய தலையும் பெரிய முலைகளுடனுமிருந்தது அந்த பெண் சிலை!

"என்ன அவசரப்பட்டு ஓடுகிறாய்" அவள் இவனுக்கு கேக்கும் பட்சணங்களும் கட்டிக் கொடுத்தாள். இவனின் தமக்கை லட்சுமியைக் கண்டிருக்கிறாள். அவளில் இவளுக்குப் பரிதாபம். லட்சுமி கணவர் நாகலிங்கத்தில் கோபமா பரிதாபமா என்று தெரியாத உணர்ச்சி இந்தச்

**22ம்பக்கம்பார்க்க..**

# இத்தாலி:
# இடதுசாரிகளின் வெற்றி புதிய திசை நோக்கி!

இத்தாலியில் சமீபத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணிக்குக் கிடைத்த கிடைத்த வெற்றி ஐரோப்பாவில் ஆச்சரிய அலைகளை பிரசவித்துள்ளது. ரோம், நாபிள்ஸ், ஜெனே, வெனிஸ், ரெய்ஸ்ரே போன்ற பெருநகரங்கள் உட்பட 129 நகரசபைகளின் உறுப்பினர்களையும் மேயர்களையும் தெரிவு செய்வதற்காக நடந்த இத்தேர்தல்களில் ஏறத்தாழ 80 இலட்சம் மக்கள் பங்கு கொண்டனர். தேர்தலின் இரண்டாவது சுற்றின் இப்போது இடதுசாரிகளுக்கான ஜனநாயகக் கட்சி (PDS) என பெயர்மாற்றம் பெற்றுள்ள கட்சியும் அதன் இடதுசாரிக் கூட்டணியும் இத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

சமீபகாலங்களில் இத்தாலியில் அதிகாரத்திலிருந்த கட்சிகளின் அரசியல், பொருளாதார ஊழல்களும், மாஃபியாகும்பல்களுடனான தொடர்புகளும் அம்பலப்படுத்தப் பட்டன. அரசியல் கட்சிகள், அமைச்சர்கள் உட்பட அதிகாரத்தின் அனைத்து வட்டங்களுமே இந்த ஊழல்களுடன் சம்பந்தப்பட்டிருந்த வெளியாகியிருந்தது. இதனுல் பிரதான அரசியல்கட்சிகள் மீது இத்தாலிய மக்கள் அதிருப்தியும் வெறுப்பும் அடைந்திருந்தனர். பிரதான கட்சிகள் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பை இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தெளிவாகவே வெளிப்படுத்தி யுள்ளன.

அது மட்டுமல்ல பிரதம அரசியல் கட்சிகளின் மீது இத்தாலிய மக்கள் கொண்ட அதிருப்தியால் இத்தாலிய அரசியலில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் தகுதி தனக்கு இருப்பதாக இத்தேர்தல் முடிவுகளின் மூலம் PDS நிருபித்துள்ளது. இத்தேர்தல்களில் பிரதான எதிர்க்கட்சிகள் யாவுமே முதல் சுற்றில் ஓரங் கட்டப் பட்டுவிட்டன. இரண்டாவது சுற்றுத்தேர்தலில் PDS க்கும் இத்தாலியில் புதிதாக உருவாகியிருக்கும் நவ பாசிஸ்டுகளுக்கும் அவர்களோடு இணைந்த வலதுசாரி களுக்குமிடையிலேயே போட்டி இருந்தது. பல அபிப்பிராய வாக்குக் கணிப்பீடுகள் பல இடங்களிலே இநத நவபாசிஷ்டு வலதுசாரிக் கூட்டணியே வெற்றிபெறும் எனவும் அறிவித்திருந்தன. ஆனுல் பிரதான கட்சிகளின் மீது வெறுப்புக் கொண்டிருந்தாலும் நவபாசிஷ்டு களுக்கு இத்தாலிய அரசியலில் இடம்கொடுக்க நாம்விரும்பவில்லை என்பதை இத்தாலிய மக்கள் இத்தேர்தலில் காட்டியுள்ளனர்.

குறிப்பாக இந்த நவபாசிஷ்டுகளின் முன்னணி வேட்பாளராகக் கருதப்பட்ட அலெஸன்ரா முசோலினி- இவர் இத்தாலியின் முன்னுள் பாசிஷ்ட் சர்வாதிகாரியான பெனிற்ரூே முசோலியின் பேத்தி- அக்ரோனியா பசோலினி என்ற இடதுசாரி வேட்பாளரிடம் 46%க்கு 54% என்றவகையில் தோற்றுப்போனுர். இதுபோலவே ரோம் நகரில் இரண்டாவது உலகயுத்தத்தின் பின்னர் முசோலினியின் ஆதரவாளர் களால் ஆரம்பிக்கப்பட்ட இத்தாலிய சமூக அமைப்பு எனும் இயக்கத்தின் தலைவராகிய ஜியன் ஃபிராங்கோஃபினி இதேயளவு எண்ணிக்கையில் இடதுசாரி வேட்பாளராகிய ஃபிராங்கோ நுரெல்லியிடம் தோல்வி யடைந்துள்ளார். இது போலவே இத்தாலியின் வடக்குப் பகுதியில் பிரிவினை கோரும் அமைப்பான வடக்கு இயக்கம்வேட்பாளர்களும் இடதுசாரி வேட்பாளர்களிடம் தோல்வியடைந்துள்ளனர். ஜெனுேவோ நகரில் இடதுசாரி வேட்பாளர் ஆட்ரியான் சன்சாவிற்கு 59.2% வாக்குகளும் இவரை எதிர்த்து போட்டியிட்ட பிரிவினைவாத வடக்கு இயக்க வேட்பாளர் எரின்கோ செரோவிற்கு 40%8% வாக்குகளும் கிடைத்தன. ரியஸ்தே நகரில் இடதுசாரி வேட்பாளர் ரிக்கார்டோ இலிக்கு 53% வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வலதுசாரிமித வாத வேட்பாளர் கிலியே ஸ்ரபெரிக்கு 47%மான வாக்குகளும் கிடைத்தன.

நவபாசிசத்துக்கு எதிரானதும் இத்தாலியை புதியதிசையில் நகர்த்த முயல்வதுமான இந்த வெற்றிக்கு PDS தலைவர் அரில்லி ஒசெற்றேவே காரணம் என்று கருதப்படுகிறது. இந்த வெற்றிபற்றி அவர் குறிப்பிடுகையில் இது சாதாரண வெற்றியல்ல தெளிவான திட்டமிடுதலுக்கு கிடைத்த வெற்றி இந்த வெற்றி தனிப்பட்ட முறையில் எமது கட்சியின் வெற்றியல்ல, இத்தாலியின் முற்போக்குச் சக்திகள்

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்

அனைத்தினதும் வெற்றி எனக் குறிப்பிட்டுள்ளதுடன் "அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இத்தாலியில் நடக்க இருக்கும் தேர்தலில் இந்த முற்போக்குக் கூட்டணி ஆட்சியைக்கைப்பற்றும்" எனவும் உறுதியாகக் கூறியுள்ளார். இவர் குறிப்பிடும் முற்போக்குக் கூட்டணி என்பது PDS பசுமைக்கட்சி, தீவிரவாத கம்யுனிஸ்டுகள், சுதந்திரக் கொள்கை கொண்டவர்கள் மற்றும் பாசிசத்துக்கு எதிரானவர்களை உள்ளடக்கிய கட்சிகளின் கூட்டணியாகும்.

இந்த வெற்றிக்குக் கிடைத்த வரவேற்பின் இன்னுமொரு அம்சம் பொருளாதார வல்லுனர்களின் ஆருடங்களுக்கு மாறாக இடதுசாரிக்கூட்டணியின் வெற்றியின் பின்னர் இத்தாலிய பங்கு சந்தையில் விலை அதிகரிப்பு ஏற்பட்டது. இத்தாலிய லிராவும் உறுதிநிலையை அடைந்தது. இது ஒசெற்றோ கூறியதுபோல 'இன்று இத்தாலியில் PDS என்பது உறுதிப்பாட்டுக்கான சக்தி. பாதுகாப்புக்கான சக்தி நாளைய அரசு' என்ற கூற்று உண்மையாகிறது.

ஒசெற்றோவின் கூற்று மாத்திரமல்ல இத்தாலியப் பத்திரிகைகளின் கணிப்பின்படி இடதுசாரிகள் அதுவும் முன்னைய கம்யூனிஸ்டுகள் பதவிக்கு வரும் நாள் இரண்டாவது உலக யுத்தத்தின்பின் இதைவிட மிக நெருக்கமாகவில்லை இதனையே ஒசெற்றோ சுருக்கமாக 'எமது அடுத்த நோக்கு அரசாங்கம்' எனக் கூறுகிறார். இத்தாலியப் பத்திரிகைகள் ஒசெற்றோவை இத்தாலியின் அடுத்த பிரதமர் என வர்ணிக்கத் தொடங்கிவிட்டன. உள்ளூராட்சித் தேர்தலையடுத்து உற்சாகமடைந்த ஆதரவாளர்கள் கூட "இத்தாலியின் அடுத்த பிரதமரே!" என்றுதான் கோஷமிட்டனர் இதை வலியுறுத்தும் வகையிலேதான் ஒசெற்றோவும் "அடுத்த மார்ச் தேர்தலுக்கு நாம் இப்போதே தயாராவோம்" என ஆதரவாளர்களிடம் அறை கூவல் விடுத்துள்ளார்.

இத்தாலிய அரசியலில் வலதுசாரிக் கட்சிகள் காணாமல்போய் விட்டதும் மிதவாதிகள் கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சியோடு கலந்து கரைந்துபோய் விட்டதாலும் இடதுசாரிகளின் வெற்றி தவிர்க்க முடியாததாகிறது அடுத்த பொதுத்தேர்தலில் இடதுசாரிக் கூட்டணியின் பாசிசத்துக்கு எதிரான கொள்கை மாத்திரமல்ல இத்தாலியை இன்று சகதிக்குள் தள்ளியிருக்கும் மாஃபியா கும்பலுக்கெதிரான இடதுசாரிக கூட்டணினியின் துணிவான கொள்கையும் உலக மாற்றத்தை ஏற்றுக்கொண்டு அரைத்த மாவையே அரைக்கயில் புதிய கொள்கைகளை ஏற்றுக்கொண்டே PDS க்கு இந்த வெற்றியையின் அரசியல்துணிவும் PDS க்கு இந்த வெற்றியை பெற்றுத் தந்துள்ளது. மேலும்வெற்றியைப்பெற்றுத்தரும். இதற்கு உதாரணமாக ஒசெற்றோ கூறிய ஒரு விடயம் குறிப்பிடத்தக்கது. "சந்தை முறையை அழித்து நாங்கள் சோசலிசத்தை நிலைநிறுத்த விரும்பவில்லை. ஆனால் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் சந்தைமுறையை வழிநடத்த அதன்மூலம் ஒரு சுதந்திரமான, சமத்துவமான சமூகத்தை நாம் உருவாக்க முயல்கிறோம்" எனக் கூறியதன் மூலம் யதார்த்தத்தை உணர்ந்த தமது பொருதாரதார கொள்கை என்ன என்பதை ஒசெற்றோ வலியுறுத்தியுள்ளார்.

இத்தாலியில் அரசியல் மாற்றங்கள் மிக வேகமாகவே ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இந்தவேளையில் ஒசெற்றே ஒரு முக்கிய தலைவராகவே கருதப்படுகிறார். ஏனெனில் சித்தாந்தங்களை ஒப்புவிக்கும் அரசியல் தலைவர்களும், மாற்றங்களை ஏற்கமறுக்கும் அல்லது அதிகாரங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக ஏற்கொள்ளாத அரசியல் தலைவர்கள் நிறைந்துள்ள ஒரு காலகட்டத்தில் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆயுளே முடிந்துவிட்டது என மேற்குலகம் வர்ணித்த காலகட்டத்தில் யதார்த்தத்தை புரிந்து கொண்டு நன்முறைக்கேற்ற கொள்கையை சுவீகரித்து இன்று உள்ளூராட்சி வெற்றியைப் பெற்று நாளை தேசிய வெற்றியை நோக்கி நடைபோடும் PDS அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் ஒரு பாடம்.

## மொழி பற்றி...

விழையவேண்டும். புலம் பெயர்ந்த பல தமிழர்கள் "தமிழ்மொழி இனிப் பழைய சாதம். எமக்கு இனி என்ன பிரயோசனப்படப்போகிறது." என்ற கோதாவில் நடந்து கொள்வார்களாயின் அது அவர்களின் அறியாமையே ஒழிய எதிர்காலம் பற்றிய தீட்சண்யமான பார்வை அல்ல. கலாச்சாரம்–மொழி–மதம் என்பவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. தமது பிள்ளைகளுக்குதமிழ்போதிய அளவு போதிக்க வேண்டிய அவசியத்தை பல பெற்றோர்கள் உணரவில்லை. ஏற்கனவே தமிழ் தெரிந்த பிள்ளைகளே படிப்படியாக அதை மறந்து கொண்டு போகும் நிலை. இதைத் தடுக்கக்கூட பல பெற்றோர்கள் நினைக்கவில்லை. மொழி தெரியாதபோது கலாச்சாரத்தைப் பூரணமாக அறிந்து கொள்ள முடியாது. இதனால் பின்னொருகாலம் தமது பிள்ளைகளாலேயே அவஸ்தைப்பட வேண்டிய நிலை வரும். ஆங்கிலம் நன்றாகத் தெரிந்தால் கனடியனாக சங்கமம் ஆகிவிடலாம்தானே என்பது பலர் நினைப்பு. ஆங்கிலத்தை முதல் மொழியாக தற்சமயம் கொண்ட "கயானா" காரர்களை தம்முடன் சேர்த்துக் கொண்டார்களா இவர்கள்? இப்போதும் இவர்களின் பார்வையில் அவர்கள் "பாக்கி" தான். இந்த "இரண்டும் கெட்டான்" நிலைக்கு நாமும் வரவேண்டுமா? சாவதானமாகச் சிந்தித்தால் நிலமை புரியும்

## கறை பிடித்தவர்கள்...

சமுதாயத்தின் கோரமான விளையாட்டின் பலி மாடுகள் என்றுதான் பார்பரா சொல்வாள்.

"மஞ்சுளாவைப் பற்றி ஏன் எழுத யோசிக்கிறாய்"

வாசற் படிக்கு இவனுடன் வந்து கொண்டே கேட்டாள்.

அவன் யோசித்தான்

"அவள் ஒன்றும் உன் காதலி கதைக்கு ஏற்ற கதாநாயகி இல்லையே" பார்பரா சிரித்தாள்.

"நீ சொல்வது சரிதான்"

அவன் புறப்பட்டான். மழை பிடித்துக் கொண்டது.

முரளியைப் பற்றி நினைத்துக் கொண்டான். பழைய நினைவுகள் ஞாபகம் வந்தன. முரளி எப்படியும் வாழவேண்டும் என்று நினைப்பவன். அந்த மனப் போக்கு அவன் பதினெட்டு வயதாக இருக்கும் போதே இருந்தது.

கேசவனுக்கு இப்படித்தான் வாழவேண்டும் என்று நியதியிருக்கிறது. அக்கா பாவம் என்று நினைத்தவுடன் தான் எப்படியும் இப்படித்தான் வாழவேண்டும் என்ற நினைவு மிகவும் தீவிரமாகிறது.

அக்கா 'பாவம்' இவன் அடிக்கடி நினைத்துக் கொள்வது போல் அவள் தன்னைப்பற்றி ஒன்றும் நினைத்துக் கொள்வதில்லை என்று இவனுக்குக் காட்டிக் கொள்ள தன்னால் ஆன முயற்சிகள் எல்லாம் செய்வாள்.

இலங்கையின் இனக் கலவரத்தில் எத்தனை கணவன்கள் இறந்து விட்டார்கள். அவர்களின் விதவைகளை விடத்தான் அதிர்ஷ்ட சாலி இல்லையா என்று கேட்பாள்.

அக்காவின் கணவர் லண்டனிற் பெரிய வேலையிலிருக்கிறான் என்று சொல்லித்தான் இவளைத் திருமணம் செய்து வைத்தனர்.. இப்படி எத்தனையோ பெண்கள் கல்யாணச் சந்தையில் ஏமாற்றப்பட்டதை ஒரு தோல்வியாக எடுத்துக் கொள்ளாமல் வேறு ஏதோ செய்து வெற்றியடையப் பார்க்கிறார்களா என்று இவன் நினைப்பதுண்டு.

அக்கா தன் குழந்தைகளைக் கவனமாகப் படிப்பிக்கிறாள். தகப்பனால் தான் பட்ட ஏமாற்றம் தன் குழந்தைகளாலும் வரக் கூடாது என்ற எண்ணமாக இருக்கலாம். மஞ்சுளா தேசாய் என்பவளையும் ஒரு பாவம் என்று நினைத்துக் கொள்வதா? கிழக்கு ஆபிரிக்காவிற் பிறந்த குஜராத்திப் பெண். தாய் தகப்பனுக்கு அடங்கி வளர்ந்தவள்.

எப்படி உறுதி படைத்த மனிதரையும் உலுக்கிப் படைக்கும் லண்டன் மாநகரில் தகப்பனின் இந்து உபதேசங்களைக் கேட்டு மிக மிகக் கட்டுப்பாடாக வளர்ந்தவள். பம்பாயில் உள்ள தன் சொந்தக் காரப் பையனைத் தகப்பன் தேர்ந்தெடுத்தபோது இவள் தலை குனிந்து விமானம் எடுத்துக் கல்யாணம் செய்து கொண்டாள்.

சாந்தி முகூர்த்தத்துக்கு முன் மனம் விட்டுப்பேச வேண்டும் என்று சொன்னானும். 'அதற்கென்ன' லண்டனிற் படித்த பெண் 'மனம் விட்டுப் பேசத் தயாரானபோது அவன் இவளை ஏற இறங்கப் பார்த்தபடி இவளின் லண்டன் அனுபவங்களைப் பற்றிக் கேட்டானும். பாவம் மஞ்சுளா, தாய் தகப்பனால் இந்திய இளம் தலைமுறையினர் நடத்தும் டிஸ்கோவுக்குக் கூடச் செல்ல அனுமதிக்கப் படாதவள்.

யூனிவர்சிட்டி படிப்பில் கவனம் செலுத்தித் தன் கற்பை (?) பாதுகாத்துக் கொண்டவள். அவன் நடுச் சாமத்தில் இவளின் பழைய அனுபவத்தைக் கேட்டானும். படுபாவி என்று திட்டத்தான் மனது வந்ததாம் அவனில் கோபம் வந்தது. கல்யாணம் ஆகியும் 'கன்னி' கழியாமல் லண்டன் வந்து சேர்ந்து விட்டாள். மிஸ் தேசாய் இப்போதெல்லாம் இந்துமத வாலிபர்களையே திட்டிக் கொண்டிருக்கிறாள். கறைபடிந்த ஆண்கள். கன்னியமாக என்ன நினைப்பார்கள் என்று பேசுவாள். ஒன்றாய்ப் வேலை செய்யும் சில ஒநாய்கள் இவள் கண்ணீருக்குப் புண்படுகிறார்கள்., அண்மையில் நடந்த சைமனின் போர்த் டே பார்ட்டியின் போது அளவுக்கு மீறி வைன் குடித்து விட்டுத் தள்ளாடினாள்.

இவன் அவளை வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான். அக்கா., மஞ்சுளா பார்பரா என்னும் பெண்களைத் தவிர அதிகம் பேரை அவனுக்குத் தெரியாது.

மஞ்சுளாவுக்குக் கைத்தாங்கல் கொடுக்க சைமன் போன்றவர்கள் முன்வரும்போது இவனுக்குக் கோபம் வருகிறது. ஆனாலும் என்ன செய்ய? மஞ்சுளாதான் எல்லா 'இந்திய'ரையும் (அதாவது ஆண்களை) திட்டிக் கொண்டிருக்கிறாளே

பார்பரா தன்னுடன் நெருங்கிப் பழகும்போது இந்த ஆங்கிலேயப் பெண் வேறு ஏதும் காரணம் வைத்துக் கொண்டு பழகுகிறாளோ என்று யோசித்தான்.

அவள் இவனின் அப்பாவித் தனத்தை இவன் பார்வையிலேயே கண்டு பிடித்து விட்டாள்.

"முட்டாளே என்னைக் கண்டு பயப்படாதே. நான் ஒரு பெண்ணுடன் சினேகிதமாக இருக்கிறேன். எனக்குக் கிடைத்த அனுபவத்தின் பின் ஆண்களை நம்புவேன் என்று நினைக்கிறாயா?" என்று சிரித்தாள்.

மழைமுடிந்து விட்டது.

அண்டர்கிரவுண்ட் ரெயின் வந்தது. முரளிக்கும் காதல் அதை எழுத இவனால் முடியாது. இவன் ரெயினில் உட்கார்ந்தான். களைப்பில் தூங்கிவிட்டான்.

## இருத்தலியல்...
## உண்ட வீடு

**தம்பா**

நாளிகையில் நனைந்திருக்கும்
சோர்ந்த உடல்
தலையணைக்குக் காதல் சொல்லும்

நடுநிசியை உடைத்துவரும்
உடுக்குச் சத்தம்
படலைக்கு மேல் எழும்
தலைப்பாகை
வீதி எழுப்பும் ஆருடம் கொட்டி

மகிழ் மகிழ்
நிதானமாக மகிழ்
நேற்றைய பகை
ஊர் மறையும் ஆனுலும்
பொழுதோறும் வலம்வரும்
வளர்த்தகடா கொம்புசீவி

இருளில் கரையும் தலைப்பாகை
சுற்றிலும்
ஒரு கணந்தான் அமைதி
மகிழ் நிதானமாக மகிழ்?

ஓரக்கண் பதிவில்
அமைதி கொட்டித் திண்ணையில்
அசைபோட்டு நிற்கும்
பட்டியாடு

நடுநிசியில் நான்
விழித்துக் கொண்டேன்
நோர்வே சக்தி ஆகஸ்ட் 90
(புகலிடத்தின் மிகச் சிறந்த ஓவியராக அறியப்பட்ட தம்பா ஓர் சிறந்த கவிஞரும் கூட. இவர் நோர்வேயில் வாழ்கின்ருர். இவரது ஓவியங்களை தொடர்ச்சி யாக நோர்வே 'சுவடுகள்' பிரசுரித்து வருகின்றது.)

## முன்பனிக்காலமும் ஈழதேசமும்

**ராகவன்**

பிராங்பர்ட் நகரத்து
தனிமையைப போக்க
அறையை விட்டு
வெளியில் வந்தேன்

அமைதியை உடைத்து
விரைந்தன கார்கள்
சாலையோரங்களில்
முறுக்கிய பொம்மையாய்
திரிந்தனர் மனிதர்
அருகில் இருந்த
பூங்காவில் நுழைந்தேன்
திடுக்குற்று நின்றேன்
நகரத்து இயந்திரவாழ்வை
மறந்திடச் செய்யும்
என்னுடை சொர்க்கம்
நோய்வாய்ப்பட்டது போல்....

என்னதான் நடந்தது!
சிலநாள் முன்தான்
இந்த மரங்களில்
இலைகள் யாவும்
பச்சையாய் இருந்தன
புருக்கள் பறவைகள்
குஞ்சுகள் என்று
ஆடிப்பாடி மகிழ்ச்சியாய்
வாழ்ந்தன.
(புதுமை ஜேர்மனி)
சிலகாலங்கள் சுறுசுறுப்பாக எழுதி இப்போது எதனையுமே எழுதாதுள்ள ராகவன் ஜேர்மனியில் வாழ்கின்ருர்.

## புதிய அர்த்தங்கள்

**இளவாலை விஜயேந்திரன்**

எனக்கு விசாதந்த அதிகாரி
மனைவிக்கு
விசா மறுக்கிருன்.

யாழ்ப்பாண வடலிகளின் நிழலில்
அம்மம்மா
போய்ச்சேர்ந்து விட்டாலும்
சென்று திரும்பல்
இயலுமோ சொல்.

ரொரன்ரோவில், லண்டனில்
எனது சதைகளும் இரத்தமும்
ஆன சகோதரங்கள்

எந்தத் தூதரகத்திலும்
எனது நிறத்தை
நம்பத் தயாரில்லை.

'அகதி' என்ற தமிழ்ச் சொல்லின்
அர்த்தம் தேவை.

நான் விரும்பும் யாரையும் பாராமல்
வெறுப்புமிழும் முகங்களையே
பார்க்கும் விதி எனக்கு

வேற்றுக் கிரகத்து மனிதனுய்
இந்தப் பூமிப்பந்தில்
வாழும் எனக்கு
'அகதி' என்ற சொல்லின்
அர்த்தம் தேவை
இளவாலை விஜயேந்திரன்
சுவடுகள் மார்ச். ஏப்பிரல் 1992
விஜயேந்திரன் நோர்வேயில் வாழ்கின்ருர். அறியப்பட்ட கவிஞரான இவர் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட 'புதுசு' ஆசிரியர் குழுவில் இருந்தவர், தற்போது நோர்வே 'சுவடுகள்' ஆசிரியர் குழுவில் உள்ளார். இவரது கவிதைகள் அந்நிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன

## எனது ஸ்டொக்காம் பயணம்

காடு எரிந்தென்ன
நாட்டினில் நால்வர்
தந்திக் கம்பத்தில் தொங்கி
உதிரம் கொட்டி
நிலத்தை நனைத்தென்ன
அம்மிகள் யுகத்தை
நிலைநிறுத்தத்தானே
எம்மவர் தோள்களில்
ஏதேதோ ஏறின

வானைக்காட்டி
கற்பினைத் தேடும்
இந்த அருந்ததி யுகத்தில்தான்
எனது சினேகிதி
கயிறையும் கிணற்றையும்
தேடும் மரபை மாற்றி
யோனியைக் கிழித்து
தனது நாள்களிற்கு
முற்றுப்புள்ளி வைத்தாள்.

புணர்ச்சி எமக்குத்
தடுக்கப்பட்டுள்ளது
புணரும் நாய்களைத் தேடி
எம்மவர் கல்களோடு

எமது யுகத்தாளன்
மனிதனல்லன்
அரக்கன்

நான் ஸ்டொக்ஹோம்
போகின்றேன்
இவனுக்கு நோபல் பரிசு
வழங்குங்கள் என்று கேட்க.
க. கலாமோகன்
தாயகம் 07-08-92
கலாமோகன் பிரான்ஸில் வாழ்கின்ருர். சிறுகதைத்துறையில் ஈடுபாடு கொண்டவர் 'தாயகம்' 'தேனி' 'சுவடுகள்' 'அக்கினிக்குஞ்சு' இவைகளில் இவர் ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன.

குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

மரக்குற்றியைப் பிடித்து நீந்துவதிலேற்பட்ட உள்ளக் கிளர்ச்சியில் கரையை விட்டு நீண்ட தூரம் வந்ததே தெரியவில்லை. சுற்றிவர தண்ணீர், மேலே நீலவான். பார்ப்பதற்கு அழகாயிருந்தது. என்னையே மெய்மறந்து போனதில் என் பிடியைச் சிறிது நெகிழவிட்டேன். அவ்வளவுதான். .... குற்றி என் பிடியைவிட்டு முற்றாகவே விடுபட்டுப் போனது. தண்ணீருக்குள் கைகளை அடித்துக் கொண்டு தத்தளிக்கத் தொடங்கினேன். மூச்சு முட்டியது. நீரை நன்கு குடித்தேன். ஒரு முறை உள்ளே போய் மீண்டபோது ரஞ்சிற் பதைபதைப்புடன் என்னை நோக்கி வருவது தெரிந்தது. அந்தக் கணத்தில் தத்தளிப்பதில் தான் முழுக்கவனம் வேறெந்த யோசனையுமே ஏற்படவில்லை. ஏற்படவும் முடியாது. இரண்டாவது முறை மேலே வந்தபோது ரஞ்சிற் வந்து என் தோள்களைப் பற்றிப்பிடித்தான். அங்குதான் அவன் பிழை விட்டான். நீரில் தத்தளிப்பவனைத் தலையில் பிடித்துத்தான் காப்பாற்ற முயலவேண்டும். தத்தளித்துக் கொண்டிருப்பவன். எது தட்டுப்பட்டாலும் அதனைப் பற்றியிறுகப் பிடித்து விடுவான். அது தான் இயல்பு. அதனைத்தான் நானும் செய்தேன். ரஞ்சிற்றின் கழுத்தைச் சுற்றிக்கைகளால் அவனை இறுக்கிப் பிடித்துக் கொண்டேன். பாவம் ரஞ்சிற் என்னைக் காப்பாற்ற வந்தவன் என்னுடன் சேர்ந்து மூழ்கத் தொடங்கினான். என்னுடன் சேர்ந்து என்னைக் காப்பாற்ற, தன்னைக் காப்பாற்ற தத்தளித்துக் கொண்டிருந்தவனை விட்டு மரக்குற்றியும் தூரத்திற்குச் சென்றுவிட்டது. இருவருமே மூழ்கத் தொடங்கினோம். இதற்கிடையில் நாங்கள் தத்தளிப்பதைக் குந்தவி கண்டுவிட்டான். கரையில் சவர்க்காரம் போட்டுக் கொண்டிருந்த சுமணதாஸ் பாஸிற்கு விசயத்தைக் கூறினாள். கரையில் வேறு பெரிய மனிதர்கள் சிலருமிருந்தார்கள். எல்லோரும் யோசித்தார்கள் ஆனால் சுமணதாஸ பாசோ யோசிக்கவில்லை. இதுதான் சுமணதாஸ பாசின் முக்கியமான குணங்களிலொன்று ஆபத்துக்களைத் துணிச்சலுடன் எதிர் கொள்வது...

தத்தளித்துக் கொண்டிருந்த எங்களருகில் வந்தவர் இருவர் கழுத்துக்களையும் தனது கைகளால் இறுக்கிப் பிடித்து எங்களை அசையவிடாதபடி நீந்திக்கொண்டு வந்து கரைசேர்த்தார். சொந்தக் குழந்தைகளை நெஞ்சளவு கிணற்றுத் தண்ணீருக்குள் சாக விட்டு வேடிக்கைபார்த்து நிற்கும் கோழைகளின் கதைகளை நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அண்மையில் கூட எங்கோவொரு நாட்டில் குளமொன்றில் தவறிவிழுந்த குழந்தையைக் காப்பாற்ற முடியாமல் நூறுபேர் வரையில் கரையில் நின்று வேடிக்கை பார்த்தார்களென்று பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. ஏன் அன்று கூட சுமணதாஸ பாசைத்தவிர வேறு சிலரும் கரையில் நிற்கத்தான் செய்தார்கள். வேடிக்கை பார்க்கத் தான் செய்தார்கள். ஆனால் சுமணதாஸ் பாஸ் மட்டும் தான் ஒன்றைப் பற்றியும் யோசிக்காமல் எங்களைக் காப்பாற்ற முயன்றவர். ஒருவரைக் காப்பாற்றவே தயங்குவார்கள் அதிலும் தத்தளிக்கும் இருவரைக் காப்பாற்றுவதென்றால் சுமணதாஸ பாஸ்! உனக்கு நெஞ்சுத் துணிவு மிகவும் அதிகம் தான் .

இன்று உன்னால் உயிர் கொடுக்கப்பட்ட நான் இருக்கின்றேன், ஆனால் நீ.... உளவாளியென்று உன்னோடு சேர்ந்து குடும்பத்தையும் கூண்டோடு கைலாசமேற்றி அனுப்பிவிட்டார்கள். நியாயப் படுத்துவதற்காக ஆட்களில்லை எதையுமே நியாயப்படுத்த அடுக்கடுக்காக அள்ளி வீசக் காரணங்களில்லை. சொந்தச் சகோதரர்களையே தெருவில் எரித்துப் போட்டுவிட்டு அதற்குமொரு நியாயம் கற்பித்த பரம்பரையைச் சேர்ந்தவர்களல்லவா நாங்கள். வழக்கம்போல் இதற்கும் காரணங்களை அள்ளி வீசுவோம்.

'பாஸ் இராணுவத்திற்கு உளவு சொன்னான்'

'பாஸின்ற மனுசிக்கும் இராணுவத்திற்கும் அப்படியிப்பிடி ஏதோ தொடர்பாம் விட்டு வைக்க கூடாது'

'அவங்கட பிள்ளைகளும் சேர்ந்துதானாம்.....'

'போராட்டப் பாதையில் இதையெல்லாம் விட்டு வைக்ககூடாது' ஆனால் எனக்குத் தெரிந்தே நீ என்னைவிட அம்மண்ணுடன் உனக்குத் தான் அதிக சொந்தம். நாங்கள் முதன்

முறையாக வந்தபோதே அந்தப் பகுதி காடுமண்டிப் போய்க் கிடந்தது. ஆனுல் நீ வந்தபோதோ நான் பிறந்திருக்கவேயில்லே. அந்தப் பகுதி எந்த நிலேயில் இருந்திருக்கும். இளைஞுன நீ கனவுகளுடன் கற்பனேகளுடன் புதுமண்ணில் வாழ்க்கையைத் தொடங்கியிருப்பாய். திட்டங்கள் பல போட்டிருப்பாய். எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. உன் கற்பனேகள் மட்டுமல்ல, இன்று என் கற்பனேகள் கூடத்தான். என் கனவுகள், கற்பனேகள் வாழ்க்கைத் திட்டங்கள் அழிக்கப்பட்ட நிலேயில் எனக்கோ அன்னிய நாடொன்றில் அகதிவாசம் உனக்கோ இவ்வுலகிலிருந்தே அன்னிய வாசம்,. 'போராட்டம்' 'இராணுவத் தீர்வு' என்று பெயரில் இன்னும் எத்தனே அப்பாவி உயிர்கள் பலியாகப் போகின்றனவோ? போரில் நேரடியாக ஈடுபட்டவர்களின் அழிவைவிட, இதுவரை அழிந்துபோன பாதிக்கப்பட்ட அப்பாவி உயிர்களின் எண்ணிக்கைதான் மிகமிக அதிகம். உலகம் முழுவதிலும் நிலேமை இதுதான். இதன் முடிவு தானென்ன.

சுமணதாஸ பாஸ்!

உன்னேயும், உன் குடும்பத்தையும் 'உளவாளி' யென்று பரலோகம் அனுப்பிவைத்தவர்களிற்கு உன்னேயும் தெரியாது. உனக்கும் அந்த மண்ணிற்குமிடையிலிருக்கும் பந்தமும் புரியாது. அவர்கள் நீ அந்த மண்ணில் காலடிவைத்து ஆண்டுகள் பல கழிந்து இவ்வுலகில் அவதரித்திருக்கலாம். தெரிந்திருக்க நியாயமில்லேதான் ஆனுல் எனக்கு. ... காடுமேடுகளென்று குளங்களென்று உன்னுடன் அலேந்து திரிந்த எனக்கு உன்னேத் தெரியும், உன் நெஞ்சையும் நல்லாப் புரியும். நான் நிச்சயமாக நம்புகிறேன். நீ உளவாளியாகியிருக்க முடியாது. என் உயிரைக் காப்பாற்றும் போது நான் தமிழன் நீ சிங்களவனென்று நீ நினேத்திருக்கவில்லே மனிதனென்று தான் எண்ணிணுய். அந்த மனிதாபிமானத்தை எனக்கு விளங்கும். என் எதிர்பார்ப்பையும் மீறி உண்மையிலேயே காலம் உன் நெஞ்சிலும் இனஉணர்வுகளே விதைத்து விட்டிருந்தால்... அதற்கும் கூட உனக்கும் உன் குடும்பத்தவர்க்கும் கிடைத்த தண்டனே கொடியது தான்.மிகவும் கொடியது தான்.

'தவளைக்குஞ்சுகள் என்ன விநோதம்'

'ஆடிப்பாடியோடி ஆடும்விநோதம்' சுமணதாஸ பாஸ குமிண்சிரிப்புடன் மழலேத்தமிழில் பாடிக்கொண்டிருக்கின்ருர். வீசும் காற்றில் இறுக்கமான அந்தக் குடும்பிகூட இலேசாக ஆடுகின்றது. அவரைச் சுற்றி நாங்களும் அந்தப் பாடலேப் பாடியபடி ஆடிக்கொண்டிருக்கின்ரேம். வாழ்க்கையில் எவ்வளவு அர்த்தம் பொதிந்து கிடக்கின்றது. தவளேக்குஞ்சில் தெரியும் விநோதமாகத் தான் வாழ்வேயிருக்கின்றது. தவளேக 'குஞ்சினூடு வாழ்க்கையை விநோதமாகப் பார்த்தாய் நீ. ஆனுல் உன் முடிவே இவ்விதம் விநோதமாக முடியுமென்று யார் கண்டது? சுமணதாஸ பாஸ் நீ எங்கேயிருக்கின்ருய்? விரிந்து கிடக்கின்றது பிரபஞ்சம், புதிர் நிறைந்து முடிவற்ற தொடராக விரிந்து கிடக்கின்றது தொலேவில் இதன் ஆழங்களிலெங்கோயிருந்தபடி நீ இன்னமும் 'தவளைக்குஞ்சுகள் என்ன விநோதம்' பாடிக் கொண்டிருக்கலாம். அதே மழலேக்குரலில் அதே குமிண் சிரிப்பில்... உன்னேச்சுற்றி உன்னேக் கொன்றவர்களே ஆடிப் பாடிக் கொண்டிருக்கலாம். யாரை யார் கண்டது? உண்மையை அறிந்தவர் யாரே? நனவிடை தோய்ந்துவிட்டு நனவிற்கு வருகின்றேன். கண்கள் பனித்துப் போய்க் கிடக்கின்றன. மனம் பாறையாகிக் கிடக்கின்றது. 'பியர்சனே' நோக்கி 'எயர் கனடா' வொன்று விரைவதை அந்த சிவந்த மேப்பிள் இலே காட்டி நிற்கின்றது யதார்த்தம் உறைக்கின்றது.

தொடரும்


# வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சி

**காலம் சஞ்சிகை நடாத்தும் தமிழ்ப் புத்தகக் கண்காட்சி**

**சங்க கால நூல்கள் முதல் நவீன இலக்கியம் வரை**

***மார்கழி 18,93***
***மாலே 1 மணி முதல் 8 மணி வரை***

*OISC Hall, 2nd floor*
*252, Bloor St west*
*(St George Subway க்கு அருகில்)*

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 9

### சின்னத்தம்பி வேலாயுதம்

மதம்

மத ஆதிக்கம் உள்ள தமிழ் நாட்டில் தி.முக பதவிக்கு வந்தததும், கேரளாவில் கம்யூனிஸ்ட்டுக்கள் பதவிக்கு வந்ததும் ஒப்பு நோக்கப்படும்போது இலங்கையில் கம்யூனிச சித்தாந்த வளர்ச்சிக்கு மதம் முட்டுக்கட்டையாக இருக்கவில்லை என்றுதான் கருத வேண்டியுள்ளது. அதற்கு முக்கிய காரணம் தமிழர் பாரம்பரிய பிரதேசங்களின் பெரும்பான்மை மக்களின் மதம் இந்து (சைவ) மதமாகவும் அதற்கு ஏனைய மதங்களுக்குரிய தலைமைப் பீடம், ஸ்தாபன அமைப்பு என்பன வலுவானதாக இல்லாததாலும் அது ஸ்தாபனமயப்பட்டு கம்யூனிஸத்தை எதிர்க்கும் வலுவை கொண்டிருக்கவில்லை.

அத்தோடு முன்பு குறிப்பிட்டது போன்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூன்றிலொரு பகுதி மக்களான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இந்து மத சமத்துவம் இன்மை காரணமாக அவர்கள் இடதுசாரிக் கட்சிகளுடன் தங்களை இணைத்துக் கொள்வது தவிர்க்க முடியாமலிருந்தது. ஆனால் தேர்தல் என்று வரும்போது அரசியல் சாதியடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டதால் இடதுசாரிகள் வெற்றிபெற வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்தன.

1963-66 களில் நடந்த தத்துவார்த்தப் போராட்டத்தால் பிளவுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய அணி புரட்சிகர மார்க்கத்தைப் பின்பற்றியது. பாராளுமன்றத்தை நிராகரித்தது. சிறுபான்மைத் தமிழர் மகாசபையின்போராட்டங்களையும் புரட்சிகரப் போராட்டங்களாக்கியது. அதன் விளைவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமாகும் அது பற்றி முதலாம் அத்தியாயத்தில் கூறி விட்டேன்.

இங்கு குறிப்பிடவேண்டிய விடயம் என்னவெனில் யாழ்ப்பாணத்தில் அஹிம்சையிலிருந்து ஆயுதப் போராட்டத்துக்கு மாற்றியவர்கள் கம்யூனிஸ்ட்டுகளே. அதனால் தமிழர் ஆயுதப் போராட்டத்தின் தந்தை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமேயாகும். இடதுசாரிகளின் விஞ்ஞான சமூகக் கண்ணோட்டத்தை புரிந்து கொள்வதைவிட தமிழ்மக்களுக்கு இனவாதிகளின் உடனடி அழைப்பு விரைவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. பேரினவாத அரசியற் போக்கும் அதற்கு ஒரு காரணமாகும்.

அதனால்தான் வெகுஜனக் கிளர்ச்சி இனக் கிளர்ச்சியாகத் திசைமாறியது இந்த இரண்டுக்குமுரிய வித்தியாசங்களை செவ்வனே புரிந்து கொள்ள முடியாதபோது தத்துவக் குழப்பம் ஏற்படும். எப்படியெனில் இலங்கையில் தமிழர் விடுதலை முதன்மைப் படுத்தப் பட்டு அப்போராட்டத்தை சமூக விடுதலைக்குமானதாக்க வேண்டுமாயின் சமூகவிடுதலையின் ஒரு அங்கமாக தமிழர் விடுதலை இருக்கவேண்டுமேயொழிய தமிழர் விடுதலையின் கீழ் சமூகவிடுதலை இருக்க முடியாது.

ஏனெனில் இலங்கையில் தமிழர் விடுதலையின் அளவுகோல்கள் வித்தியாசப்படுகின்றன. ஒற்றையாட்சியில் வரையறுக்கப்பட்ட உரிமைகள், பிரதேச சுயாட்சி, பிரிவினை ஆகிய மூன்றுக்குள் எந்தவொரு தீர்வுக்கும் வரலாம். இதிலே பிரிவினையின் சாத்தியங்கள் அரிதாக இருப்பதை முதலாவது அத்தியாயத்தில் தெளிவாக விளக்கியுள்ளேன். எல்லா இடதுசாரிகளும் பிரதேச சுயாட்சித் தீர்வை ஆதரிப்பதுடன் விடுதலைக்காக போராடும் சக்திகளை ஆதரிக்கலாம். ஆனால் இனவெறிக்கு இடம் கொடுக்காத முறையில் தமது ஆதரவை வழங்கலாம்.

சமூக விடுதலைக்கான போராட்டத்தில் இனங்களுக்கிடையேயான சமத்துவத்தைப் பேணுவதை முக்கிய அம்சமாக கொண்டு ஏனைய இனங்களின் முற்போக்கு சக்திகளை தமது நேச அணியாக இணைத்துப் போராடுவதே சமூக மேம்பாட்டுக்கான போராட்டமுறையாகும்.

எந்த ஒரு நாட்டிலும் ஒரு இனம் பிரிந்து போவதற்கான வலுவான காரணிகளையும் அதற்கான பின்னணியையும் கொண்டிருந்தால் அந்த இனம் பல தசாப்தங்கள் போராட வேண்டியதில்லை. அதேபோல நூற்றாண்டுகளாகப் போராடினாலும் தீர்வுக்கு வரமுடியாத காரணிகளைக் கொண்ட இனங்களும் எப்படிப் போராடினாலும் அழிவுகள் தான் பலாபலன்களாகும். உதாரணத்துக்கு பலஸ்தீன-யூத இனங்களை எடுத்துக் கொள்ளலாம்.

மேற்கூறிய தத்துவ அடிப்படையில் கடந்த காலங்களில் இடதுசாரிகள் மக்களுக்குள் வேலைசெய்த போதும் அவர்கள் தமிழர் பிரச்சனையில் தெளிவான கொள்கைகளைக் கொண்டிருக்கவில்லை, தமிழர் பிரச்சனைகளுக்காகப் போராடவில்லை, என்ற குற்றச்சாட்டு உண்டு. இதிலே முக்கியமான விடயம் ஒன்றுண்டு அதாவது தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகளால் எடுத்துக் காட்டப்பட்ட சிங்கள பேரினவாதம் பற்றிய குற்றச்சாட்டுக்களைத் தமிழ் இடது சாரிகள் சந்தேகக் கண்ணோடு நோக்கினர். காரணம் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கு ஒன்றைக் கூறுவதும், தாம் பேரினவாத அரசுகளுடன் ஒட்டி உறவாடுவதுமாக இருந்ததனால் அத்தகைய

கபடத்தனம் நிறைந்த தமிழர் பிரதிநிதிகளுடன் இணைந்து இடதுசாரிகள் போராட தயாராயிருக்கவில்லை. அப்படி இடதுசாரிகள் இணைந்து போராடச்சென்றிருந்தால் தமிழ்க் கட்சிகள் இடதுசாரிகளை விழுங்கி ஏப்பமிட்டிருப்பர்.

இடதுசாரிகள் தனியாகத் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகப் போராடப் புறப்பட்டால் அது பலாத்காரமானதாக இருந்தாலும் மேற்கூறிய தமிழர் பாராளுமன்றப் பிரதிநிதிகளே காட்டிக் கொடுத்து பேரினவாத அரசுக்குத் துணை போயிருப்பர். இவைகள் பற்றி இடதுசாரிகளுக்குப் புரிந்திருந்தது.

ஒரு விடயத்தை நாம் மறந்துவிடலாகாது. தந்தை செல்வா சமஷ்டி அமைப்பு முறையைக் கோரிய காலத்திலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பிரதேச சுயாட்சி தமிழருக்கு வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தது. சோவியத் யூனியன், சீனு ஆகிய இரு பெரும் வல்லரசுகள் இலங்கைத் தமிழருக்குப் பிரதேச சுயாட்சி வழங்கப் படவேண்டுமென 1960 களின் முற்பகுதியில் வேண்டுகோள் விடுத்தன. ஆனுல் இது ஒன்றும் தமிழருக்கு பிரமாதமானதாகவோ பத்திரிகைகளில் பத்திபத்தியாக பாராட்டி எழுதக் கூடியதாகவோ இருக்கவில்லை. ஏனென்ருல் தமிழர் விடுதலையின் அர்த்தம் அப்போதைய தமிழ் தலைவர்களைப் பொறுத்தவரை வித்தியாசமானதாகவே இருந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இடதுசாரிகளின் கொள்கை தெளிவானது. அவர்கள் சமூக விடுதலையின் ஒரு அங்கமாக இனப்பிரச்சனையை மட்டுமல்லாது ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டம், பிராந்திய ஏகாதிபத்தியத்துக் கெதிரான போராட்டம் இனங்கள் மதங்களின் சமத்துவத்துக்கானதும் சாதியத்துக்கு எதிரானதுமான போராட்டங்கள் எல்லாவற்றையும் இணைக்கின்ருர்கள். மேற்கூறியவற்றில் எந்தவொன்றையும் புறக்கணித்து ஏதாவது ஒன்றை மட்டும்முன் தள்ளுவதனுல்ஏற்படக் கூடிய விபரீதங்கள் பற்றி நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள்.

இலங்கையின் இடதுசாரிகள் வரலாற்றில் தமிழ் இடதுசாரிகளின் வரலாறு சிறப்பானது. கறைபடியாதது இதன் அர்த்தம் வடபகுதி இடதுசாரிகள் எவரும் அரசுடன் ஒட்டிக் கொண்டு பெரும்பணம் சம்பாதித்தவர்களல்லர். தென்னிலங்கை இடதுசாரிகளில் ட்ரொஸ்கிய வாதிகள் பலர் பணம் சம்பாதித்து அரசுடன் சேர்ந்ததும் தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டது போல் யாழ்ப்பாண இடதுசாரிகள் செய்யவில்லை. சாதிக்கெதிரான போராட்டம் போன்றவற்றில் அளப்பரிய தியாகங்களைச் செய்ததுடன் தமது வாழ்வையே ஒரு கொள்கைக்காக அர்ப்பணித்துள்ளனர். இத்தகைய மனிதர்களின் பெயர்களைக் குறிப்பிட முடியாவிட்டாலும் சில முக்கிய பெயர்களை குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

சிலர் நேரடியாகப் போராட்டத்திலும் சிலர் கொள்கையை வரித்துக் கொண்டதிலும், பலர் கலை இலக்கிய முயற்சிகள் மூலமும் அடையாளம் காணப்படுகின்றனர் இங்கு குறிப்பிடப்படும் பலர் தமக்கள் தத்துவ வேறுபாடுகளைக் கொண்டவர்களாகும்.

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்டர் என்ருல் தெரியாதோர் இல்லை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியராகவிருந்து மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்து ஆயிரக்கணக்கான மாணவர்களை சித்தாந்த தெளிவு பெறச்செய்தவர். ஏ.எஸ்.கனகரத்தினம் என்ற ஆசிரியர் இவர் 1960ல் சாவகச்சேரி தொகுதியில்ல.ச.சக வேட்பாளராயிருந்து மூவாயிரத்துக்கதிகமான வாக்குகளைப் பெற்றவர் பின் கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) பின் கம்யூனிஸ்ட் (பீகிங்) பின் கம்யூனிஸ்ட் பயணித்தவர் மிகத்திறமையான ஆங்கில அறிவு கொண்ட இவர் ஊனமுற்ற காலுடன் நடந்து திரிந்து வேலை செய்வார். "செம்பதாகை" அதன் ஆங்கிலப் பிரதி RED BANNER ஆகிய பத்திரிகைகளில் எழுதியவர். நான் கண்ட மிக நேர்மையான அரசியல்வாதிகளால் இவருக்கும் ஒரு இடமுண்டு.

அடுத்து எஸ்.பொ என அழைக்கப்பட்ட எஸ். பொன்னுத்துரை ஆசிரியர்.தாயகம் வாசகர்களுக்கு இவரைத் தெரியும் இவர் ஸ்தாபன மயப்பட்டிருக்காவிடினும் வீச்சான இலக்கியங்கள் மூலமும் விமர்சனத்துக்குரிய இலக்கியங்கள் மூலமும் பிரபல்யமான இடதுசாரியாவார். அடுத்து மல்லிகை ஆசிரியர் "டொமினிக் ஜீவா" இலக்கியத்தின் மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பாடுபட்டவர்.

தொடரும்

## ஒரு சிறு கதை

Sri Lanka Foundation Institute ல் 1969ல் ஒரு கருத்தரங்கு. பீலிக்ஸ், இலங்கரத்தின, காமினி, கொல்வின், சண்முகதாசன் இன்னும் பல தலைவர்கள் மேடையில் இருக்கிருர்கள். இலங்கரத்தின பேசும் போது சண்முகதாசனைக் கிண்டல் செய்தார். சண்முகதாசன் பாராளுமன்றத்தை நிராகரிப்பது கே.கே.எஸ்ஸில் கேட்டு தோற்றபடியால் தான் என்று ஒரு கதையைக் கூறினுர். 'எனக்கு ஒரு மாமி இருந்தா. அவவை பெண் பார்த்து வருபவர்கள் எல்லாம் வேண்டாம் என்றதைக் கண்ட மாமி தான் திருமணம்செய்வதில்லை என்று கூறத் தொடங்கி விட்டா'.

சண்முகதாசன் பதிலில் 'எனக்கு ஒரு மாமா இருந்தார். அவருக்கு எத்தனையோ கலியாணங்கள் பேசி வந்தது. ஆனுல் அவர் மறுத்து விட்டார். ஏனென்ருல் அவருக்கு போன இடமெல்லாம் பெம்பிளை கிடைச்சுது' (பெம்பிளை என்பது தொழிலாளர்களின் உறவை!)

# நாங்களும் றயிலும்

## மெயில்வாகனம்

புதிதாகப் பறித்த கல்லுப்பரவி சிலுப்பர் போட்டு அதற்கு மேல் தண்டவாளத்தை வைத்து பெண்ணும் பெரிய சக்கிளாணி இறுக்கி சரிபார்த்து முடிய வெள்ளைத்துரைமார் வந்து எல்லாம் சரிபார்த்து முடிஞ்சு நாளைக்கு றயில் வரப்போகிறது. ஊரில சனங்களுக்கு ஒருபுறம் பயம் ஒருபுறம் றயில் எப்பிடியிருக்கும் என்ற ஆர்வம். நாகமுத்தப்பு இந்தக்கதை சொலலேக்கை படுகிழவன். ஆளை பார்த்தால் சுமாராக ஜெயந்தீசன் குட்டிக்கதைக்கு தாயகம் போட்ட படம் மாதிரி தலைதான் வித்தியாசம். அசல் முறிகண்டி சந்தனக்கல்லை தடவின சுகம். றயில் வாற தினத்தில் விடியவிலயிருந்து சாப்பிடாமல் பெடியளையும் அள்ளிக்கொண்டு வந்து றேட்டில் போட்டுக் கொண்டு காவல். றயில் பார்க்கவும் றயில் காட்டவும் என்று. வெள்ளைக்காரர் வந்து அடுத்த நாள் தான் றயில் வரும் என்ற பின்புதான் சுமார் 500 சனம் றேட்டை விட்டு வீட்டை போனதாம். அடுத்த நாளும் அதைவிட ஆர்வத்துடன் நாகமுத்தப்பா பிள்ளையளையும் இழுத்துக் கொண்டு றேட்டுக்கு போய் விட்டாராம். றயிலும் கன்னம் கரேலென்ற நிறத்துடன் கரும்புகையை கக்கியபடி அடைச்ச குரலில் விடாமல் விசிலடிச்சபடி வந்ததுதான் தெரியும்.. தூரத்தில் கண்டதுதான் தாமதம் கையில அம்பிட்ட பிள்ளைகளை அள்ளிக் கொண்டு சனம் சுமார் ஒன்றரை மைல் தூரம் ஓடியே போய் விட்டதாம். இப்படி அடுத்த நாள் றயில் வர முன்னமே ஓட்டம்.

வெள்ளைக்காரர்கள் போய் எல்லாரையும் கூப்பிட்டு கூட்டி வந்து றயில் உங்களை எதுவும் செய்யாது, யாரும் ஓடத் தேவையில்லை யென்று சொல்ல நாகமுத்தப்பா துணிந்து தண்டவாளத்தை விட்டு இறங்கி கலைக்காதோ என்று கேட்டாராம். வெள்ளைக்காரன் சத்தியம் பண்ணினதற்கு பிறகுதான் ஒரு முடிவுக்கு வந்தார்களாம். அடுத்த நாள் அதேநேரம் றயில் பார்க்க றயில் றேட்டுடன் சமாந்தரமாய் போகும் தார் வீதியில் பழையபடி சனம் கூடியது. சொன்னபடி றயில் தூரத்தில் மெதுவாக புகை கக்கியபடி அடைச்ச குரலில் கூவிக் கேட்கிறது. இதென்ன? திடீரென்று நாகமுத்தப்பா கத்தினார் தண்டவாளத்தை விட்டிறங்காதெண்டு சத்தியம் பண்ணினுங்கள், பார் றசில் முன்னுன் அறுத்துக் காண்டு தார் றேட்டில் வருகுது... நாகமுத்தப்பா காட்டிய திசையில தார்றேட்டில ஒன்று வந்து கொண்டுதானிருக்குது.. பழையபடி ஒன்றரை மைல் ஓட்டம்.. ஆனல் உண்மையில் தார் றேட்டில் வந்து றயில் பார்க்கிறதை பார்க்கவும், றயில் றேட்டை கண்காணிக்கவும் மோட்டார் சைக்கிளில் முன் கண்ணுடி கையுறை தலைக்கு ஹெலமெட் எல்லாத்துடனும் கறுப்பு உடையும் போட்டபடி இரண்டுபேர் வந்தார்களாம். இதைப்பார்த்து தான் நாகமுத்தர் றயில் முன்னுன் அறுத்துக்கொண்டு வருகுதென்று ஓடி சனத்தையும் ஓடப்பண்ணினது. இது முதல் முதல் றயில் வந்தபோது எங்களூரில் நடந்த உண்மைக்கதை. நகைசுவையாயிருந்த போதிலும் இந்த சம்பவம் இன்னும் ஒருதடவை எம்மூரில் நடைபெறக் கூடிய சாத்தியம் உண்டு.

# கனடாவின் தலைநகரில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம்

மனித உரிமைகள் தினமான 10.12.93 வெள்ளிக்கிழமை ஒட்டாவாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயம் முன்பாக இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இலங்கையின் ஜனநாயகத்துக்கான அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்களும் குழந்தைகளும் கலந்து கொண்டமை குறிப்பிடக் கூடியது.

தமிழர்கள் கண்முடித்தனமாக கைது செய்யப்படுவதை நிறுத்தும்படியும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும்படியும், இலங்கைத்தமிழர்களின் பிரச்சனையை பயங்கரவாதப் பிரச்சனை என்று கூறியதை கண்டித்தும், தமிழ்மக்கள் மீதான யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் படியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்கள் எழுப்பினர். தமிழ் சிங்களம் ஆங்கில மொழிகளுடன் கூடிய அட்டைகளை தாங்கிய இவர்கள் மும்மொழிகளிலும் கோசமிட்டனர்.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி இவர்கள் இலங்கைத் தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளித்தனர். இதனை அடுத்து கனடா வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கு பொறுப்பான செயலாளரை சந்தித்தும் மகஜர் ஒன்று சமர்ப்பித்துள்ளனர். கனடா பாராளுமன்றம் முன்பாக மூன்று மொழிகளுடன் கூடிய அட்டைகளை தாங்கியபடி ஆர்ப்பாட்டக்காரர்கள் நின்று கொண்டிருந்ததை காணமுடிந்தது.

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள்,
கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள் வாடகைக்குப் பெற...

# A.R.K MARKET

## 31-35 ST.DENNIS DR
## (DON MILLS/EGLINTON)

★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள்,
இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்
★ Frozen seafood

## CD, Audio
## மலிவு விற்பனையில்

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# ஏ.ஆர்.கே மார்க்கட்

## (416) 421 3429

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள்
அனைத்தும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

## Tel:297 9444

## விசேட மலிவு விற்பனை

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.50 | 1.39 |
| குத்தரிசி | 6.50 | 1.39 |
| அரிசிமா | 6.89 | 1.39 |


மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு,
துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
1 கிலோ $ 1.39
5 கிலோ $ 6.50

## THURKAS SUPERMARKET

4080 Sheppard ave E (Kennedy/Sheppard)

சீனி 1.29/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றேசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

மற்றும் ஆட்டிறைச்சி, கோழி,
கோழிக்கால், ஈரல், கிட்னி,
மரக்கறி வகைகள்,
பழவகைகள் அனைத்தும்
மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

## 1960 LAWRENCE AVE EAST

**Car Certification**
**29.99**

## 755 8550

**CALL**
**MIKE or RAJAN**


Exhaust, starter, Shocks, Altenater, Clutch
Radio, Transmission, Air Conditon,
General Repair
*பல வருட அனுபவம் மிக்கவர்கள்*

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**



# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்

### இந்திய இலங்கை உடன்படிக்கையின் முதலாவது ஆண்டு நிறைவு (தொடர்ச்சி)

யூ.எண்.பி. மீது தடை விதிக்கப்பட்டது. யூஎன்பியின் தொழிற் சங்க மத்தியஸ்தானமாகிய ஜாதிக சேவக சங்கம் மீதும் தடை விதிக்கப்பட்டது. கட்சியில் தாம் வகித்து வந்த பதவிகளிலிருந்து இராஜினுமாச்செய்ததாக அறிவிக்கும் பதாகைகளையும் போஸ்டர்களையும் தத்தமது வீடுகளுக்கு அருகாமையில் காட்சிக்கு வைக்குமாறு யூஎண்பி, ஜாதிக சேவக சங்கம் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப் பட்டது. அவ்வாறு அறிவிக்கும் பதாகைகளையும் போஸ்டர்களையும் நாட்டின் பலவேறு பகுதிகளிலும் காணக்கூடியதாகவும் இருந்தது.

சிலருக்கு இராஜினுமா செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சிலர் தமது குடும்பத்தின் சகல அங்கத்தவர்களுடனும் சேர்த்து பச்சையாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இடதுசாரிக் கட்சிகள் மீதும் தடைவிதிக்கப்பட்டது. கட்சி அங்கத்தவர்களுக்கு இராஜினுமாச் செய்யுமாறு கட்டளையிடப்பட்டது.

"மக்கள் வாழ்வுக்கு ஊறு விளைவிக்கும் உள்நாட்டு வெளியீடுகளை தடைசெய்யும் கட்டளையின்" கீழ்,

1. லேக் ஹவுஸ் நிறுவனத்தால் வெளியிடப்படும் சகல பத்திரிகைகளும் வெளியீடுகளும்,

2. ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடான 'அத்த' செய்திப் பத்திரிகைகளும் வெளியீடுகளும்,

3. சகலவிதமான காம சஞ்சிகை பத்திரிகைகளும், அத்துடன் அவ்வகையைச் சார்ந்த பாலியல் வெளியீடுகளும் ஆகிய அனைத்தும் மீதும் தடைவிதிக்கப்பட்டது. இவ் வெளியீடுகளைத் தயாரிப்பது, கட்டுரைகள் வழங்குவது, அச்சடிப்பது, மொத்தமாக வினியோகம் செய்வது, கையில் வைத்திருப்பது ஆகிய செயல்களில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

பெரியவர்கள், சிறியவர்கள், ஏழை பணக்காரர், அதிகாரம் செல்வாக்கு போன்ற எவற்றையுமே கணக்கில் எடுக்காமல் இக்கட்டளைக்கு அடிபணிய வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டது. தேசிய மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் எதிர்ப்பார்ப்பாட்டம் ஹர்த்தால் தவிர சில நாட்களுக்கு ஒரு தடவை பிரதேச ரீதியாக இடம்பெறும் அவ்வாருன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பங்கு பற்ற வேண்டிய நிலையும் அவ் அவ் பிரதேசத்து மக்களுக்கு ஏற்பட்டது.

ஜூலை 29, 30 தேசிய மட்டத்தில் மாபெரும் எதிர்ப்பு இயக்கத்திற்குப் பின்னர் 1988 ஆண்டு செப்டம்பர் 12ம்திகதி வழக்கறிஞர் லியனுராச்சி படுகொலை செய்யப்பட்டதற்கு எதிரான துக்க தினம் தேசிய மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. அன்றைய தினத்தில் கடைகளையும் அலுவலகங்களையும் மூடுமாறும்போக்குவரத்தை நிறுத்தவும் கட்டளையிடப்பட்டதோடு வீடுகளில் வெள்ளை சிகப்பு கொடிகளை ஏற்றுமாறும் கட்டளையிடப்பட்டது. இதற்கு அடுத்ததாக தேசிய மட்டத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக 10 ம் திகதி நடைபெற்ற தேசிய எதிர்ப்பு தினமாகும். இது இரண்டாவதாக இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் விட வெற்றிகரமாக நடை பெற்றது.

இவ் எதிர்ப்பார்ப் பாட்டங்கள் தவிர சுமித் அத்துகோறளை படுகொலை, திரிமா விதான உட்பட மூன்று மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக 1988ம் ஆண்டு நவம்பர் 03ம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது.

1988ம் ஆண்டு அக்டோபரை அடையும்போது மாணவர் போராட்டங்கள் அதன் உச்சகட்டத்திற்கு வளர்ச்சி பெற்றிருந்தன. தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவின்றி மாணவர் போராட்டத்தை மேலும் முன்னெடுப்பது கடினமானது என ஜேவிபி கருதியது. ஜேவிபியின் வழிகாட்டலின் கீழ் கட்டி எழுப்பப்பட்ட தேசிய தொழிலாளர் போராட்ட மத்திய ஸ்தானத்தால் "கொலைகார ஆட்சியை துரத்தியடிக்கும் போராட்டத்திற்கு பொதுவேலைநிறுத்தம் மூலம் உயிர் கொடுப்போம்" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் இவ்வாறு கூறப்படுகிறது. "இலவசக் கல்வியை காப்பதற்கான போராட்டத்தில் ஆரம்பமாகி பிறந்த நாட்டை பாதுகாக்கும் போராட்டம் வரை தமது சில்லுப்பட்டங்களை விரிவுபடுத்திய எமது குழந்தைகளான இலங்கை மாணவர் இயக்கம் இன்றும் போராட்டத்தில் முன்னணியில் உள்ளது.

உண்மையிலேயே அரசாங்கத்தை துரத்தியடிக்கும் போராட்டத்தை பெரும் சக்தியுடன் ஆரம்பித்தது அவர்கள் தான். மாணவர்கள் இதற்காக தமது கல்விக்கான காலத்தையும், பட்டத்தையும் ஈடாக செலுத்தியதுடன் ஆரம்பமாகிய இப்போராட்டம் இன்று உயிர்த்தியாகம் செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளது. தொழிலாளி வர்க்கம் ஒரு நாளைக்கு முன்னராவது போராட்டத்தில் முன்னணி வகிக்க முன் வராததால் அல்லவா இவ்வாறு நிகழ்ந்தது? இம் மாபெரும் தவறுக்காக ஈடு செலுத்தும் தாய் நாட்டின் குழந்தைகள் ஒரு நாளைக்கு ஒருவராவது ஜே.ஆர் ஜெயவர்தனவிடம் சிக்கி உயிர் தியாகம் செய்கின்றனர். அத்தகைய தியாகத்துடன் இடம் பெறும் இம் மாணவர் போராட்டம் அவர்களால் செல்லக் கூடிய அதி உயர்ந்த உச்சத்தை அடைந்து விட்டது.

மாணவர்களை மையமாகக் கொண்டு போராட்டத்தை மேலும் முன்னெடுக்க முடியவில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. போராட்ட களத்திற்கு தொழிலாளர்களையும் இழுக்க வேண்டியுள்ளது.

இழந்தோரும் எங்கள் பிள்ளைகளாக இருந்தால் எப்படி எங்கள் உணர்வு இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்த்தால் பலருக்கு விசயம் வெளிக்கும்.

யாழ் பஸ் நிலையத்தில் பிச்சை எடுத்தவர்களைப் பார்த்து பரிதாபப்பட்ட நிலைமை போய் இப்போது எங்களை நாங்களே பார்த்துப் பரிதாபப்பட வேண்டிய நிலைமை.

★ ★ ★

யாழ்ப்பாணத்தின் பரோபகார சிந்தை எனக்கு நன்றாகத் தெரியும். யாழ்ப்பாண பஸ் நிலையத்தைச் சூழ உள்ள கடைகள் பல உங்களுக்குத் தெரிந்திருக்கும்.. சனிக் கிழமைகளில் சனிபகவானுக்கு கழிக்கிறோம் என்று சொல்லி காகத்திற்கு சாப்பாடு போடுகின்ற இந்த தமிழர்கள் போல.. வெள்ளிக்கிழமைகளில் தர்மம் செய்ய வேண்டும் என்பது இவர்களின் வழமை. தர்ம தானங்கள் மனம் உவந்து கொடுப்பதே அன்றி, கட்டாயத்தின் பேரில் கொடுப்பதல்ல.. ஆனால் ஏதோ நித்திய கடமை போல ஐந்து சதங்களாகப் பணத்தை மாற்றி வைத்து காகங்களுக்கு சோறு போட்டது மாதிரி வருகின்ற பிச்சைக்காரர்களுக்கு சில்லறையைக் கொடுத்து தானம் செய்வார்கள்.

இவர்களில் ஒருவர் பற்றி எனது நண்பன் ஒருவன் சொன்னான்.. ஒரு கடைக்காரர் இரண்டு சதக் குற்றி ஒன்றை வைத்திருப்பாராம். பிச்சைக்காரர் வரும் போது லாச்சியைத் திறந்து அலட்சியமாக அந்த இரண்டு சதத்தை மேசையில் வீசுவாராம். பிச்சைக்காரர்கள் கையில் எடுத்து அதைப் பார்த்ததும் திரும்பவும் மேசையில் எறிய.. பத்திரமாக எடுத்து லாச்சியில் வைப்பாராம். இப்படியே ஒரு இரண்டு சதத்துடன் இவரது வெள்ளிக்கிழமைகள் கழியும்..

இப்போது நடப்பது என்ன? புலிகள் வந்து வரி என்று கழுத்தைப் பிடிக்கிறார்கள்.. மாதாமாதம் வரி கட்டுகிறார்கள். இதுதான் ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் என்பது.

★ ★ ★

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் பற்றி சொன்னேனே.. எழுபதுகளின் நடுப்பகுதி தென்னிந்தி சஞ்சிகை, சினிமா உலகில் புதிய இரத்தம் சேர்த்த பகுதி.. ஜெயகாந்தன், சுஜாதா முதல் கொண்டு பல நாவலாசிரியர்கள் ஒரு புறத்தில்.. பாலச்சந்தர், பாரதிராஜா, மகேந்திரன், பாலு மகேந்திரா, நடிகர்களில் கமல், ரஜனி, இளையராஜாவின் இசையமைப்பு என்று சினிமாக்காரர்கள் ஒரு புறத்தில் தோன்றி இளம் தலைமுறையை ஆட்டிப் படைத்தது. அதுவரைக்கும் சாண்டில்யனும் அகிலனும் வாத்யாரும் சிவாஜியும் என்று குடும்ப படங்களும் இலக்கியங்களும் படைத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் தான் யாழ். பஸ் ஸ்ராண்டில் விளம்பர சேவை தொடங்கியது. காலை மரபுப்படி பக்திப் பாடலுடன் தொடங்கி கிக்கான பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருக்க.. அந்தக் காதல் பின்னணியில் பெல்ஸ் போட்டு ஹிப்பி வளர்த்த கமல்கள் கியூவைப் பிரிக்கின்ற இரும்பு பார்களில் சாய்ந்திருந்தபடி சிறிதேவிகளுக்கு காதல் கணை தொடுப்பர். அதுவும் பின்னேரம் நான்கு மணிக்கு வேலை, பாடசாலை முடிந்து இந்தக் கூட்டங்கள் வரும் போது காதல் பாட்டுக்கள்.. ஆனால் பரதேசிகள் காலையில் மட்டும் சோகப்பாடல்கள் போடுவார்கள். ஏன் தெரியுமா? அப்போது தான் ஆஸ்பத்திரிக்கும் கோட்டுக்கும் போகின்ற மக்கள் வேதனையுடன் போவார்கள். இதனால் சோகப்பாட்டுக்கள்.

இந்த பஸ் ஸ்ராண்டுக்கு ஒரு மூலையில் மலசல கூடம் ஒன்று.. சிறுவயதில் ''இயற்கையின் அழைப்பை' தட்ட முடியாமல் அங்கு போக வேண்டி ஏற்பட்டதன் பின்னர் வாழ்நாளில் பஸ் ஸ்ராண்டில் கிடைக்கும் இயற்கையின் அழைப்பை எப்படியாவது நிராகரிப்பது என்று முடிவு. அப்படி ஒரு நரகம்.

இதற்கு அருகில் சுவீப்டிக்கட் விற்கின்ற கொட்டகை.. ராணித் தியேட்டருக்கு முன்னால்.. சிறிய ஸ்பீக்கரில் 'நாளை மறுதினம் அதிஷ்டம் பார்க்கப்பட இருக்கும்' என்று திரும்பித்திரும்பி ஒன்றையே சொல்லிக்கொண்டிருப்பார். அதைப் போல மறுமூலையில் பூபாலசிங்கம் கடைக்கு முன்னால் பழைய Z மொடல் கார் ஒன்றை நிரந்தரமாக நிறுத்தி வைத்து.. அதற்கு சோடனை செய்து அதிலிருந்து சுவீப் விற்பார்கள்.

அருகில் இருக்கின்ற டீக்கடைகள் மறுபுறத்தில் அந்த நேரத்தில் நகரத்தில் ஓடுகின்ற படங்களின் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருக்கும். இந்த டீக்கடைகளும் எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களின் ஒரு பகுதி.. மேலே பெயர் எழுதிய Sign board இல் அந்த நேரத்து நடிகையின் படம் இருக்கும். உள்ளே அளவான ஒரு கிளாஸ்... டீ மேக்கர் வாசலில் இருப்பார்.. ஏன் உள்ளே இவர்கள் இருப்பதில்லை என்று எனக்குப் புரிவதில்லை. இவர்கள் டீ மேக் பண்ணும் அழகைப் பார்த்து மற்றவர்கள் நுழைய வேண்டும் என்றோ என்னவோ? எனக்குப் பிடித்த டீ மேக்கர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன் இருந்த கடையில் இருந்தவர். ஆள் டீ ஆத்தும் போது டீ கொஞ்ச நேரம் 'எயரில்' நிற்கும்.

கடைக்குள் டீ குடிக்கப் போனால்.. கேட்காமலேயே வடை, றோல், பற்றிஸ் கொண்டு வந்து வைப்பார் சர்வர். இவர் சாரத்தை மடித்துக் கட்டியிருப்பார். கை துடைத்தே இந்த சாரம் ஊத்தையாக இருக்கும். இங்குள்ளது போல இவர்களுக்கு டிப்ஸ் அதிகம் கிடையாது. ஆனாலும் டிப்ஸ் கொடுத்தீர்களானால் அடுத்த முறை போகும் போது பில்லில் குறையப் போட்டுக் கொடுப்பார். கொண்டு வரும் சிற்றுண்டிகள் ரெடிமேட்டாக ஒரு தட்டில் வைக்கப்பட்டிருக்கும். அது எப்படியே எத்தனையோ மேசைகளில் எத்தனையோ கைபட்டும் அலைந்து திரியும். சிலர் தூக்கிப் பார்த்து விட்டு வைத்து விடுவர். சிலர் அந்த மணத்திலேயே

## அ(று)சுவை

சமீபத்தில் கோண்டாவில் பற்றி எழுதிய போது, தலைமையகத்துக்கு அருகில் இருக்கும் ராமகிருஷ்ண மிஷன் பாடசாலை பற்றி எழுதியிருந்தேன். அந்தப் பாடசாலையில் தான் என் மாஜி (ஒருதலை)க் காதலியும் படித்திருந்தாள். சென்ற வார கொழும்புப் பத்திரிகையைப் பார்த்த போது அந்தப் பாடசாலையின் மீது விமானக்குண்டுவீச்சு நடந்து ஆசிரியை ஒருவர் காலிழந்ததாகவும் மாணவர்கள் காயமுற்றதாகவும் படித்தேன். மனது நொந்தது. ஆனால் துயரமான விடயம் என்னவென்றால், 26.11.93 தாயகத்தில் அந்தப் பாடசாலை பற்றி எழுதியிருந்தேன். மறுநாள் குண்டுவீச்சு நடந்திருக்கிறது.

அருகில் உள்ள தலைமையகம் மீது தான் குண்டுவீசி தவறுதலாக அங்கே விழுந்ததோ, அல்லது வேண்டுமென்றே பாடசாலையின் மீது வீசினார்களோ என்னவோ, சென்ற வாரம் அங்கு சென்று மீண்டு வந்த ஒருவர் சொன்னார்.. அந்தப் பகுதியில் உயரமான சிகரம் போல் கட்டி, உச்சியில் மனித உருவம் ஒன்று துப்பாக்கி தூக்கியிருக்கும் தோற்றத்தில் பொம்மை வைக்கப்பட்டிருப்பதாக சொன்னார். தூரத்தில் செல்லும் போதே யாரோ போராளி உண்மையில் ஆயுதம் தாங்கியிருப்பது போல தோற்றமளிக்கிறது என்றார். விமானத்தில் இருந்து தாக்கும் போது இவையெல்லாம் சுலபமாக அடையாளம் காட்டுகின்ற விடயங்கள்.

★ ★ ★

இந்தக் குண்டுவீச்சுக்களில் எத்தனை




# யாழ்ப்பாண Why பாவ மாலை

### அறுஞர் க(ல்)லாநிதி கியூறியஸ் ஜி

அப்பாவிகள் மாண்டு போகிறார்கள்? ஆனால் எனக்கு இன்னொரு பெரிய மர்மம் மூளையைக் குடைந்து கொண்டிருக்கிறது. அடே பூனகரித் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய அன்பு முதல் கொண்டு பல போராளிகள் கொல்லப்பட்டார்கள். காயமடைந்தார்கள். இராணுவத்தில் தளபதிகள் முதல் கொண்டு நூற்றுக்கணக்கில் கொல்லப் பட்டார்கள். ஆனாலும் யுத்த முனையில் இருந்து செய்தி சேகரிக்கின்ற சஞ்சயனுக்கு மட்டும் எந்த கீறலும் விழாது. அதெப்படி? இந்த மர்மம் துலங்க பொட்டம்மானின் உளவுப்பிரிவைத் தான் பிடிக்க வேண்டும். புலிகளுக்குத் தெரியாமல் (?) செய்தி எடுத்து அனுப்பும் சஞ்சயனை இவர்களால் பிடிக்க முடியவில்லை. மாத்தயாவை எப்படித் தான் பிடிக்கப் போறார்களோ? சரி, மாத்தயாவைப் பற்றிய இவ்வளவு விடயமும் வெளியில் போனது தெரிந்தால் இன்னமும் சஞ்சயன் யார் என்பதை தெரியாமல் புலிகள் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? இது யுத்த முனையல்ல. சுத்த(ல்)முனை. தங்களது தகவல்களுக்கு ஒரு நம்பகத் தன்மையைக் கொடுப்பதற்காக புலிகள் செய்யும் முயற்சி இது. புரிந்தால் சரி.

★ ★ ★

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் தவிர, அங்கவீனர்களைக் காண்பது மிகவும் அரிது அந்த நேரத்தில். இரண்டு கால்களும் இழந்த நிலையில் பிச்சை எடுத்தவர் பற்றி சென்ற வாரம் எழுதியிருந்தேன். நேற்று ரொறன்ரோவின் சைனா டவுன் பகுதியில் நேற்றுச் சென்று கொண்டிருந்த போது மனதை நெகிழ வைத்தது இன்னொன்று. இரண்டு கைகளிலும் முழங்கைகளுக்கு கீழ் இல்லாத ஒருவர், பேப்பர் விற்கப்படுகின்ற பெட்டிக்கு அருகில் இருந்து தனது எஞ்சிய கைகளால் அந்த பெட்டியில் மேளம் அடித்தபடி பாடிக் கொண்டு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார்.

எங்கள் யுத்தம் நாட்டில் எத்தனை அங்கவீனர்களை உருவாக்கியிருக்கிறது. செயற்கை அவயவங்களை உருவாக்குகின்ற ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை ஒன்று யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்கிற அளவுக்கு நிலைமை போயிருக்கிறது. இறந்தவர்கள் ஒருபுறத்தில், நடமாடும் பிணங்களாக வாழ்பவர்கள் எத்தனை பேர். மற்றவர்களால் அனுதாபத்துடன் நோக்கப்பட்டு, மற்றவர்களில் தங்கியிருந்து.. என்று மனித வாழ்வு எத்தனை வேதனைகளுக்கு கூடாக தொடர்கிறது. வாழ்வு என்பதன் அர்த்தம் சிதைக்கப்பட்டு மரணம் கூட தியாகமாக்கப்பட்டிருக்கிறதே.

ஒரு தடவை புலிகளின் பெண் போராளி ஒருவர் இரு கைகளையும் இழந்த நிலையைப் பார்த்தேன். தன் எதிர்காலக் கனவுகளைக் கொண்டிருக்கக் கூடிய அந்தப் பெண் இனிமேல் தன் அன்றாட வாழ்வுக்கு இன்னொருவரின் தங்கியிருக்க வேண்டும். எங்களுக்கு என்ன என்ற மனோபாவம் தான் எங்களை இந்த இடத்திற்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. உண்மையிலே இப்படியான துயரங்களுக்கு ஆளாக வேண்டிய காரணம் என்ன? (யாழ்ப்பாண why பாவ மாலை!) எங்களுக்கு என்ன என்ற எங்களின் மனோபாவம் தான். இப்படி இறப்பவர்களும் அங்கங்களை

### முதலாவதாக தாய்நாடு இரண்டாவதாக பாடசாலை என்பதிலிருந்து முதலாவதாக தாய்நாடு இரண்டாவதாக வேலைத்தலத்திற்கு

தொழிலாளர் வர்க்கத்தை போராட்டத்திற்கு இழுத்ததன் மூலமாகவே போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்க்க முடிந்தது. 1988 அக்டோபர் 19ம் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தமே இதன் முதலாவது முயற்சியாகும். 1988 அக்டோபர் 26ம் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் அடையாள வேலை நிறுத்தம் இப் போராட்டத்தின் முன் வளர்ச்சியாகும்.

நவம்பர் மாதத்தை அடையும் போது இவ் எதிர்ப்பார்ப்பாட்டம் பெரும் பாயச்சலில் வளர்ந்தது. பெரும் எதிர்ப்பு இயக்கங்கள் தினமும் நடைபெறும் நிலமை உருவாகியது. நாட்டை ஆள்வது யூஎன்பி அரசாங்கமா ஜேவிபி அரசாங்கமா என்னும் கேள்வி பிரபல்யமாக எழுந்தது. நாடு பூரணமாக அராஜக நிலைமைக்கே பயணம் செய்தது. போக்குவரத்து நிறுத்தப்பட்டது. ஜே. வி.பியின் கட்டளைகளை அலட்சியம் செய்த பஸ்வண்டிச் சாரதிகள் கொல்லப்பட்டனர். சகல தொழிற்சாலைகளிலும் சப்புஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிறுவனத்திலும் வேலைகள் நிறுத்தப்பட்டன. கடைகள் மூடப்பட்டன. உணவு, எரிபொருள் பற்றுக்குறை உக்கிரம் அடைந்தது. மரங்களை வெட்டி குறுக்கே போட்டு பாதைகளில் தடை ஏற்படுத்தப்பட்டது. ஆஸ்ப்பத்திரிகள் கூட செயழிழந்தன. தீவு பூராவும் பரவிய பெரும் ஆர்ப்பாட்டங்கள் பல நாட்களுக்கு தொடர்ந்தன. மக்களின் அன்றுட வாழ்க்கை பெரும் சிக்கலுக்குள்ளாகியது.

"இந்திய இலங்கை உடன்படிக்கை, மாகாண சபைச் சட்டம், மாகாண சபை, அரசாங்கத்தின் சார்பில் செய்யப்பட்ட கொலையாளிகளையும், கிரிமினல்களையும் பாதுகாக்கும் சட்டம், தேசபக்த பௌத்த மத குருமாரையும் பிரஜைகளையும் கைது செய்தல், சித்திரவதை செய்தல் அரசாங்க நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தல், வாழ்க்கைக்கு போதுமான அளவு சம்பளம் வழங்காமை. காசுக்காக பட்டங்களை விற்பது, பல்கலைக் கழகங்களை மூடியது, மாணவர்களை அடக்குவது, இந்திய ஏகாதிபத்தியத்தின் பண முடிச்சிலிருந்து உபசரணை பெற்று அவர்களின் கட்டளைகளை ஏற்று எமது தாய்நாட்டை இந்திய காலனியாக மாற்றும் கேடு கெட்ட முயற்சிக்கும் அவ்வாறு செயல்படுபவர்களுக்கும், குண்டர்களைப் பாவித்து மோசடி செய்தல், ஜேவிபி மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விடல், ஜனாதிபதி தொடர்ந்தும் பதவி வகித்தல், பாராளுமன்றத்தை கலைக்காதது" ஆகிய காரணங்களுக்காகவே எதிர்ப்பார்ப் பாட்டங்கள் நடாத்தப் பெற்றன. இறுதியாக ஜே.ஆர் ஜெயவர்தனவின் ஆட்சியைக் கவிழ்த்து "தேசிய விடுதலை ஐக்கிய முன்னணி" யின் கீழ் "தேச விடுதலை அரசாங்கம்" ஒன்றை உருவாக்குவதற்காகும்.

### தேசவிடுதலை அரசாங்கத்தை அமைப்பதற்கான "ஐக்கிய முன்னணியின் தேசிய வேலைத் திட்டம்"

ஜேவிபி யினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பரந்த எதிர்ப்பு இயக்கத்தின் இறுதி இலக்கு தேச விடுதலை அரசாங்கத்தை அமைப்பதாகும். இதற்கான அவர்களது வேலைத்திட்டம் "ஐக்கிய முன்னணியின் தேசத்தை விடுவிப்பதற்கான வேலைத் திட்டம்" என்னும் பெயரில் 1988 செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டது. 49 சரத்துக்களைக் கொண்ட இவ்வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது இலங்கை இந்தியாவின் காலனியாக மாறுவதை தடுத்தல், அதாவது எமது தேசத்தின் இறைமையையும், பூமியின் தொடர்பு முறியாமையையும், மக்களின் இறைமையையும், ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும், அடிப்படை மனித உரிமைகளையும், சமத்துவத்தையும், இனத்துவ ஒருமைப்பாட்டையும் உறுதிப படுத்தலே இவ் வேலைத்திட்டத்தை சமர்ப்பித்ததன் பிரதான நோக்கம் என கூறப்பட்டது.

இலங்கை மீண்டும் காலனி நாடாக மாறும் அபாயத்திற்கு முகங் கொடுப்பதாகவும், சுய நலமும் பதவி வேட்கையும் துரோகத்தனமும் கொண்ட ஏகாதிபத்திய சார்பு கொலைகாரன் ஜே.ஆர். ஜெயவர்தனவே எமது தந்தையர் நாடு முகங் கொடுக்கும் இவ் இடர்களுக்கு பொறுப்பாளி எனவும் இலங்கை முகங்கொடுக்கும் தேசிய நெருக்கடிகளிலிருந்து கரையேறு வதற்கு சட்டவிரோத, துரோக, கொலைகார பாசிச ஜெயவர்தன தொண்டமான் ஆட்சியை உடனடியாக கவிழ்க்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. மேலும் இதற்காக அனைத்து தேசபக்த சக்திகளும் உறுதியான செயற் திட்டத்துடன் கூடிய ஐக்கிய முன்னணியாக உருப்பெற வேண்டும் எனவும் மக்களை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்ட இத் தேசிய விடுதலை ஐக்கிய முன்னணியின் கீழ் தேசிய விடுதலை அரசாங்கத்தை உருவாக்க மக்களிடமிருந்து வரம் பெற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

சட்ட விரோத அரசாங்கத்தை இராஜினாமாச் செய்விக்கவும் ஜனாதிபதி பதவியை வெற்றிடமாக்கவும், நடுநிலமையான காபந்து அரசாங்கத்தை நியமிக்கவும் மாகாண சபைகளை கலைக்கவும், ஜெயவர்தன-ராஜீவ் உடன்படிக்கையை இரத்துச் செய்யவும், இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்பவும், மக்கள் மீதான அடக்கு முறைகளை நிறுத்தவும் கட்சியின் இராணுவங்களுக்கு தடை விதிக்கவும் கட்சி அங்கத்தவர்களுக்கும் ஐக்கிய சோஷலிச முன்னணிக்கும் வழங்கப்பட்டுள்ள ஆயுதங்களை திரும்பப் பெறவும் காபந்து அரசாங்கத்தின் கீழ் ஜனாதிபதி தேர்தல் பொதுத் தேர்தல் நடாத்தவும் கோரவேண்டும் எனவும் அதில் கூறப்பட்டிருந்தது.

அவ்வாறுன தேர்தலில் தேசிய விடுதலை ஐக்கிய முன்னணியால் தேசிய விடுதலை அரசாங்கத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமைப்பதற்கு மக்களிடம் வரம் கோரவேண்டும் எனவும் கூறப்பட்டதோடு அவ் அரசாங்கத்தால் நிறைவேற்ற வேண்டிய அரசியல் பொருளாதார இனத்துவ தொழிலாளர், உழைப்பாளர், விவசாய கல்வி கருத்தமைப்பு பாதுகாப்பு வெளிவிவகாரம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய கோரிக்கைகளும் காணப்பட்டன.

தொடரும்

டீயைக் குடிப்பர். சில விண்ணர்கள் சிறு நுண்ணிய துண்டைப் பிய்ந்து சாப்பிடுவர்.

வெயில் காலத்தில் சர்பத் இருக்கும். உள்ளே கசகசா போட்டிருப்பார்கள். அந்த கசகசா என்ன பொருளோ? இந்த சர்பத்தில் போடுவதற்கான ஐஸ் கட்டிகள் தெருவோரமாக மரத்தூள் நிறைந்த பெட்டிக்குள் இருக்கும். அதை நீரில் கழுவி கிளாஸில் போடுவார்கள். இந்தக் கடைகளில் running water என்ற சாமானே இருக்காது. அருகில் உள்ள பைப்பில் பிடித்து அண்டாவை நிறைத்திருப்பார்கள். பச்சைத் தண்ணீர் வேண்டும் என்றால் பின்னே போய் அண்டாவுக்கு அருகில் உள்ள தகரக் குவளையால் அள்ளிக் குடிக்க வேண்டும். அண்டாவில் சில நேரங்களில் புழுக்கள் பிடித்திருக்கும். முதல் கிளாஸ் கழுவிய பாத்திரத்திற்குள்ளே உள்ள நீரில் தான் இரண்டாவது கிளாஸ் கழுவப்படும். முடிவில் இந்த கழிவு நீர் ஆட்கள் போகின்ற நடுரோட்டில் ஊற்றப்படும்.

★ ★ ★

இதை விட சாப்பாட்டுக் கடைகள் தான் தனிரசனை மிக்கவை. மலாயன் கபே, அம்பாள் கபே என்று. இவற்றிலெல்லாம் இடியப்பம் சாப்பிடுவது என்றால் கியூறியஸிற்கு ஒரே குஷி.. ஒரு தடவை சாப்பிட்ட குறையில் அருகில் போனவரைப் பார்த்து 'அண்ணை, மூண்டு இடியப்பம்' என்றதும் முறைத்துப் பார்த்த விட்டு 'ஏய், நானும் இங்க சாப்பிட வந்தவன் தான்' என்றார். இந்த கடைகளில் கல்லாப் பெட்டி அமைப்பு ஒரே மாதிரி... கல்லாமேசையின் மேல் வாழைக்குலை தொங்கும். மேசையைச் சுற்றி பெரிய போத்தல்களில் ரொபிக்கள் இருக்கும் வகைவகையாக.. இந்தப் போத்தல்களுக்கு இடையில விற்பனைக்காக பேப்பர்கள் ஒவ்வொன்றாக செருகப்பட்டிருக்கும். சில சஞ்சிகைகள் மேலே கொடியில் துணி காயப் போட்டமாதிரி இருக்கும். அவருக்கு எதிரே மறுபுறத்தில் கண்ணாடிப்பெட்டி.. அதனுள் இந்த வடை,வாய்ப்பன் முதலான பொருட்கள்.. வெள்ளையன் disposable foam tray கண்டுபிடிக்க முன் தோன்றிய தமிழர் கண்டுபிடித்த வாழை இலை... அதைக் கொண்டு வைத்து வைத்ததும் வெள்ளிச் செம்பில தண்ணீர் கொண்டு வந்து ஏதோ மணமக்களுக்கு பன்னீர் தெளித்தமாதிரி தெளிப்பார்கள். சில கடைகளில் காய்ந்த வாழை மட்டையை ஈக்கிலால் சேர்த்துப் பொருத்தி இடியப்பம் போடுவார்கள். ஆஸ்பத்திரிக்கு முன்னால் இருக்கின்ற கோப்பிரட்டிவ் ஸ்டோர் கடைக்கு அருகில் உள்ள கடையொன்றில் கியூறியஸ் சிறுவயதில் சாப்பிடப் போனபோது, இந்த வாழைமடலில் சாப்பாடு போட்டார்கள். இந்த வாழை மடலுக்கால் ஒரு குட்டி மட்டத்தேள் ஓடியது. அங்கால இங்கால ஒரு பார்வை பார்த்து விட்டு அதை தூக்கி நசித்து விட்டு கியூறியஸின் சாப்பாடு தொடர்ந்தது. அடே.. வாழைத்தோட்டத்தில் பாம்பு தொடக்கம் சகல சீவராசிகளையும் கண்ட கியூறியஸிற்கு இது பெரிய விசயமா?

இடியப்பம், தோசை கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்து வரும். சம்பல பிழிந்த தேங்காய்ப்பூவில் றிசைக்கிள் செய்யப்பட்டிருக்கும். அதில கொஞ்சம் மிளகு போட கிக்காக இருக்கும். சாம்பாறுக்குள் சந்தையில் கழிக்கப்பட்ட பொருட்கள் யாவும் இருக்கும். முதல் நாள் மிஞ்சிய சோறு தோசையாகியிருக்கும். அல்லது இட்லி. இவற்றில் டீ மேக்கர் உள்ளே இருப்பார். அந்த சனசந்தடிக்குள்ளும் சர்வர் டீக்கு போடுகின்ற சத்தம் டீ மேக்கருக்கு கேட்கும். அவரும் அந்த frequency யில் டியூன் பண்ணி விட்டு நிற்பார். அவருக்கு வேறெந்த சத்தமும் கேட்காது.

வெள்ளிக்கிழமைகளில ஹவுஸ் புல்.. அடித்து விலத்த முடியாது. முதலாளி கல்லாவில் சந்தனப்பொட்டு, விபூதி சகிதம் வெற்றிலை சப்பிக்கொண்டிருப்பார். மேசையில் சந்தனமும் ஜவ்வாதும் சேர்ந்த மணம் கமழ.. பால், பாயாசத்துடன் சோறு, ரசம் என்று ஜாலியாக இருக்கும். கியூறியஸும் அவனது மூத்த அண்ணனும் ஒன்றாக லண்டன் பரீட்சை ஒன்றுக்கு படித்த போது.... இது என் நண்பர்களுக்கு ஆச்சரியம்.. இருவருக்கும் நிரம்ப வயது வித்தியாசம்.... இருந்தாலும் நானும் அண்ணனும் ஒன்றாகவே சைக்கிள் பயணம்.. வகுப்பிலும் ஒன்றாகவே இருப்போம். நான் சைக்கிளில் டபிள் ஓட்டிச் செல்வேன். அவர் எனக்கு மலாயன் கபேயில் சாப்பாடு வாங்கித் தருவார். இது தான் ஒப்பந்தம்...

அங்கே சாம்பார் அண்டாக்கள் கழுவப்படாமல் round the clock சாம்பார் உள்ளேயும் வெளியேயும் போய் கொண்டிருக்கும்.. ஓடுகின்ற கற்களில் பாசி பிடிப்பதில்லை என்பதை அறிந்திருப்பார்களோ என்னவோ..

உள்ளே கைகழுவும் இடத்திற்கு போனால்... அடுத்த முறை சாப்பிட மனம் வராது. இலைகள் பரவி, சாப்பாடு சிந்திப் போய் இருக்கும். ஆனால் இதெல்லாம் சுடலை ஞானம் மாதிரி. . அடுத்த முறை அது மறந்து போகும். கொல்லைப்புறம் மாதிரிப் பகுதியில் பெரிய தொட்டிக்குள் இலைகள் வீசப்படும். கைகழுவும் இடத்தில் தண்ணீர் குடிக்க மனம் வராது. வந்து மேசையில் இருக்கும் குவளையில் உள்ள நீரைத்தான் குடிக்கலாம். ஆனாலும் இரண்டுமே ஒரே தண்ணீர் தான்.

இந்த தொட்டியைச் சுற்றி சொறி நாய்களும் காகங்களும் தான் நிற்கும். சுந்தர ராமசாமியின் கதை மாதிரி பொறுக்கி வர்க்கம் என்று யாரையும் நான் கண்டதில்லை. (பொறுக்கி பற்றி எழுத நிறையவே இருக்கிறது!)

சர்வர் பில்லைத் தர.. கல்லாவில் கொடுத்தால் அவர் அதை ஒரு கம்பியில் குற்றி வைப்பார். ரொம்பப் பெரிய பில தான்.. முத்திரை சைஸில இருக்கும். போத்தலுக்குள் இருக்கும் சுற்றிய பீடாவுடன் வெளியில் வந்தால் அதே பஸ் ஸ்ராண்ட், அதே யாழ்ப்பாணம்.

*மாத்தயா..*

புரிந்திருக்கும்.

இன்று மாத்தயாவின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கு இன்னொரு நோக்கமும் இருக்கிறது. இதுவரையும் புலிகள் செய்த தவறுகள் அனைத்தையும் மாத்தயாவின் தலையில் இலகுவாகச் சுமத்தி விட முடியும். அத்துடன் பகிரங்கமாக தனது தவறுகளை ஒப்புக்கொள்வதற்கு அவரை சம்மதிக்கச் செய்யலாம். காரணம், மாத்தயாவிற்கு குடும்பம் இருப்பது தான். குடும்பத்திற்கு ஆபத்து நேரக்கூடாது என்பதற்காக புலிகளுடன் சமரச ஒப்பந்தம் ஒன்றைச் செய்தபின்னர் மாத்தயா தனது 'தவறுகளை' ஒப்புக்கொண்டு மரண தண்டனைக்கு தயாராகலாம்.

மாத்தயா உண்மையில் இயக்கத்தைப் பிளக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் தனக்கு பலம் சேர்க்கும் முயற்சியில் தான் இறங்கியிருப்பார். தன்னைக் கைது செய்தால் எதிர்த்து சண்டையிட வேண்டாம் என்று மாத்தயா கேட்டுக் கொண்டார் என்றால் அது தோல்வியில் முடியும் என்பதால் என்று மட்டும் கருதி விட முடியாது. எதிரியிடம் சரணடைவதை விட இறப்பதே மேல் என்று கூறும் இயக்கத்தின் தலைவர் ஒருவர் தன்னை எதிரியாக கருதும் போது தன் உயிரை அழித்துக் கொள்ளவே விரும்புவார். இந்தியப் படையின் பாதுகாப்பில் இருந்த போராளிகளுக்கு சயனைட் கொடுத்து தற்கொலை செய்ய வைத்தவர் மாத்தயா. அப்படியானவர் தன்னைக் கைது செய்யும்போது சயனைட் அருந்தியிருக்க முடியுமே?

இவ்வாறு மாத்தயாவின் தலையில் சகல தவறுகளையும் கட்டி விட்டு இயக்கம் தனது 'புனிதமான' போராட்டத்தை தொடரலாம். தலைவரும் இயக்கமும் மாசற்றவர்கள் என்ற மாயை ஏற்படுத்த முடியும். அப்போது மாத்தயா இருந்த போதும் இயக்கம் புனிதமானதாக இருந்தது என்றே நம்பினோமே என்று யாரும் கேட்கப் போவதில்லை. சர்வாதிகார அரசுகளும் ஆட்சி கவிழ்த்தவர்களும் இவ்வாறு சிலர் தலையில் தவறுகளைக் கட்டியதை உலகம் கண்டிருக்கிறது. மாத்தயாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

மாத்தயாவிற்கு மரண தண்டனை அளிக்கப்படும் போது அதற்கான எதிர்ப்புணர்வுகள் தோன்றுவண்ணம் தற்போது வதந்திகள் கிளப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மாத்தயாவின் நண்பர்களும் கச்சிதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மக்களைத் தயார் நிலையில் வைத்திருந்த பின்னர் தண்டனை அளிக்கும்போது எந்த பாதிப்பும் ஏற்படாது.

புலிகளின் தலைமை எப்போதுமே தனக்கு ஆபத்தாக இருப்பவர்கள் என்று கருதியவர்களை திட்டமிட்டே அழித்து வந்திருக்கிறது. கிட்டுவைக்கொண்டு சிறி சபாரத்தினத்தை, மாத்தயாவைக் கொண்டு கிட்டுவை, பொட்டம்மானைக் கொண்டு மாத்தயாவை.. அடுத்த மாவீரர் தினத்திற்கு முன்னர் பொட்டம்மான் மீது பால்ராஜ் விசாரணை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால் ஆச்சரியத்துக்குரிய விடயம். ஒருகாலத்தில் மாத்தயாவை தூக்கிக் கொண்டாடிய புலிகளின் ஆதரவாளர்கள் இந்த வதந்திகளுடன் மாத்தயாவைத் தூர எறிந்து விட்டார்கள். நாளை பொட்டம்மான் தலைவர் மீது விசாரணை நடத்தினாலும் அப்போது தலைவரைக் கூட கைகழுவ இவர்கள் தயங்க மாட்டார்கள். மற்ற இயக்கத்தினரைக் கொல்லும் போது 'துரோகிகளுக்கு மரண தண்டனை' என்று அதை நியாயப்படுத்தியவர்கள் இன்று மாத்தயாவுக்கே மரண தண்டனை என்றதும் அவரையும் துரோகி என்று கூறி அதை நியாயப்படுத்தப் போகிறார்களா?

புலிகளின் தலைமை எப்போதுமே தனக்கு ஆபத்தாக இருப்பவர்கள் என்று கருதியவர்களை திட்டமிட்டே அழித்து வந்திருக்கிறது. கிட்டுவைக்கொண்டு சிறி சபாரத்தினத்தை, மாத்தயாவைக் கொண்டு கிட்டுவை, பொட்டம்மானைக் கொண்டு மாத்தயாவை.. அடுத்த மாவீரர் தினத்திற்கு முன்னர் பொட்டம்மான் மீது பால்ராஜ் விசாரணை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.
இந்தியச்சதிக்கு மாத்தயா பலியாகி விட்டாரா? அல்லது பொட்டம்மானின் சதிக்கு தலைவர் பலியாகி விட்டாரா? என்பது பொட்டம்மான் பற்றிய விசாரணைகளில் தெரிய வரலாம்.

This newspaper
is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650.3216
@Compuserve.com

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினால்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்ளின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**தாயகம்**
**சந்தா விபரம்**

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள்**
**ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

## மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

## SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

## P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்